# காக்கும் இமை நானுனக்கு



ரமணிசந்திரன்

# காக்கும் இமை நானுனக்கு

ரமணிசந்திரன்

# அத்தியாயம் -1

எப்போதும் போலவே. அந்தப் பெரிய கடைக்குள் நுழையும்போது. நளினியின் மனதில் ஒரு பெருமிதம் எட்டிப் பார்த்தது,!

“உன்னதம்”,!

இந்தப் பெரிய பல்பொருள் அங்காடியில் அவள் வேலை செய்கிறாள்,!

அகன்ற சலவைக்கல் படிக்கட்டுகளுடன் கம்பீரமாய் மூன்று மாடிக்கட்டிடம் ,!எத்தனை கோடி பெறுமோ?

படியேறும்போதே. ஓர் அரண்மனைக்குள் அடியெடுத்து வைக்கும் பிரமிப்பு,!

எண்ணம் தொடரும்போதே. அவளது மனதுக்குள் நெருஞ்சியாய் உறுத்தலும் தொடங்கிவிட்டது,!

தோற்றத்தில் மட்டும் அந்தக் கட்டிடம் அரண்மனையாக இருக்கவில்லை,!உள்ளே விற்பனைக்கு வைக்கப் பட்டிருக்கும் பொருட்களும். அரண்மனைவாசிகளுக்கு ஏற்றவைதான்,!ஏன்? அவர்கள் மட்டுமேதான் வாங்கக் கூடியவையும் கூட,!

தரத்தால் மட்டும் அல்ல,!விலையும் அப்படித்தான்,!

துணிகளா? மீட்டர் எண்ணூறு ஆயிரம் எல்லாம் சர்வ சாதாரணம்,! ஐநூறுக்குக் குறைவாக ஒன்றுமே கிடையாது,!

அதேபோல. மரச் சாமான்கள் பகுதி ஒன்று உண்டு,!சோஃபா செட் ஒரு லட்சம் என்பார்கள்,!என்ன?. அங்கங்கே தந்தம் இழைத்திருக்கும்,!நல்ல வைரம் பாய்ந்த தேக்காக இருக்கும்,!

அசல் நவரத்தினங்கள் பதித்த நகைகள்,!வைரமிழைத்த கைக்கடிகாரங்கள்,!அவற்றிலும். செய்கூலியே ஆளைச் சாப்பிட்டுவிடும்,!கூலி எவ்வளவு. சேதாரம் எவ்வளவு என்று கணக்குப் பார்க்கிறவர்களால். இங்கே வாங்க முடியாது,!

அதனாலேயே. சாதாரண மக்கள். இந்தக் கடையின் பக்கமே வருவதில்லை,!அப்படியே வந்தாலும். இந்தப் பணக்காரச் சீமான்கள் வாங்கும் பொருட்கள் எல்லாம் எப்படி இருக்கும் என்று பார்த்துப்

போவதற்காகத்தான்,!அதுவும் அபூர்வமாகத்தான்,!ஏனெனில். வாங்க இயலாத பொருட்களைப் பார்த்து. ஏக்கப் பெருமூச்சு விட எத்தனை பேருக்குப் பிடிக்கும்?

யாரும் அறியாமல் தட்டிக்கொண்டு போய்விடும் திட்டத்துடன் வருவோரும் உண்டு,!ஆனால். அங்கங்கே சாதாரண உடையில் காவலுக்கு ஆட்கள் இருந்ததால். அது பலித்தது இல்லை,!அதுவரை,!

அந்தக் காலத்தில். பெரிய பெரிய பிரபுக்கள். வெள்ளைக்காரத் துரைகள். ராஜ குடும்பத்தார். ஜமீன்தார்கள் போன்றோருக்கு ஏற்ற பொருட்களை. ஒரே இடத்தில் வாங்குவதற்கு வசதி செய்யும் பொருட்டு. சில மாதங்களுக்கு முன் வரை இதை நடத்திய பெரியம்மாவுடைய மாமனார். இந்த அங்காடியைத் தொடங்கியதாகச் சொல்லுவார்கள்,!

இந்தத் தரம் குறையாமல் காப்பதுதான் முக்கியக் கொள்கையாக இருந்தது,!

எனவே. அங்கொருவர். இங்கொருவர் தவிர. இந்தக் கடையில் வாடிக்கையாளர் அலைமோதி. நளினி பார்த்ததே கிடையாது,!

குறைந்த பட்சமாக. அவள் இங்கே வேலைக்குச் சேர்ந்து. இந்த மூன்று மாத காலமாக,!

அதைப் பற்றி. அங்கே யாரும் கவலைப்படுவதும் கிடையாது,!

தளத்துக்கு ஒருவராக. மூன்று தளங்களுக்கும். மூன்று வயதான நிர்வாகிகள்,!ரொம்ப காலமாக. இங்கேயே பணி புரிகிறார்களாம்,!

விற்பனை. இருப்புக் கணக்கு எடுப்பதும். புதிய பொருட்களுக்கு “ஆர்டர்” கொடுப்பதும். அவர்களது பொறுப்பு,!

அவர்களிடம். நளினி மோதிப் பார்த்திருக்கிறாள்,!அதைவிடக் கற்பாறையில் மோதினால். ஏதோ. பாறை கொஞ்சம் அசையக் கூடும் என்று. புரிந்தும் இருக்கிறாள்,!

புருங்களைத் தூக்கி வைத்துக்கொண்டு. மூக்கு நுனியில் நிற்கும் கண்ணாடி வழியே. ஒரு தூசியைப் போலப் பார்த்து. “இந்தக் கடையின் பாரம்பரியம் பற்றிச் சின்னப் பெண். உனக்கு என்ன தெரியும்? எழுபது ஆண்டுகளாக. எனக்குத் தெரியவே நாற்பத்தைந்து வருஷங்களாக மதிப்பும் மரியாதையுமாக நடத்தப்படுகிற கடை,!

பெரிய பெரிய கோடீசுவரர்கள் காரில் வந்து இறங்கி. மறு விலை கேளாமல் வாங்கிப் போகிற இடம்,!இதில் போய். உன் ஐந்துரூபாய். பத்துரூபாய்ப் பொருட்களைக் கொட்டிக் கேவலப்படுத்துவதா? பெரியம்மா மட்டும் இருந்து. அவர்கள் காதில் உன் பேச்சும் விழுந்திருக்கட்டும்,. உன்னை அப்போதே கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியிருப்பார்கள்,!முதலில். வேலை பார்க்கக் கூட. நீ இங்கே உள்ளே நுழைநச்திருக்க முடியுமா? இப்போதுதான் என்ன? உன்னை. நாங்களே வெளியேற்றி விடுவோம்,!என்னமோ. புதுசாய் வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்களே என்று விட்டு வைத்திருக்கிறோம்,!“ என்று மிரட்டுவார் ஒருவர்,!

“உன் வேலை என்ன? அங்கங்கே. தளத்துக்குத் தளம். பொருட்களைக் கவர்ச்சிகரமாகக்

கண்ணுக்கு அழகாக அடுக்கி வைப்பதுதானே? அத்தோடு நிறுத்திக்கொள்,!அதற்குமேல். அதிகப்பிரசங்கித்தனம் செய்யாமல். வாயை மூடிக்கொண்டிரு,!மீறினால். வேலைக்கே வேட்டு வைத்துவிடுவோம்,!“ என்பார் அடுத்தவர்,!

“பெரியம்மா பார்த்து வைத்த ஆட்கள் நாங்கள்,!எங்களுக்கு வேலை தெரியாது என்று. நீ வந்து சொல்கிறாயா? வயதுக்கு மரியாதை கொடுக்கக் கூடத் தெரியவில்லையே,!” என்று. ஆளாளாளுக்கு அவளை மிரட்டினார்களே தவிர. வளாகத்தில் உள்ள கடைப் பொருட்களின் விற்பனைப் பெருக்கத்துக்காக. உருப்படியாக எதையும் செய்யக் காணோம்,!

இந்த அழகில். மதிய உணவுக்காக மூடுவது வேறு,!பன்னிரண்டு மணிக்கு எடுத்து வைக்கத் தொடங்கினால். மீண்டும் கடை திறக்க நாலு மணி ஆகும்,!

வாடிக்கையாளர்கள் வீட்டில் சாப்பிட்டுத் தூங்கி எழுந்து. கடை கண்ணிக்குக் கிளம்பி வர. அவ்வளவு நேரமேனும் ஆகாதா என்று கேள்வி வேறு,!

தூக்கம் தேவைப்படுவது. கடைக்கு வரக் கூடிய வாடிக்கையாளர்களுக்கு அல்ல,. வளாகத்தின் முதிய நிர்வாகிகளுக்குத்தான் என்பது. நளினியின் அபிப்பிராயம்,!

ஆனால். யாரிடம் முறையிடுவது?

அவளுக்கும் அலுத்துவிட்டது,!

எப்படியோ போகிறார்கள்,!

இந்த வளாகத்துடைய உரிமையாளர்கள். பல தலைமுறைகளாகப் பெரிய பணக்காரர்கள்,!எங்கெங்கோ பங்களாக்கள். சொத்துகள். பெரிய வருமானங்கள் உண்டு என்று கேள்வி,!

இந்தக் கடையிலிருந்து வந்து. நிறைய வேண்டியதில்லை,. சும்மா ஒரு கௌரவத்துக்காக நடத்துகிறார்கள் என்றும்,!

அப்புறமென்ன?

விற்பனைப் பகுதிப் பொறுப்பாளரிடமிருந்து. கணக்குச் சொல்லி எடுத்த பொருட்களுக்குக் கையெழுத்திட்டுவிட்டுப் பொருட்களோடு வந்து. அவற்றை இயன்றவரை கவர்ச்சிகரமாகக் கண்ணாடித் தட்டுகளில் அடுக்கத் தொடங்கியபோது. வளாகத்துடைய காவல் பொறுப்பாளரான பூவலிங்கம் வந்தார்,

“என்னம்மா. நீ அடுக்குகிறதைப் பார்த்து. கண்ணாடி அலமாரியோடு தந்து விடுங்கள் என்று கேட்டுவிடுவார்கள் போல இருக்கிறதே,!” என்று கிண்டலடித்துவிட்டு. “ஜாக்கிரதை அம்மா,! எந்தப் பொருளும் தவறிவிடாமல் பார்த்துக் கொள்,!“ என்று எச்சரித்துவிட்டுப் போனார்,!

ஆமாம்,!என்று அவளுக்கும் அலுப்பாகத்தான் இருந்தது,!

ஏதோ செய்வன திருந்தச் செய்வது என்ற பழக்கத்தில் செய்துகொண்டிருந்தாளே தவிர. நளினிக்கு. அவளது வேலையில் ஈடுபாடு கொஞ்சம் குறைந்துதான் போயிற்று எனலாம்,!

கொஞ்சமென்ன? ரொம்பவே,!

எவ்வளவு காலம்தான். இருப்பதையே மாற்றி மாற்றி அமைத்துக் “குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டி”ருப்பது?

விற்க. விற்க.  விதம் விதமாகப் பொருட்களைப் புதிது புதிதாக அன்றைய நாகரீகத்துக்கு ஏற்ப வாங்கி. வாங்கி வைத்தால். அவளும் புதிது புதிதாகக் கண்ணைக் கவரும்படி. விதம் விதமாக. அடுக்க முடியும்,!

அதுவும். இன்றைய நாகரீகத்துக்கு ஏற்ப என்றால். எண்ணில்

அடங்காத வகைகள் எத்தனையோ கிடைக்கும்,!அவைகளை வாங்கிக் கொடுத்தால் ......

ஆனால். அதெங்கே. இங்கே நடக்கும்? அப்புறம். மழை கொட்டோ கொட்டென்று கொட்டி. ஊரெல்லாம் வெள்ளத்தில் முழுகிப் போய்விடாதா?

எண்ணத்திற்கு ஏற்ப. சிறு ஏளனத்துடன் தோளைக் குலுக்கியவாறு திரும்பியபோதுதான். நளினி முதலில் அவனைப் பார்த்தது,!

நல்ல உயரம்,!உயரத்துக்குச் சற்றே மெலிவுதான் என்றாலும். உடல் கட்டில். நடையில் உறுதி தெரிந்தது,!

அவள் அடிக்கடி ஆசையாக ஏறி இறங்கும் . அழகிய அரண்மனைப் படிக்கட்டுகளின் வழியே வராமல். “லிஃப்டி”ன் கதவைத் திறந்து வெளியே வந்துகொண்டிருந்தான்,!

அவன் மட்டுமல்ல,!அவனோடு. இன்னும் சிலரும் ,மொத்தம் மூன்று பேர்,!

அவனுக்கு முன்னும் பின்னுமாக வந்த. மற்ற இரண்டு பேரும். பந்தாவாகப் பாக்கெட்டுக்குள் ஒரு கையை விட்டபடி. இங்கும் அங்குமாகத் திருதிருவென்று விழித்துப் பார்த்த விதம் அவளுக்குச் சிரிப்பூட்டியது,!

பின்னே கடைக்கு வந்தால். என் னென்ன சாமான் இருக்கிறது என்று பாராமல். இங்கே யாரேனும் திருடன் இருக்கிறானா என்று கண்களை உருட்டி உருட்டித் தேடுவது போலப் பார்த்தால்?

இவர்கள் தேடுவது. திருடனையா அல்லது காவலாளியையா?

ஒருவேளை. இவர்களே திருடர்களாக இருந்தால் ...... இருந்தாலும். அப்படி ஒன்றும் பயப்படத் தேவையில்லை,!இந்தக் கடை வளாகத்தின் பாதுகாப்பு ஏற்பாடு வலுவானது,!பில் போட்டுப, பணம் தராத எதையும் எளிதில் வெளியே கொண்டு போய்விட முடியாது,!அத்தோடு. அந்தத் தளத்தின் விற்பனை ஆட்களோடு. இவர்களோடு வந்த. அந்த மனிதனும் இருக்கிறான்,!

நேர் நடையுடன் வந்த அவன் உதவ மாட்டானா. என்ன? பார்த்துக் கொள்ளலாம்,!

தன்னையறியாமல் ஓரப் பார்வை அந்தப் புதியவனிடம் ஓடவும்.

கட்டுப் படுத்திக்கொண்டு திரும்ப முயன்றவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது,!

ஏனெனில். அவன் தனது பழைய கைக்கடிகாரத்தைக் கழற்றி வைத்துவிட்டு. அங்கிருந்த விலை உயர்ந்த ஒன்றை எடுத்துத் தன் கையில் கட்டிக் கொண்டிருந்தான் அவன்,!

அதன் முள். எண்கள் எல்லாம் வைரங்கள்,!விலை லட்சத்துக்கும் மேலே,!அதைப் பார்த்ததும். தன் பழைய ஓட்டைக் கடிகாரம் பிடிக்காமல் போய்விட்டது போல,!

ஆனால் அதற்காகத் திருடலாமா?

அதுவும். திருடர்களைப் பிடிக்க யார் உதவுவான் என்று நினைத்திருந்தாளோ. அவனே அல்லவா. அங்கே திருடிக் கொண்டிருந்தான்,!என்ன அனியாயம்,!

இருந்திருந்து. அவனைப் போய். நல்லவன் என்று நினைத்தாளே,!

நல்லவன் போல வேஷமிடும் அ , அயோக்கியன்,!

இவனது முகத்திரையைக் கிழித்து. இவனது உண்மைத் தோற்றத்தை. ஊர் உலகத்துக்கு அம்பலப்படுத்த வேண்டும்,!

அவன் கைக்கடிகாரம் திருடியதை அறியாதவள் போன்று. அவனை நெருங்கினாள் நளினி,

ஆனால். அந்த நெடியவனை அவள் நெருங்குமுன். மற்ற திருதிரு முழிக்காரர்களில் ஒருவன். குறுக்கே வந்து. அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டுச் சற்றே விலகி நின்றான்,!

ஏன் குறுக்கே வந்தான்? ஏன் விலகிப் போனான்?

எப்படியோ போகட்டும்,!இவனைப் பார்த்துத் திருடனை விட்டுவிடக் கூடாது என்று எண்ணி. அவனை நெருங்கி. “இங்கிருப்பதைவிட விலை உயர்ந்த வைரங்கள். அந்த அறையுள் இருக்கின்றன, பார்க்கிறீர்களா. சார்?” என்று கேட்டாள்,!

“பரவாயில்லை,!இந்த வளாகத்தில். விற்பனையில் அக்கறை உள்ளவள் நீ ஒருத்தியேனும் இருக்கிறாயே,!” என்றவன். அவளைப் பாராமல் எங்கோ நோக்க. அந்தத் “திருதிரு முழி “களில் ஒருவன்

வேகமாக. அந்த அறையினுள் சென்றுவிட்டுத் திரும்பி வந்தான்,!

இன்னொருவன் நெடியவனை ஒட்டிக்கொண்டே நின்றான்,

இவர்கள் மூவருமே கூட்டுக் கள்ளர்களாக இருக்கக் கூடுமோ என்று எண்ணிவிட்;டு. இராது என்ற முடிவுக்கு வந்தாள் நளினி, ஏனெனில். மற்றவர்கள் யாரும். பொருட்களின் பக்கம் பார்க்கக்கூட இல்லையே,! அப்படியே கூட்டாக இருந்தால் சேர்ந்து மாட்டட்டும் என்று எண்ணியவளாய். "வாருங்கள். சார்,!" என்று அழைத்துச் சென்றாள்,!

உள்ளே சென்றதும். அவளயே நோக்கி. "என்னவோ விலை உணர்ந்த வைரங்கள் இங்கே இருப்பதாகச் சொன்னாயே,!பார்த்தால். வெறும் பீரோக்கள் மட்டும்தானே இருப்பதாக அல்லவா காண்கிறது?" என்று கேட்டான் அவன்,

"இஇருக்கின்றன. சார்,!ரொம்பவும் விலை உயர்ந்தனவா? பீரோவில் நன்றாகப் பூ
 ட்டி வைத்திருக்கிறார்கள்,!நான் போய்ச் சாவியை வாங்கி வந்து திறந்து காட்டுகிறேன். சார்,!" என்று வேகமாக அறையிலிருந்து வெளியே வந்தவள். அதைவிட அதி விரைவாக.
அறைக்கதவை இழுத்துப் பூட்டினாள்,

மின்னலெனப் பாய்ந்து கீழிறங்கிச் சென்றவள். கீழ்த் தளத்தில். மூன்று தளத்து நிர்வாகிகளும் சேர்ந்து அமர்ந்து. நிறுவன விஷயமாகக் கலந்து உரையாடும் டீ அவளது அபிப்பிராயப்படி.
மூவருமாக வெற்று அரட்டையடிக்கும் தனியறைக்குள் வேகமாகச் சென்றாள்,

"அனுமதி கேட்காமல். நீ எப்படி " என்று அதட்டலாகத் தொடங்கிய ஒருவரின் பேச்சை அலட்சியம் செய்து. "நம் கடை வளாகத்துள் ஒரு திருடன் புகுந்துவிட்டான். சார்,!அவனைக் கூட்டாளிகளோடு. நம் ரிக்கார்டு அறைக்குள் பூட்டி வைத்துவிட்டு வந்தேன்,!வந்து. அவர்களைப் பிடித்துப் போலீசில் ஒப்படையுங்கள்,!" என்று மூச்சு விடாமல் கூறி முடித்துவிட்டு. அதன் பின்னரே மூச்சு வாங்கினாள் நளினி,!

பெரியவர்கள் மூவருமே திகைத்துத் திணறிப் போயினர்,!

அவர்கள் அறிந்த வரையும். திருடர்கள் என்றால். பில் போட்டுப் பணம் கொடுக்காமல். ஒன்றிரண்டு பொருட்களைக் கொண்டு செல்ல முயல்வார்கள், உள் வாயிலைத் தாண்டும்போதே. "பீப்" சத்தம்

வந்துவிடும்,!”செக்யூரிட்டி” ஆட்கள் உடனே திருடனைப் பிடித்து விடுவார்கள்,!மரியாதையாகப் பணத்தைக் கேட்பார்கள், பணம் இல்லை என்றால். பொருளைப் பிடுங்கிக்கொண்டு. நாலு தர்ம அடி போட்டு விரட்டி விடுவார்கள்,!

இப்போது. இவள் ஒருத்தியாக ஒன்றுக்கு மேற்பட்ட திருடர்களைப் பூட்டி வைத்தாளாமே,!நம்புகிறாற் போலவா. இருக்கிறது?

மூளை உள்ள எவனாவது. அந்த அறைக்குள் வைர நகைகள் இருப்பதாக நம்பி உள்ளே செல்லுவானா?

அங்கே ஒன்றும் இல்லாதது[ம் நல்லதுதான்,!

ஆனால். எப்படிப்பட்ட முக்கியமான “ரிக்கார்டுக்ள் அங்கே பத்திரமாய் வைக்கப்பட்டு இருக்கின்றன,!சொத்துக் கணக்கு. சொத்துரிமைக் கணக்கு. இத்தனை ஆண்டு வரவு. செலவுக் கணக்கு , அங்கே போய்த் திருட்டுப் பயல்களை விடுவதா?

ஆனால். இவள் சொன்னதை நம்பி. மூன்று தடிமாடுகள் வெறும் இரும்பு பீரோக்கள் இருக்கும் அறைக்குள் போய் மாட்டிக் கொள்ளுவார்கள்?

கேழ்வரகில் நெய் வடிகிறது என்று ஒரு புளுகிணி சொன்னால். அதை நம்புவதற்குக் கேட்கிற அவர்கள் என்ன. புத்தியில்லாதவர்களா?

அதுவும் பெரியம்மாவால் நியமிக்கப்பட்ட அவர்கள்?,!

மூவருமாகச் சேர்ந்து வெறும் கதை என்று முடிக்கையில். அந்தப் பக்கமாக வந்த நிறுவனப் பாதுகாப்பு அதிகாரியை. நளினி ஆத்திரத்தோடு கூப்பிட்டாள்,

“பூவலிங்கம் சார். நம் கடையில் வைர வாட்ச் திருடிய ஒருவனையும். அவனுடைய கூட்டாளிகளையும். மேல் தளத்து ரிக்கார்டு அறையில் பூட்டி வைத்திருக்கிறேன், கூடச் சில ஆட்களை அழைத்துப் போய். அவனைப் பிடித்துப் போலீசில் ஒப்படைக்கிறீர்களா? அங்கே. முக்கியமாக பத்திரங்கள் இருக்கிறதாம்,!அவை. அடுத்தவர் கண்ணில் பட்டாலும் ஆபத்து என்று. இந்தப் பெரியவர்கள் சொல்லுகிறார்கள், அதனால். சீக்கிரமாக ஏதாவது செய்யுங்கள்,!” என்று. பொறுமையை இழுத்துப் பிடித்த குரலில் கேட்டுக்கொண்டாள்,

“வை ............ ர வாட்ச்,!ஐயோ. ஒன்றரை லட்சம் விலையாயிற்றே,!

அப்படியானால். நீ நிஜமாகத்தான் சொல்லுகிறாயா? கடவுளே. அந்தச் சின்னப் பயலுக்குத் தெரிந்தால். நம்மைத் தொலைத்துக் கட்டிவிடுவானே,!சீக்கிரம் ஓடுங்கள். பூவு,!நம் ஆட்களையே நாலைந்து பேரைக் கூட்டிக்கொண்டு. ஓடிப் போய். அவனைப் பிடியுங்கள்,!கைக்கடிகாரத்தைப் பிடுங்கிக்கொண்டு. அப்புறமாகப் போலீசில் ஒப்படைக்கலாம்,!ஜன்னல் கின்னலைத் திறந்து. கடிகாரத்தை வெளியே வீசி விட்டால். நமக்கு நட்டத்துக்கு நட்டம்,! அத்தோடு. அவனது திருட்டுக்கு ஆதாரமும் இராது,!அப்புறம் அவன் நம் மேலேயே. கேஸ் போட்டுவிடுவான்,!"

மூவருமாக ஆளுக்கொன்றாகச் சொன்னதின் சாராம்சத்தைக் காதில் வாங்கிக்கொண்டு.

பூவலிங்கம் தன் ஆட்களைத் திரட்டிக்கொண்டு. மேல் தளத்துக்கு விரைந்தார்,!

அதற்குள் நிர்வாகிகள் மூவரும் லிஃப்ட் வழியே. அங்கே வந்து சேர்ந்து. முடிந்தவரை தூரமாய் ஒதுங்கி நின்றனர்,!

கூட வந்த நால்வரையும். நாலு இடங்களில் நிற்கச் செய்துவிட்டு. பூவலிங்கம் கதவைத் தட்டி. "பாருங்கப்பா. கதவைத் திறந்தால். நாலைந்து இடத்தில் துப்பாக்கியோடு நிற்கிறார்கள்,!அதனால். மரியாதையாகக் கைகளைத் தூக்கிக்கொண்டு வெளியே வாருங்கள்,! அசட்டுத்தனம் எதுவும் செய்தால். உங்கள் உயிருக்குத்தான் ஆபத்து,!" என்று உரத்த குரலில் கூறிவிட்டு. மெல்லக் கதவைத் திறந்துவிட்டு ஒதுங்கி நின்றார் அவர்,

வாட்ச் திருடனுடைய கூட்டாளி. தலையை மட்டும் நீட்டி எட்டிப் பார்த்துவிட்டு. உள்ளே ஏதோ சொல்ல. பூவலிங்கத்தின் எச்சரிக்கையைச் சற்றும் மதியாமல். வெகு அலட்சியமாக வெளியே வந்தான். அந்தத் திருடன்,!

"என்ன பூவலிங்கம். என்னைச் சுட்டு விடுவீர்களா?" என்று கேட்ட அவனது ஏளனப் பார்வை. நளினியின் மீது. ஒரு கணம் படிந்து மீண்டது,!

சூழ இருந்தோரின் முகத்தில் இருந்த இறுக்கமும் பயமும் மறைந்து. ஒரு விதமான அசட்டுத்தனத்தோடு கூடிய பதற்றம் பரவியது,

மூன்று நிர்வாகிகளும். கூழைக் கும்பிடு போட்டபடி. "சா ர்.

நீங்களா? உரிமைக்கார உங்களைப்போய். இந்த முட்டாள்ப் பெண் ”என்று வழிந்தவாறு. அந்த நெடியவனிடம் ஓடினார்கள்,!

திருடன் என்று தான் அறைக்குள் அடைத்து வைத்திருந்தது யார் என்று புரிபட. நளினியின் கால்களின் கீழிருந்த பூமி நழுவியது,!

# அத்தியாயம் -2

“ஹீஹீ,!பாருங்கள் சார். முதலாளியான உங்களைப் போய்த் திருடன் என்று எண்ணிவிட்டாள். இந்த முட்டாள்ப் பெண்,!உங்களை. என்னமாய் அவமானப்படுத்திவிட்டாள்,! இவளை வேலையில் அமர்த்தியதே தப்பு,!”

“ஆமாம் சார்,!எப்போதும். ஒரே அதிகப்பிரசங்கித்தனம்,!இதைப் பண்ணு,. அதைச் செய் என்று,!நம் பாரம்பரியமே புரியாத படு முட்டாள்,!” என்றார் ஞானப்பிரகாசம்,!அடுத்த நிர்வாகி,!

“முதலில். இவளை வெளியே துரத்த வேண்டும்,!” என்று முடித்தார் மூன்றாமவர்,

அதுதான் நடக்கப் போகிறது என்று எண்ணினாள் நளினி,

நியாயப்படிப் பார்த்தால். முதலாளி யார் என்று அறிந்திராதது மட்டும்தான் அவளது குற்றம்,!ஆனால். எவ்வளவு கெட்டிக்காரத்தனமாக. இரண்டு கூட்டாளிகளோடு இருந்த அவனைத் தன்னந் தனியளாக. எப்படிப் பிடித்தாள்,!

அதைபற்றி. எண்ணிப் பார்க்கக் கூட. யாருக்கும் மனமே இல்லையே,!

ஆனால் இதைப் பற்றி வருத்தப் படுவதைவிட. இனி என்ன என்று யோசிப்பது நல்லது,!

அவள் யோசனையைத் தொடங்குமுன். “சின்னப்பயல்” என்று. அந்தப் பழம் பெருச்சாளிகளால் அடிக்கடிக் குறிப்பிடப் படும். அந்த வளாகத்துடைய புதிய உரிமைக்காரன் செயல்படத் தொடங்கினான்,

பெயர்கூடப் பெத்த பெயர்தான், புவனேந்திரன்,!

“கீழேதானே ஆலோசனை அறை? அங்கே போகலாம், “ என்று எல்லோரையும் அங்கே அழைத்துச் சென்றான்,

அறையை அடைந்ததும். “அந்தப் பெண்ணை வெளியே இருக்கச் சொல்லுங்கள்,” என்று நளினியை மட்டும் நிறுத்திவிட்டு. நிர்வாகிகள். பாதுகாப்பு அதிகாரி. அவனோடு வந்தவர்கள் என்று மற்ற அனைவரையும் கூட்டிக்கொண்டு உள்ளே போய்விட்டான்,!

பூட்டிய அறைக்கு வெளியே. சற்றுத் தொலைவில் ஒதுக்கமாக அமர்ந்திருந்த நளினிக்கு. நேரம் ஆக. ஆக. வேலையில் நீடிப்பது பற்றிக் கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும். காற்றில் இட்ட கற்பூரமாய்க் கரைந்து மறைந்து போனது,!

முதலாளியின் மனநிலையைப் பிரதிபலிப்பவர்கள் பணியாளர்கள், அதிலும். கடைநிலை வேலையாட்களிடம் அது நன்றாகவே தெரியும்,

அதிகப்படி இருக்கைகள். தண்ணீர் போன்றவற்றுடன் ஆலோசனை அறைக்குள் சென்று வந்தவர்கள். அவளது பக்கமாகத் திரும்பியே பாராமல் சென்றவிதம். "உன்னத"த்தோடு அவளுக்கு உள்ள உறவு முடியப் போவதைத்தெளிவாகவே தெரிவித்தது,!

அவர்கள் மட்டுமின்றி மற்றவர்களும். அவளது முகத்தைப் பாராமலே அவள் இருந்த இடத்தைக் கடந்து செல்லவும். நளினிக்குத் தன் தலைவிதி நிச்சயமாயிற்று,!

சும்மாவே.. மூன்று தளத்து நிர்வாகிகளுக்கும் அவளைப் பிடிக்காது,!

புது முதலாளியின் ஒரு கருத்துக்காக வேலைக்கு அமர்த்தப்பட்டவள் என்பதற்காகவெ. அவளை வெளியேற்றாமல் பொறுத்திருந்தார்கள்,!

இப்போது. வாய்ப்புக் கிடைத்திருக்கும்போது விடுவார்களா?

இன்னும் என்னென்ன கோள் சொல்லி. அவளை விரட்டப் போகிறார்களோ?

அவர்களது கோள் மூட்டலுக்குப் பதில் சொல்ல ஒரு வாய்ப்புக் கூடத் தராமல். அவளை வெளியே நிறுத்திவிட்டுப் போய்விட்டானே. புதிய முதலாளி,!

இதிலிருந்தே. அவனது நியாய புத்தியின் தரம் தெரியவில்லையா?

நிச்சயமாக வேலை போகப் போகிறது,!

இதை. இவன் கூப்பிட்டுச் சொல்லும்வரை காத்திருப்பானேன்?

பேசாமல் எழுந்து வீட்டுக்குப் போய்விட்டால். மறு நாள் வந்து சம்பளத்தைக் கணக்குத் தீர்த்து வாங்கிக் கொண்டால் போகிறது,!

இங்கே உட்கார்ந்து. போவோர் வருவோரின் ஒதுக்கத்தைக் கவனித்து உடல் குன்றித்தான் ஆக வேண்டும் என்று. அவளுக்கு

என்ன தலையெழுத்து?

ஆனால் ........................................................... ஒரு வேளை ....... ,

உள்ஞரத் தோன்றிய சிறு தயக்கத்தை ஒதுக்கிவிட்டு. அவள் மெல்ல எழுந்தபோது. ஆலோசனை அறைக் கதவு மெதுவாகத் திறந்தது,!

அவளுக்கு அழைப்போ?

யோசனையோடு பார்த்தால். கட்டிடத்தின் பாதுகாவல் பொறுப்பின் பெரிய அதிகாரியான பூவலிங்கம். சோர்ந்த நடையுடன் வெளியே வந்தார்,

தனக்குப் பின்னே கதவை மெதுவாகச் சாத்திவிட்டு. நளினியை நோக்கி மெதுவாக வந்தவர். அவளை அணுகியதும் நின்று. “ என்னம்மா. இப்படி என்னை மாட்டி வைத்துவிட்டாயே,!என்னை வேலையில் இருந்து தூக்கிவிட்டார்கள்,!இனி நான் என்ன செய்வேன்?” என்றார் வருத்தத்துடன்,!

திகைப்புற்று. “உ உங்களையா? நான் எப்படி உங்களை மாட்டி ......... இல்லையே. சார்,!நான் உங்களைப் பற்றி. யாரிடமும் எதுவும் சொன்னதே இல்லையே,!“ என்றாள் நளினி,!

“வாயால் சொன்னால்தானா? முதலாளி கைக்கடிகாரத்தை எடுத்ததை. நான் கவனித்திருக்க வேண்டுமாம்,!அவரவர் வேலையை. அவரவர் ஒழுங்காகச் செய்ய வேண்டும்,. நீ செய்யவில்லை,. வெளியே போ என்று ஒரேயடியாய் முடித்துவிட்டார்,!இனி. நான் என்ன பண்ணுவேன்? போன வருஷம் மகள் திருமணத்துக்கு வாங்கின கடனை மொத்தமாகப் பிடித்துவிட்டால். மிச்சம் என்று. கைக்கு ஒன்றுமே வராது,!மகனுக்குக் கல்லூரிக்குப் பணம் கட்ட வேண்டும்,!அதற்காக. ஐம்பதாயிரம் அதிகப்படிக் கடன் கேட்டிருந்தேன்,!தருவதாகக் கூடச் சொல்லியிருந்தார்கள்,!ஆனால் இனி எப்படித் தருவார்கள்? என் மகனின் எதிர்காலம் என்ன ஆகும்? அதோ கதிதான்,!இனி என்  குடும்பமே அவ்வளவுதான்,!” என்று புலம்பியவாறே வெளியேறினார். அவர்,!

ஒரு விரலால். கண்ணீரைச் சுண்டிவிட்டாரோ என்ற சந்தேகத்தில். நளினி துடித்துப் போனாள்,!

அவளுக்கு உன்னதத்தின் புதிய முதலாளி மீது. கோபம்

கொதித்தெழுந்தது,!

அவளாவது. வேலையில் சேர்ந்து மூன்றே மாதங்கள்தான் ஆகிறது,! போகிறது எனலாம்,!

ஆனால். பூவலிங்கம் கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணி புரிகிறவர் ஆயிற்றே,!ஒரு தரம் மன்னிப்புக் கொடுக்கக் கூடாதா? ஒரு எச்சரிக்கை?

ஒன்றுமே இல்லாமல் விரட்டுவதா?

இதைக் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்று அவள் அமர்கையில். கதவு மீண்டும் திறந்து. நிர்வாகிகள் மூவரும் வெளியே வந்தனர்,

அவர்களது முகத்தில் இருந்த வெறுப்பும். சினமும் அவள் எதிர்பார்த்ததே,!ஏளனம் தெறித்தால்கூட ஆச்சரியப்படுவதற்கு இல்லைதான்,!

பார்வையால்கூடத் தீண்டத் தகாதவள் போல. அவளிடமிருந்து அவசரமாக விழிகளைத் திருப்பிக்கொண்டு. மூவருமே வேகமாக செல்வதை வெறித்தபடி உட்கார்ந்திருந்தாள் நளினி,

விசித்திரம் என்னவென்றால். வம்பளப்பதற்கு வசதியாக. மூவரும் ஒரே இடத்தில் இருக்கைகளைப் போட்டுக்கொண்டு அமரவில்லை,! மாறாக. ஞானப்பிரகாசம். அவரது அடித்தள நிர்வாகி இடத்துக்குச் செல்ல. மற்ற இருவரும் “லிஃப்டை” நோக்கி நடந்தனர்,!

முதலாளி இருப்பதால். அவரவர் இடத்தில் இருந்து வேலையைக் கவனிப்பதாகப் பாவலா பண்ணப் போகிறார்கள் போலும்,!

இவர்களைத்தானே. அவனுக்கும் நம்பத் தோன்றுகிறது,!

நாடகம்தான் உலகம்,!

அவளும்தான் நடித்திருக்கலாம்,!அவன் வாட்சைத் திருடியதை

அவனது பொருள், எனவே. அதை அவன் திருடியதாகக் கூற முடியாது ........................................................ அந்தக் கைக் கடிகாரத்தை அவன் மாற்றியதைக் கவனியாதது போல நளினியும் நடித்திருந்தால். இப்போது பிரச்சினையே நேர்ந்திராது,!

அவன்தான் முதலாளி என்று மட்டும் தெரிந்திருந்தால் ................

இப்போது. அந்தப் பூவலிங்கம் சாருடைய கதி?

அவருடைய குடும்பத்தினர் கண்ணீர் விடுவது போலவும். அவருடைய மகனாக ஓர் இளை"ன் தற்கொலை செய்ய முயல்வதைப் போலவும் கற்பனையில் பல காட்சிகள் தோன்றி. அவளைக் கலங்க வைத்துக்கொண்டிருந்தபோது. கருவறைக் கதவு மீண்டும் திறந்து. அவள் உள்ளே அழைக்கப் பட்டாள்,!

உள்ளே வருமாறு அழைத்தவன். முதலாளியுடன் வந்தவர்களுள் ஒருவன்தான்,!

கதவைத் திறந்தால். அடுத்தவனும் அருகிலேதான் நின்றுகொண்டிருந்தான்,

இவர்கள்தான். அந்தப் புவனத்து இந்திரனின் வலதுகையும். இடதுகையும் போலும் என்று சற்றே இளக்காரமாக எண்ணியவாறே. நளினி அறையினுள் சென்றாள்,

ஆனால். உள்ளே அகன்ற மேஜையின் பின்னே. ஒரு பெரிய சுழல் நாற்காலியில் புவனேந்திரன் கம்பீரமாக அமர்ந்திருப்பதைக் காணவும். காட்சி மாறி. சிங்கத்தின்முன் சுண்டெலி போலச் சிறுமையாக உணர்ந்தாள் அவள்,!

அவளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு. "உட்கார்,!" என்றான் அவன், விழி தாழ்த்தி. மேஜை மீது. அவன் முன்னே இருந்த காகிதத்தைப் பார்த்துவிட்டு. "உன் பெயர் நளினியா?" என்றபடி நிமிர்ந்தவன் . "உட்காரச் சொன்னேனே,!" என்றான்,

"சொன்னீர்கள்
,ஆனால். நான் சொல்ல வேண்டியதை நின்றுகொண்டே சொல்வது. எனக்கு வசதியாக இருக்கும்,!"
என்றாள் அவள். இறுகிய குரலில்,

அவன் பேசாமல் நோக்கவும். அதையே அனுமதியாகக் கொண்டு. "பாருங்கள் சார். முதலாளியைத் திருடன் என்று எண்ணி. அறைக்குள் அடைத்து வைத்த என்னை. நீங்கள் பணி நீக்கம் செய்வது. ஒரு வகையில் நியாயமாகவே இருக்கலாம்,!போகட்டும்,! இந்த வேலை இல்லாவிட்டாலும். வேறு எதையாவது செய்து. நான் பிழைத்துக் கொள்வேன்,!அதற்கான வயதும் தைரியமும் எனக்கு இருக்கிறது,!ஆனால். பாதுகாப்பு அதிகாரி பூவலிங்கத்தை. வேலையை விட்டுப் போகச் சொல்லாதீர்கள். சார்,!பாவம். அவர் ஐம்பதை எட்டிவிட்டவர்,! பிள்ளை குட்டிக்காரர்,!இந்த ஆண்டு.

மகனை வேறு. கல்லூரியில் சேர்க்க வேண்டுமாம்,!இந்த ஊதியம் இல்லாமல். அவருடைய குடும்பம் அல்லாடிவிடும். சார்,!அதனால். தயவு பண்ணி. அவரை வேலையில் வைத்துக் கொள்ளுங்கள். சார்,! பாவம். சார்,!" என்று. முதலில் எடுப்பாகத் தொடங்கிய போதும். கடைசியில் சற்று மன்றாடியே கேட்டுக்கொண்டாள் அவள்,

"அதெப்படி முடியும்?" என்று வினவினான் அவன், "இப்போது ஒரு பொருள் .................. வெறும் சாதாரண உப்பு என்றே வைத்துக் கொள்ளேன்,!உப்புக்கான பணத்தைக் கொடுத்து வாங்கிப் போகிறாய்,!மணலும் அழுக்குமாக உப்பு தரமற்றதாக இருந்தால். அதையே பயன்படுத்துவாயா? திருப்பிக் கொடுத்துப் பணத்தைக் கேட்டு வாங்கமாட்டாய்? இந்தக் வளாகத்தின் பாதுகாப்பு. மிஸ்டர் பூவலிங்கத்தின் பொறுப்பு,!பெரிய பொறுப்பு,!அதை. அவர் செய்த விதம் தரமற்றதாக இருக்கும்போது. அதற்கு மேல். அவரை எப்படி வேலையில் நீடிக்க விடுவது?" என்று முதலாளி யாகக் கேட்டான்,

"இருபது ஆண்டுகளுக்கு மேலாக. ஒரு சிறு கரும்புள்ளி கூட இல்லாமல். இங்கே பணி புரிந்திருக்கிறார்,!ஏதோ ஒரு தவறு,! அதற்காக ஓர் எச்சரிக்கை மட்டும் கொடுத்து விட்டுவிடக் கூடாதா. சார்? இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு வெளியேறச் சொன்னால். இன்னோர் இடத்தில் அவருக்கு வேலை கிடைப்பதுகூடக் கஷ;டம். சார்,!" என்று வாதாடினாள் நளினி,

"அது அவரது பிரச்சினை,!ஆனால். ஒன்றை யோசித்துப் பார்,! எத்தனையோ காலமாக. இந்தக் கடையில்தானே உப்பு வாங்குகிறோம் என்று. தரமற்ற உப்பைப் பயன்படுத்துவாயா? ஆரோக்கியத்துக்குக் கேடு என்று. தூரவேனும் தூக்கிப் போட்டுவிட மாட்டாயா? பாதுகாப்பு என்பது. தொழிலிலும் வாழ்விலும் மிக முக்கியமான விஷயம்,!அதில் தரக் குறைவுக்கு இடமே கிடையாது,! அதனால். பூவலிங்கம் விஷயத்தில் மறு பரிசீலனைக்கு வாய்ப்பில்லை,!" என்று பிசிரற்ற குரலில் கூறி முடித்தான் புவனேந்திரன்,!

இதற்கு மேல் சொல்வதற்கு என்ன இருக்கிறது?

ஊதியம் கொடுக்கிற இடத்துக்கு அவள் உண்மையாக இருக்கப் போய். இரண்டு பேரின் வேலை போயிற்று,!

வந்த நோக்கம் தோற்றுவிடச் சோர்வுடன் திரும்பப் போனாள் நளினி,

“நீ சொல்ல வந்தது. இவ்வளவுதானா?”

வேறு என்ன இருக்கிறது?

ஒரு வேளை. எனக்கும் வேலையைத் திருப்பிக் கொடு என்று கெஞ்சுவாள் என்று நினைத்தானா? அவள் ஒன்றும் பிழை என்று தெரிந்து செய்யவில்லையே,!

சோர்வை மறைத்து நிமிர்ந்து. “கணக்கு முடித்து வைக்கச் சொல்லுங்கள். சார்,!நாளைக்கு வந்து. என் சம்பள மிச்சத்தை வாங்கிப் போகிறேன்,!” என்று மிடுக்குடன் கூறினாள் நளினி,!

மீண்டும் திரும்பப் போனவளை. “ஒரு நிமிஷம்,!” என்று நிறுத்தினான் புவனேந்திரன்,

“நீ தமிழ் படித்திருக்கிறாயா? “

பார்வையில். ஏன் கேட்கிறாய் என்ற கேள்வியோடு. “ஆமாம்,!” என்றாள் நளினி,

“தமிழில். “நுணலும் தன் வாயால் கெடும்” என்று ஒரு பழமொழி இருக்கிறது,! அது தெரியுமா?”

“தெரியும், ஆனால். அது எனக்குத் தெரிவதோ. தெரியாததோ இப்போது என்ன பெரிய விஷயம்?”

“இருக்கிறது,!அவசியமற்றுக் கத்தி. தன் இருப்பிடத்தைக் காட்டித் தன் உயிருக்கு ஆபத்தைத் தானே இழுத்துக் கொள்ளுமாம். தவளை,! இப்போது அதற்குச் சரியான உதாரணமாக நடந்து. உன் வேலையை நீயே போக்கிக் கொண்டாயே,!” என்றான் அவன்,!

அவள் புரியாமல் திகைக்கவும். அவன் விளக்கினான்,

“இவ்வளவு நேரம். இந்த அறையில் என்ன நடந்தது. தெரியுமா? “உன்னதத்”தைச் சார்ந்தவர்களாக. இந்த அறையில் இருந்த அத்தனை பேருக்கும் நல்ல திட்டு விழுந்தது,!அந்தப் பெண்ணைத் தவிர அதாவது. உன்னைத் தவிர வேறு யாருமே இங்கே உருப்படியாக வேலை செய்யவில்லை என்று சொல்லித் திட்டினேன்,!
நிர்வாகிகள் உட்பட எல்லோரையுமே,!அவரவர் இடத்தில் இருந்து. உரிய வேலையைத் திறம்படச் செய்யாதவர்கள் யாரும் எனக்குத்

தேவையில்லை என்று கறாராகச் சொல்லி அனுப்பினேன்,!உன்னை அழைத்தது. உன்னைப் பாராட்டுவதற்காகவே,!ஆனால். என் அழைப்பின் காரணத்தைக் கேட்குமுன்னரே. கணக்குத் தீர்த்துப் பணத்தை வாங்கிக்கொண்டு போகிறேன் என்றுவிட்டாயே,! மனதளவில். இந்த நிறுவனத்தை விட்டு வெளியேற முடிவு செய்துவிட்டவளுக்குத் தொடர்ந்து நான் எப்படி வேலை தர முடியும்? போகட்டும்,!உனக்கு ஒரு மாத நோட்டீஸ் தருகிறேன், அந்த ஒரு மாத அவகாசத்தில் வேறு வேலை தேடிக்கொள்,!" என்றான் புவனேந்திரன்தெளிவாக,!

ஐயோ என்று நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது. நளினிக்கு,!

என்ன மடத்தனம் செய்துவிட்டாள்,!

நல்ல சம்பளம்,!

எளிதான வேலை,!வேலை முடிந்து வீடு சென்று. சல்வார் செட்களில் பூவேலை செய்வதற்கும். அவளுக்கு நேரம் இருந்ததே,!அவைகளைக் கொண்டுபோய்க் கடைகளில் விற்பதற்கும்,!

அதைப் போய். அவசியமற்று வீணாக்கிக் கொண்டாளே,!

முதலாளி யார் என்று தெரியாமல் நடந்துகொண்டது. முட்டாள்த்தனம் என்றால். விஷயம் என்னவென்று அறிந்துகொள்ளும் பொறுமையற்று. அவசரப்பட்டு வேலையை அவளாகவே போக்கிக்கொண்டது. எவ்வளவு பெரிய மட்டித்தனம்,!

அவசரப்பட்டுப் பேசியதை ஒத்துக்கொண்டு. அவனிடம் கேட்டுப் பார்க்கலாமோ?

ஆனால். அதற்குப் பலன் இருக்கும் என்று அவளுக்குத் தோன்றவில்லை,!அத்தோடு. சாட்சிகளைப் போல நின்றுகொண்டிருந்த. அந்த இருவர் முன்னிலையில். தனக்காக எதையும் அவனிடம் கேட்கவும். அவளுக்குப் பிடிக்கவில்லை,!

கூடவே. அவன் இல்லை என்றுவிட்டதைப் பிச்சைக்காரி போலக் கேட்பதா என்ற ரோஷம் வேறு,!

அப்படி இல்லை என்றால் போகட்டுமே என்று எண்ணும்போதே. ஒரு முரண்பாடு உறுத்தியது,!

அவனிடமே கேட்டாள், “பூவலிங்கம் சாரை. உடனடியாக வெளியேற்றினீர்கள்,!எனக்கு மட்டும் எதற்கு ஒரு மாத அவகாசம்?”

“அவரது பணி. பாதுகாப்பு சம்பந்தப்பட்டது,!அதில். நீக்குப் போக்குக்கே இடம் கிடையாது,!உன்வேலை. அவ்வளவு முக்கியமானது இல்லையே,!“

“ஓ,!”

நளினியால். அன்றிரவு தூங்க முடியவில்லை,!

ஏமாந்துவிட்டோமே,. வாயை மூடிக்கொண்டு சும்மா இருந்திருக்கலாமே,. இருந்திருந்தால். வேலை நிலத்திருக்குமே என்ற கழிவிரக்கத்தை அவளால். விலக்கவே முடியவில்லை,!

அந்தப் புவனேந்திரன். அவனைத் திருடன் என்று அவள் கருதிச் செயல்பட்டதைத் தவறாகவே எண்ணவில்லை,!அதற்காகப் பாராட்டத்தான் கூப்பிட்டிருக்கிறான்,!அது புரியாமல். அவசரப்பட்டு. எல்லாவற்றையும் கெடுத்துக்கொண்டாளே,!

இப்படியொரு மடத்தனம் எப்படிச் செய்தேன். ஏன் செய்தேன் என்று அதே மறுகல்,!மறுகி. மறுகி. படுக்கையில் உருண்டு புரண்டே இரவைக் கழித்தாள் அவள்,!

அன்றையச் சம்பவத்தால் தூக்கம் கெட்டுத் திண்டாடியது. நளினி மட்டுமல்ல,!

அவளது இல்லத்துக்குச் சில கிலோ மீட்டர் தூரத்தில். அடையாறு பகுதியின் பெரிய

வீடுகள் ஒன்றினுள். மென்மையான இலவம்பஞ்சு மெத்தையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்த புவனேந்திரனாலும். தூங்கவே முடியவில்லை,!

ஐயோ அவசரப்பட்டுவிட்டோமே என்று தவிப்பும். ஏமாற்றமுமாக அவளது முகம். புவனனின் மனத்திரையில் இருந்து அகலுவதாக இல்லை,!

வெகு நேரம். படுக்கையில் உருண்டு கொண்டிருந்துவிட்டு. எழுந்து. தன் காவலர்களை அழைத்துப் பேசினான். அவன்,

அவர்களில் ஒருவன் ஓடிப்போனான்,

வீட்டைச் சுற்றிலும் நாய்களோடு சுற்றி வந்தான்,

அவன் திரும்பி வந்து விவரம் சொன்னதும். புவனேந்திரன் உடை மாற்றிக்கொண்டு வந்து. தோட்டத்தில் அமைத்திருந்த நீச்சல் குளத்தில் இறங்கி நீந்தத் தொடங்கினான்,!

நீச்சல். உடல் முழுமைக்குமான நல்ல தேகப் பயிற்சி,

நீந்தி நீந்தி உடல் அலுத்துவிட்டால். கட்டாயம் தூக்கம் வரும் அல்லவா?

# அத்தியாயம்-3

இரவில் சரியாகத் தூங்காததால். மறுநாள் காலையில் வேலைக்குச் சென்ற நளினியின் கண்களில் சோர்வு தெரிந்தது,!

மனதில் உற்சாகம் இருந்திருந்தால். அதை மறைக்க முடிந்திருக்கும்,! ஆனால். அதை மறைக்க முயற்சி எடுக்கக்கூட. அவளுக்குத் தோன்றவில்லை,!

முகம் முழுக்க உற்சாகத்தைப் பூசிக்கொண்டு நின்றாலும்தான் என்ன? “உன்னத”த்தில் எல்லோருக்குமே. அவளது வேலை விவரம் தெரியும், எனவே. அவள் சிரித்தாலும். அது வேஷம் என்று எல்லோருக்கும் தெரியும்தானே? அப்புறம் எதற்கு வீண் முயற்சி?

வீட்டில். தாய். தந்தை இருவருமே. இதில் வருத்தமாகக் காட்டிக் கொள்ளவில்லை,!

ஒரு வேளை. அவளே வருத்தப்பட்டுக்கொண்டு இருப்பதால். அதை அதிகப்படுத்த வேண்டாம் என்று எண்ணினார்களோ. என்னவோ?

“கௌரவமான இடம், வேறே மாதிரித் தொல்லை இராது என்று நினைத்தேன்,!ஆனால். இதே போல. இன்னும் எத்தனையோ இடங்கள் இருக்கும்தானே? சும்மா. வேலை போனதை நினைத்து வருத்தப்படாதே. செல்லம்,!” என்றாள் தாயார்,

“அங்கே எல்லாம் வயதானவர்கள் கூட்டம்,!கலந்து பேசிச் சிரிக்கக்கூட முடியாது,!

இனியாவது. உன் வயதுப் பிள்ளைகள் இருக்கும் இடமாகப் பார்த்து வேலையில் சேர்,!நானும். என் நண்பர்களிடம் சொல்லி வைக்கிறேன்,!” என்றார் தந்தை,!

முதலாளி இளை”ன்தான் என்று சொல்லலாமா என்று யோசித்துவிட்டுச் சும்மா இருந்தாள். நளினி,

ஏனோ. அவனைப் பற்றிய விவரங்களை. யாரிடமும் பகிர்ந்துகொள்ள. அவளுக்குப் பிடிக்கவில்லை,!

அவளை வேலையை விட்டு நீக்கியவனைப் பற்றி. அவளுக்கு என்ன பேச்சு?

வேலைக்குப் போய். ரிஜீஸ்டரில் கையெழுத்துப் போட்டுவிட்டுப் பார்த்தால். அங்கே பூவலிங்கம் வந்து காத்திருந்தார்,

“கணக்குத் தீர்த்துப் பணத்தை வாங்கிக்கொண்டு போக வந்தேன்,!” என்றார் அவர் வருத்தத்துடன்,!“கணக்கு எல்லாம் போட்டாயிற்று,!ஆனால். நீயும் வந்து. அவரோடு பேசிய பிறகு. பணத்தைக் கொடுக்கலாம் என்று முதலாளி சொல்லியிருக்கிறாராம்,!“

அவள் வந்து என்ன ஆகப்போகிறது,!பேசியும்தான் என்ன? ஏற்கனவே சொல்லாததாகப் புதிதாகச் சொல்லவும்தான். என்ன இருக்கிறது?

ஆனால். ஏதேனும் இருக்கக் கூடும் என்று பூவலிங்கத்துக்கு ஒரு நப்பாசை இருந்தது,!

“என்ன நடந்தது என்று. உன்னிடம்தெளிவாகக் கேட்டறிய எண்ணுகிறாரோ என்னவோ? நீ கவனித்தாயா நளினிம்மா. கொஞ்சம் முன்னதாகத்தான். நான் மேல் தளத்திலிருந்து இறங்கிப் போனேன், முதல் தளத்துப் படியிறங்கும்போது. கீழே முதலாளி “லிஃப்ட்டி”ல் ஏறுவதைப் பார்த்தேன்,

கூடவே. அவருடைய பாதுகாவலர்களும் இருந்தார்கள், அதனால்தான். யாரையாவது அனுப்பத் தேவை இல்லை என்று இருந்துவிட்டேன்,!“

“அதை. அவரிடம் சொல்லவில்லையா?”

“சொன்னம்மா,!ஆனால். முதலாளி அதை ஒத்துக் கொள்வதாக இல்லை,!அவருடைய பாதுகாவலர்கள். அவரது காவலுக்காக மட்டும்தானாம், இங்குள்ள காவல் என் பொறுப்புதானாம்,!

அதற்காகத்தானே. சம்பளம் வாங்கினாய் என்று கேட்கிறார்,! இருபத்தியிரண்டு ஆண்டுகள் ஒரு பிழை இல்லாத பணி,!” என்று பெருமூச்சு விட்டார் பூவலிங்கம்,

“அதைத்தான் நானும் சொன்னேன் “ எனும்போதே. அவளுக்கு ஒரு குழப்பம், “அவருடைய பாதுகாவலர்கள் என்றீர்களே சார். உண்மையிலேயே அவர்கள் பழைய காலத்து ராஜாக்களுக்குப் போல. இவருக்கு வெறும் பாதுகாவலர்கள் மட்டும்தானா? ஆனால். எதற்காக?” என்று வியப்புடன் கேட்டாள்,

“என்னவோ. பாதுகாப்பு விஷயத்தில். சின்னவர். கொஞ்சம் அதிகக் கவனம்தான்,

இங்குள்ள வீட்டை ஒரு கோட்டை போல ஆக்கிய பிறகுதான். இங்கே வந்ததேயாம்,! ........................................................................................ “

“பாட்டி வீடு,!முன்னேப் பின்னே வந்ததே கிடையாது போலப் பேசுகிறீர்களே,!“ என்றாள் அவள் நம்பாத குரலில்,!

குரலைத் தணித்து. “பழைய கதை ஏதும். உனக்குத்  தெரியாது என்று தோன்றுகிறது,!

பிடிவாதமாகச் சாதாரணக் குடும்பத்துப் பெண்ணை மணந்ததால். பெரியம்மா. தன் மகனை

வீட்டை விட்டே விரட்டி விட்டார்கள், அப்புறமும். எட்டிக்கூடப் பார்க்கவில்லை,!இருபது இருபத்தைந்து ஆண்டுகள் பேச்சு வார்த்தையே கிடையாதாம்,!ஏதோ விபத்தில். கணவன் மனைவி இரண்டு பேரும் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டு. போய்ப் பேரனைத் தன்னோடு வந்துவிடும்படிப் பெரியம்மா கூப்பிட்டிருக்கிறார்கள்,!அப்பனுக்குச் சரியான ரோஷக்காரப் பிள்ளை. இவர்,!முடியாது என்று. மறுத்து விட்டாராம்,!அப்போது இவருக்கு. இருபதே வயதாம்,!அப்புறமும் ஐந்தாறு வருஷம் இப்படியே போயிருக்கிறது,!ஆறு மாதம் முன்பு. பெரியம்மாவுக்கு ரொம்ப முடியாமல் போனபோது. பேரனை வரவழைத்து.
எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டுக் கண்ணை மூடியிருக்கிறார்கள்,! ..................................................................................”

“ “வரவழைத்து” என்றால்? புவனேந்திரன் சார் எங்கே இருந்தாராம்? “ என்று கதையில் ஈடுபட்டு. நளினி வனவினாள்,

“கோவையில், அங்கேயும் அவருக்குச் சொத்து பத்து நிறைய இருக்கிறதாம்,!துணி மில் இரண்டு,!திருப்பூரில் பனியன் தொழிற்சாலை,! துணி மில்லுக்கு. மிஷின் தயாரிக்கிற தொழிற்சாலை
நிறையச் சம்பாதனையாம்,!அதனால். இதைப் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று இல்லை,!முதல் தடவையாக மூன்று மாதம் முன்பு வந்தார்,! இரண்டாம் முறை வருமுன். என் கழுத்துக்குக் கத்தி வந்துவிட்டது,!
எதற்குச் சொல்லுகிறேன் என்றால். பாட்டியைப் போலவே. பேரனும்; பிடிவாதக்காரர்,!அவரிடம். எனக்காகச்

கொஞ்சம் பதமாய்ப் பார்த்துத்தான் நீ பேச வேண்டும்,!என் வேலை மட்டும் எனக்குக் கிடைத்துவிட்டால். என் காலம் முழுவதும் உனக்கு நன்றியோடு இருப்பேன்,!” என்றார் அந்தக் குடும்பஸ்தர்,!

நளினிக்கு வேதனையாக இருந்தது,!

அவளைக் காட்டிலும். இருமடங்குக்கும் அதிக வயதானவர்,! அவளிடம் போய். இப்படிக் கெஞ்சுகிறாரே,!குடும்பத்தைச் சுமப்பது என்றால். இதுதானா?

இதில் என்ன கஷ;டம் என்றால். அவரது வேலை அந்தரத்தில் ஊசலாடுவது. அவளது முட்டாள்த்தனத்தினால்,!

கிட்டத்தட்ட நூல் அறுந்தே விட்ட நிலை,!

அவளால் போன வேலை,!திரும்பவும் அவருக்கு வேலை கிடைக்க. இயன்ற வரையில் முயற்சி செய்ய வேண்டும்,!

நிச்சயமாக முயற்சி செய்ய வேண்டும்தான்,!ஆனால். முந்தைய நாள் வேண்டிக் கொண்டதற்கு மேலாகப் புவனேந்திரனிடம் என்ன சொல்லி. வலியுறுத்த முடியும்?

நளினி யோசித்துக் கொண்டிருக்கும்போதே. புவனேந்திரனிடமிருந்து. அவளுக்கு அழைப்பு வந்துவிட்டது,!

“முதலாளி அதற்குள் வந்தாயிற்றா?” என்று ஆச்சரியத்துடன் வினவினாள் அவள்,

“ஏழு மணிக்கே வந்து. கணக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறாரே,!இப்போது. நீ வந்தாயிற்றா என்று பார்த்துவரச் சொல்லி அனுப்பினார்,!” என்றார் சற்று முதியவரான கணக்கர்,!

சிறு கவலையுடன் பூவலிங்கத்தை ஒரு தரம் பார்த்துவிட்டு. நளினி எழுந்து நடந்தாள்,

கூடவே நடந்தபடி. “அவரிடம் போய். “முதலாளி” என்றுவிடாதே. அம்மா,!சின்னவருக்கு. அது பிடித்தமாக இல்லை,! பழங்காலப் பழக்கமாக இருக்கிறதாம்,!மரியாதையைக் காட்ட. ஒரு சார் போட்டால். போதாதா என்கிறார்,!” என்றார் கணக்கர்,!

அறையின் உள்ளே சென்றதும். பழைய கால மகாராஜா தர்பார் மாதிரி. முதலில் புவனேந்திரனுடைய பாதுகாவலர்களின் தரிசனம் கிடைத்தது,!

இவர்கள் முன்னிலையில். பூவலிங்கம் சாருக்காக மன்றாட வேண்டுமா?

அவள் எரிச்சலை மறைத்துக்கொண்டு பேச முயற்சிக்கும்போதே. “உட்கார்,!” என்றான் புவனேந்திரன்,!

அவளைச் சற்றுக் கூர்ந்து நோக்கிவிட்டு. “செக்யூரிடி பூவலிங்கம் மீண்டும் வேலை பெறுவது. உனக்கு எந்த அளவுக்கு முக்கியம்?” என்று கேட்டான்,

முகம் மலர. “ரொம்பவே முக்கியம்தான் சார்,!என்னுடைய முட்டாள்த்தனத்தினால் போன வேலை,!மீண்டும் கிடைத்துவிட்டால். எனக்கு நிம்மதியாக இருக்கும்,!அத்தோடு. அவரும். உங்களைப் பார்த்துவிட்டுத்தான் கீழே இறங்கிப் போயிருக்கிறார்,!இரண்டு பாதுகாவலர்களோடு முதலாளி போகும்போது. பாதுகாப்பு பக்காவாகத்தானே இருக்கும் என்று நினைத்தாராம்,!அவர் மேல். தப்பே இல்லை. சார்,!” என்றாள் அவள் அவசரமாக,

“நான் அதைப்பற்றிக் கேட்கவில்லை,!அவரது வேலைக்காக நீ என்ன செய்யக் கூடும் என்று கேட்டேன்,!”

அவன் நிதானமாகப் பேசிய விதம் மனதில் பட. “ என்ன செய்ய வேண்டும் என்கிறீர்கள்?” என்று கவனத்துடன் கேட்டாள் அவள்,

“அடுத்த வாரம். சிம்லாவில் ஒரு மீட்டிங் இருக்கிறது,!தனியே போனால். வேலை முடிந்ததும் போர் அடிக்கும்,!நீயும் என்னோடு வருகிறாயா? பூவலிங்கத்தை வேலையில் சேரச் சொல்லிவிட்டே போகலாம்,!”

சில கணங்கள். நளினிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை,!

எவ்வளவு சாதாரணமாகக் கேட்கிறான்,!

அதிலும். அவனிடம் சம்பளம் வாங்கும் இரண்டு பேரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு,!இவர்கள். அவனைப் பற்றியே கேவலமாக நினைக்கக் கூடுமே என்றுகூடத் தோன்றாதா?

இப்போது. அவர்களை அனுப்பிவிட்டுப் பேசலாம் என்று அவள் சொன்னால் அதுகூடத் தப்பாகத் தோன்றும்,!

அவனைப் போலவே. அவர்கள் இருவரும் அங்கே இல்லாதது

போலப் பாவிக்க முயன்றபடி. "ஏன் சார்?" என்று கேட்டாள் அவள்,

"ஏன் என்றால்?"

"என்னை எதற்காகக் கூப்பிடுகிறீர்கள் என்று கேட்டேன்," என்றாள் அவள்,

"உன் வயதுக்கு. இந்தக் கேள்வி ஒத்துக் கொள்ள முடியாதது,! அல்லது. முட்டாள்த்தனம்,!"

"நான் ஒன்றும் பொருள் புரியாமல் கேட்கவில்லை சார்,!பணம். பதவி. செல்வாக்கு என்று எதையாவது கையில் வைத்துக்கொண்டு. ஆண்கள் இந்த மாதிரி அத்து மீற முயற்சிப்பது. இந்தக் காலத்தில் ரொம்பவே பழக்கமாகிக்கொண்டு வருகிறது என்று எனக்கும் தெரியும்,!நான் கேட்பது அதுவல்ல,!உங்கள் பணத்துக்கு. எத்தனையோ பெண்கள். விருப்பமாகவே வரக் கூடுமே,!என்னை எதற்காகக் கேட்கிறீர்கள். என்று கேட்டேன்,!" என்று பொறுமை காட்டி விளக்கம் கொடுத்தாள் அவள்,

ஒரு சின்ன முறுவல் தோன்றி மறைய. "உனக்குப் பேசத் தெரிகிறது, அதனால். போரடிக்காது,!" என்பது அவனது விளக்கமாக இருந்தது,!

பேசத் தெரிகிறதா? நன்றாகக் கேட்டுக்கொள் என்று உள்ளூரக் கறுவியவாறு. "ஒரு காலத்தில். மற்ற நாட்டு மக்கள். நம் நாட்டு உப்புக்காகத் தங்கமும். வைரமுமாகக் கொண்டு வந்து கொட்டினார்களாம்,!பாரம்பரியமாகக் கடை நடத்தும் நீங்கள். அந்தப் பழங்கதையை நினைத்து. வெறும் உப்புக் கல்லுக்காக. வைரக்கல்லின் விலையைக் கேட்கலாம்,!ஆனால். நான் சாதாரணக் குடும்பத்தைச் சேர்ந்த பெண். சார்,!உப்பே இல்லாமல் சமைத்தாலும் சமைப்பேனே தவிர. வைரக்கல்லின் விலையைக் கொடுத்து உப்பு வாங்க. நான் தயாரில்லை,!ரொம்பவும் தயவு பண்ணி. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்,!" என்றாள் நளினி. போலிப் பணிவுடன்,!

பதிலுக்குக் கண்டபடி கத்தப் போகிறான் என்று அவள் எதிர்பார்த்தபோது. அவள் சற்றும் எதிர்பாராத விதமாக. வெளேரென்று வரிசைப் பல் தெரியப் புவனேந்திரன் வாய் விட்டு நகைத்தான்,!

ஒரு கணம் பிரமித்த நளினி. உடனேளே சுதாரித்தாள்,

இந்த மனிதன் சரியானவன் அல்ல,!நல்லவனாக இருந்திருந்தால். இந்த மாதிரிக் கேட்டிருக்க மாட்டான்,!இவனது சிரிப்பு எவ்வளவுதான் நன்றாக இருந்தாலும். ரசிப்பது சரியல்ல,!

“விஷயம் அவ்வளவுதான் என்றால். நான் போகிறேன். சார்,!”

“ஆமாமாம்,!இன்று. நீ இன்னும் வேலையைத் தொடங்கவே இல்லை. அல்லவா? இப்போதே. அரை மணி நேரம் விரயம்,!போய் வேலையைப் பார்,!“ என்றான் புவனேந்திரன்,!

ஒன்றுமே நடவாதது போன்று. சர்வ சாதாரணமாக,!

அப்படியானால். புவனேந்திரன் உண்மையாகக் கேட்கவில்லையா? அவளைப் பற்றி அறிவதற்காக இருக்குமோ?

உண்மையோ. பொய்யோ,!சம்பந்தம் இல்லாத இரண்டு பேரை வைத்துக்கொண்டு. இந்த மாதிரி விஷயத்தைப் பேசுவது ஊகூம், ஒன்றும் சரியே இல்லை,!

யோசித்தவாறே நடந்தவளுக்கு. அறையை விட்டு வெளியே வந்ததும். கால்கள் தயங்கின,!

அங்கே அலுவல் அறையில். பாவம். பூவலிங்கம் காத்திருப்பாரே,!

அதற்காகப் புவனேந்திரன் கேட்டது போல நடப்பது முடியாத காரியம்,!ஆனால். அவளுடைய தந்தை போன்ற வயதுடைய ஒருவரின் முகத்தில் நிராசை பரவுவதைக் காண. அவளுக்கு வேதனையாக இருந்தது,!

அவரது தலைவிதியை வேறு யாராவது. அவரிடம் சொல்லட்டும்,

கீழே அலுவல் அறைக்குப் போகாமலே. “லிஃப்ட்” வழியாக மூன்றாம் தளத்தை அடைந்து. அங்கே தன் வேலையை நளினி தொடங்கினாள்

ஆனால். சற்று நேரத்தில். “நளினியிடம் ஒரு வார்த்தை பேச வேண்டும்,!” என்று பூவலிங்கத்தின் குரல் கேட்கவும். அவளுக்குக் கலக்கம் உண்டாயிற்று,!

இதிலிருந்து தப்ப வழியே இல்லையா என்று எண்ணும்போதே. காவல் அதிகாரியின் குரல். கொஞ்சம் கணீர் என்று இருப்பதுபோல ஒரு சந்தேகம் தோன்றியது,!

சமாளித்துக்கொண்டுவிட்டாரா?

"அவளால். உனக்கு வந்த துன்பம் போதாதா? போ, போ, உன்னிஷ்;டம்,!" என்று தளத்து நிர்வாகியின் எரிச்சலுற்ற குரலைத் தொடர்ந்து பூவலிங்கத்தின் காலடி ஓசை அவளை நெருங்கியது,!

சங்கடத்துடன் அவள் திரும்பியபோது. மலர்ந்த முகத்துடன். "ரொம்ப நன்றி. நளினிம்மா,!" என்றார் அவர். மகிழ்ச்சியோடு,!

அவள் புரியாமல் நோக்குகையில். "எனக்காக முதலாளியிடம் ரொம்பவும் வாதாடி. மீண்டும் வேலையை வாங்கித் தந்திருக்கிறாய்,! இப்போதே வேலையைத் தொடர்ந்து பார்க்கும்படி. சார் சொல்லிவிட்டார்,!அதுதான் நன்றி சொல்லிவிட்டுப் போக வந்தேன்,!" என்றார் அவர்,!

"நான் ........................................................................................................... நான் பெரிதாக ஒன்றும் சொல்லவில்லை. சார்,! "

"முதலாளி மீண்டும் வேலைக்குச் சேர்க்கும் அளவுக்குச் சொல்லியிருக்கிறாய்,!அதுவே எவ்வளவு பெரிய காரியம்,!என் குடும்ப முழுதுக்குமே நிம்மதியை மீட்டுத் தந்திருக்கிறாய்,!நன்றிம்மா, இனி நான் வேலையைப் பார்க்கிறேன்,!" என்று சென்றார். அவர்,!

நளினிக்கு ஒரே ஆச்சரியமாகிப் போயிற்று,!

முடியாது. முடியாது என்று அவ்வளவு சொல்லிவிட்டு. அதற்குமேலாக என்னென்னமோ அசிங்கமாகப் பேசி அவளுக்கு வெறுப்பேற்றிவிட்டு. பூவலிங்கம் சாருக்கு வேலையை மறுபடியும் கொடுத்திருக்கிறானே,!

இவன் என்ன மாதிரி மனிதன்?

கிளம்பி வீட்டுக்குச் செல்லுகிற நேரம். "உன்னத"த்தின் அகன்ற படிகளில் . அவள் புவனேந்திரனைச் சந்திக்க நேரவும் அவனிடமே "அழுக்கும் மண்ணும் கலந்த உப்பு என்று தெரிந்தும். வாங்குகிறீர்களே ,!" என்று அதிசயம் காட்டிக் கேட்டாள்,

குத்தல் புரிந்தும் ஆத்திரப்படாமல். "அது முன்பு," என்றான் அவன், "எப்பேர்ப்பட்ட தண்டனை கிடைக்கும் என்று தெரிந்துவிட்டதால்.

பூவலிங்கத்துக்கு இனித் தவறு நடக்கவிடும் துணிவிராது,!எனவே. அவர் மிகச் சிறந்த காவலராகக்கூட ஆகிவிடக் கூடும்,!ம்ம்ம் அதாவது. உன் மொழியில் சொல்லப் போனால். அழுக்கு. மண் அனைத்தும் நீக்கிய பரிசுத்தமான உப்பு,!" என்று முறுவலித்தான் புவனேந்திரன்,

அவன் சொன்ன தினுசில். கூடச் சேர்ந்து சிரித்தபோதும். உள் மனம் அதில் ஒன்றாமல். உள்ஞ்ர ஓர் ஏமாற்றம் பரவுவதை நளினியால் உணர முடிந்தது,!

ஏன்?

# அத்தியாயம் -4

புவனேந்திரனின் பேச்சில். காரண காரியம் சரியான விகிதத்தில் இருந்தது,!

எனவே. அது பற்றிப் பாராட்டத்தான் வேண்டும்,

அத்தோடு. பூவலிங்கத்தின் துன்பம் தீர்ந்தது என்று. அது வேறு ஒரு பெரிய நன்மை விளைந்திருப்பது. இன்னமும் சந்தோஷமாக இருக்க வேண்டும்,!

ஆனால். ஏதோ எதிர்பார்த்தது நடவாத ஏமாற்றம். அவளுள் ஏன் வந்தது?

ஒரு வேளை. அவள் சொன்னதற்காகவென்று புவனேந்திரன். பூவலிங்கத்துக்கு வேலை கொடுக்கவில்லை என்பதாலா ?

என்ன பைத்தியக்காரத்தனம்?

இவ்வளவு பெரிய நிறுவனத்தின் தலைவன். வெறும் மூன்று மாதங்களுக்கு முன்பாக. அங்கே வேலைக்குச் சேர்ந்த ஒரு பெண்ணின் பேச்சுக்காக மட்டுமாய்ச் செயல்படுவான் என்று அவள் எதிர்பார்த்தால். அது முட்டாள்த்தனம் அல்லவா?

இந்த மாதிரி அசட்டுத்தனங்களுக்கு இனி இடம் கொடுக்கக் கூடாது என்று முடிவு செய்த பிறகே. அன்று அவளால் உறங்க முடிந்தது,!

ஆனால் மறுநாளே. தன்னுடைய இன்னோர் அசட்டுத்தனம் நினைவு வர. அலுவலுக்குச்  சற்று முன்னதாகவே கிளம்பிச் சென்றாள்,

அவள் எதிர்பார்த்தது போலவே. புவனேந்திரனும் முன்னதாகவே வந்து கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தான்,!

அனுமதி கேட்டுக்கொண்டு உள்ளே சென்றவள். அவனிடம் தன் வேலையைப் பற்றிக் கேட்டாள்,

பூவலிங்கத்துக்கு வக்காலத்து வாங்கிப் பேசிய வேகத்தில் விட்ட வேலை,!இப்போது. அவருக்கே வேலை மீண்டும் கிடைத்துவிட்டபோது. அவளை எப்படி வெளியேற்றுவான்?

அவனும் அதையேதான் சொன்னான்,

“பூவலிங்கத்தின் வேலைக்காகப் பேசிய வேகத்தில்தானே. உன்

வேலையையே விட்டாய்,!அவருக்கே வேலை கிடைத்துவிட்ட பிறகு. உன் வேலை எப்படிப் போகும்? இடையில் நடந்ததைடு எல்லாவற்றையுமே ரப்பரால் அழித்த மாதிரி. அடியோடு மறந்துவிடு,!" என்றான் அவன்,

அவனது "எல்லாவற்றையுமே" ஒன்றை உணர்த்த. "அவருக்கு வேலையைக் கொடுப்பதாக முடிவு பண்ணிவிட்டு. என் என்னிடம் ஏன் அப்படிக் கேட்டீர்கள்?" உள்ளுர எரிச்சலுடன் வினவினாள் அவள்,

"உன்னைப் பற்றி மதிப்பிட முயன்றேன் என்று வைத்துக்கொள்ளேன்,!" என்று சிறு இறுக்கத்துடன் கூறி முறுவலித்தவன். அடுத்து. "ஆனால். இனியேனும் எதற்கும் அவசரப்பட்டுப் பேசாமல். இந்த இடத்துடைய அடுத்த உரிமையாளரிடம் நல்ல பெயர் வாங்கு,!" என்று ஆலோசனை என்ற பெயரில். அவளை அதிர வைத்தான்,!

நிஜமாகவே நளினிக்குப் பேரதிர்ச்சிதான்,!

தூக்கிவாரிப் போடத் திகைப்புடன் அவனை நோக்கி. "எஎ என்ன சொன்னீர்கள். சார்?

அடு த்த உரிமையாளரா? ஏன்? நீங்கள்தானே உரிமைக்காரர் ?

வேறு யார்?" என்று உளறிக் குழறி வினவினாள்,

"இப்போதைக்கு என்னுடையதுதான், ஆனால். நான் இதை விற்றுவிடும்போது?"

"விற்பதா? ஏன்? இப்போதுதானே. உங்கள் கைக்கு வந்தது? அதற்குள் எதற்காக விற்பது?" என்று வியப்பும் கோபமுமாக மீண்டும் வினவினாள் அவள்,

அவனிடம் பணி புரிகிறவள் என்கையில். இந்தக் கேள்வி. அதிகப் பிரசங்கித்தனம்தான்,!ரொம்பவே,!ஆனாலும். அவளால் கேளாதிருக்க முடியவில்லை,!

லேசாகப் புருவங்களை உயர்த்தியபோதும். நல்லவேளையாக. அவனும். அவளைத் தவறாக எடுத்துக் கொள்ளாமல் பதில் சொன்னான்,!

"நான் தொழில் நடத்துகிறவன் . நளினி,!லாப நஷ்;டக் கணக்குப்

பாராமல். எந்தத் தொழிலிலும் வெற்றி பெற முடியாது,!"உன்னத"த்தில் முடங்கிக் கிடக்கும் பணத்துக்கு. லாபம் போதாது,!கிட்டத்தட்ட லாபமே இல்லை என்றே சொல்லலாம் ,"

இவனுடைய பாட்டியம்மாவைப் போல. இவன் கௌரவத்துக்காக இந்த வளாகத்தை நடத்தவில்லை,!சரிதான்,!ஆனால். விட்டுவிட எண்ணுவதன் காரணமும் சரியில்லையே,!லாபம் ஏன் இல்லை என்று யோசிப்பதை விட்டு ............................................................

எரிச்சலோடு. "லாபம் எப்படி இருக்கும்? " என்று வெடித்தாள் நளினி,!" லாபம் வருவதற்குக் கடையில். விற்பனையும் நடக்க வேண்டும் அல்லவா? இந்த மாதிரி; மகாராஜாக்களுக்கு மட்டும் கடை நடத்தினால். அதுவும் மகாராஜாக்களே இல்லாத இந்தக் காலத்தில் நடத்தினால். விற்பனை எங்கே நடக்கும்? லாபம்தான் எப்படி வரும்?"

நிச்சயமாக அதிகப்படியான பேச்சுதான்,!ஆனால். அவன் எப்படி இதை விட்டுப் போகலாம் என்ற ஆத்திரத்தை அவளால் அடக்க முடியவில்லை,!அதுவும். சீர் செய்யக் கூடிய ஒன்றைச் செய்துபாராமலே. வெளியேறுவதா?

கண்ணில் சிரிப்புடன். "தலையில் கிரீடம் தரித்தால்தான் மகாராஜாவா? ரிலையன்ஸ். விப்ரோ. டாடா உரிமையாளர்களையெல்லாம் என்ன பெயர் சொல்லிக் கூப்பிடுவாயாம்?" என்று கேட்டான் அவன்,!

"மன்னர்களுக்கு நிகரான பணக்காரர்கள்தாள், ஆனால். அவர்கள் எத்தனை பேர்? விரல் விட்டு எண்ணுகிற அளவுதானே? அப்படி இருக்கும் ஒரு சிலருக்காக மட்டும்தான் கடை நடத்த வேண்டுமா?"

"பின்னே? நடைபாதையில் குவித்துப் போட்டு விற்பார்களே. அதுபோலச் செய்ய வேண்டும் என்கிறாயா?"

"இது அல்லது. அதுதானா? இரண்டுக்கும் நடுவே. மத்திய தரம் என்று ஒன்றும் கிடையாதா? அத்தோடு. இப்போதெல்லாம் நீங்கள் சொல்லுகிற ராஜாக்கள் குடும்பத்தாரே. எப்போதுமே;. தகதகவென்று அணிந்து கொண்டிருப்பதில்லை. தெரியுமா? என்னோடு படித்தவள் ஒருத்தி. அவளது பிறந்த நாளைக்கு அவளைச் சுற்றுகிற பனிரண்டு பேருக்கு இரண்டாயிரம்ரூபாய் பெறுமானமுள்ள கைக்கடிகாரம் வாங்கிக் கொடுத்தாள், அவள் அடிக்கடி அணிகிற

உடை என்ன தெரியுமா? ஜீன்ஸ் பாண்டும் டாப்சும்தான், விலை உயர்ந்ததும் இருக்கும்,!ஆனால். நீங்கள் இளக்காரமாகச் சொன்னீர்களே. அதுபோல நடைபாதைக் கடைகளில் அவள் பீராய்வதையும் நான் பார்த்திருக்கிறேன்,!அவளுக்குப் பொருந்துவதாக இருக்கவேண்டும் என்பதுதான் அவளுக்கு முக்கியம்,!அப்படித்தான் இப்போது எல்லோருமே பார்ப்பது,!“

“அப்படிப் பார்த்து வாங்க. இங்கே எதுவும் இல்லை என்கிறாயா? “

“பார்ப்பதற்கு இருந்து என்ன செய்வது? வாங்கக் கூடிய விலையில் இருக்க வேண்டுமே,!இங்கே ஜவுளிப் பிரிவில். நான் வந்த நாளில் இருந்து. ஒரு செட் துப்பட்டாத் துணிகளை நான் பார்த்து வருகிறேன், அவற்றில். ஒரு பீஸ்கூட விற்றிருப்பதாக எனக்குத் தெரியவில்லை,! பார்ப்பதற்கு. மிகவும் அழகாக இருக்கும், ஆனால். விலை என்ன தெரியுமா? மீட்டர் ஆயிரத்தி இருநூறுரூபாய்,!இரண்டரை மீட்டர் என்றால். ஒரு துப்பட்டாவுக்கே. மூவாயிரம்ரூபாய் ஆகிவிடும்,! துப்பட்டாவுக்கே அவ்வளவு என்றால். அதற்குப் பொருத்தமான ஒரு சுரிதார் செட்டுக்கு. ஆறேழு ஆயிரங்களாவது ஆகும்,!இதே துப்பட்டாத் துணியை என்னிடம் கொடுத்தால். அந்த இரண்டரை மீட்டரில். லைனிங் கொடுத்து. அருமையான ஒரு சல்வாரையே தைத்துவிடுவேன், எந்தக் கோடீசுவரர் வீட்டுத் திருமணத்துக்கும் அணிந்து செல்லக் கூடிய மாதிரியாய்ப் பிரமாதமாக இருக்கும்,! அதுபோல சல்வார் செட்டே. கிடைக்கிறது, அப்படியிருக்க. ஒரு துப்பட்டாவுக்கு இந்த விலை கொடுத்து. யார் வாங்குவார்கள்?” என்று. இந்த மூன்று மாத காலமாக அவள் எண்ணியதையெல்லாம். வேகமாகப ;புவனேந்திரனிடம் கொட்டி முடித்தாள் நளினி,

அவன் குறுக்கிட. அவள் இடமே கொடுக்கவில்லை,!

அவன் குறுக்கிட விரும்பியதாகவும் தெரியவில்லை,!

புவனேந்திரன் யோசிப்பது போலத் தோன்றவும். தன் கருத்துகளை மேலும் வலியுறுத்த விரும்பி. “பெரிய பெரிய பணக்காரர்கள் கூட. இப்போதெல்லாம் வீட்டில். உடல் சுகத்தைப் பார்த்துப் பருத்தி நூல் துணிகளைத்தான் அணிகிறார்கள். சார்,!எப்போதும் பட்டுத்தான் என்று பந்தாக் காட்டுகிற காலம். எப்போதோ முடிந்துவிட்டது,! என்ன. இவர்கள் ஒரு நாலு தரம் கட்டிவிட்டுத் தூர வீசுவார்கள், மற்றவர்கள். கூடப் பத்துத் தடவை உடுத்துப் பழசான பிறகு.

பாத்திரக்காரனுக்குப் போடுவார்கள்,!அவ்வளவுதான் சார். வித்தியாசம்,!“ என்று மேலும் அடுக்கினாள்,

லேசாக முறுவலித்து. “நீ வேலை செய்ய வேண்டியது. விற்பனைப் பிரிவில் என்று தோன்றுகிறது,!வாங்கப் பிடிக்கிறதோ. இல்லையோ. சுற்றி வளைத்துப் பேசி. நிச்சயமாகத் தலையில் கட்டிவிடுவாய்,” என்றான் அவன்,!

“நான் சும்மா சொல்லவில்லை. சார்,!ஒரு தரம் என்னோடு வந்து பாருங்கள். உங்களுக்கே புரியும்,!“ என்றாள் அவள்,

அவன் பேசாதிருக்கவும். “அவசரப்பட்டு “உன்னத”த்தை விற்றுவிட மாட்டீர்களே. சார்?” என்று கவலையுடன் கேட்டாள் நளினி,

அவன் பேசாதிருக்கவும் கலங்கி. “சார். இது உங்கள் தாத்தாவுடைய தந்தை தொடங்கியதாமே,!அவருக்குப் பிறகு. உங்கள் தாத்தாபாட்டி தொடர்ந்து நடத்தியது,!எழுபது ஆண்;டுகளுக்கும் அதிகமாக. வெகு கம்பீரமாக நடந்து வருவது,!விரைவில் வைரவிழாவே கொண்டாடலாம்,!இப்படி ஒரு நிறுவனம். தொடர்ந்து நாலாவது தலைமுறையாக உங்களிடம் இருப்பது எவ்வளவு பெருமைக்குரிய விஷயம்,!அதைப் போய் விற்பதா? “ அவனது மனதைத் தொட முயன்றாள் நளினி,

“இப்போதுதான். பாட்டி நடத்திய விதத்தைத் தொடர்வது சரியில்லை என்று வாதாடினாய், உடனேயே. பாரம்பரியத்தை விடலாமா என்கு கேட்கிறாயே,!”

ஒரு கணம் திகைத்துவிட்டு. “பாருங்கள் சார். உங்கள் கொள்ளுத் தாத்தாவின் உடை போலவா. நீங்கள் அணிகிறீர்கள்? அவருடைய பேரனான நீங்கள் காலத்துக்கு ஏற்றவாறு மாறவில்லையா? அதைப் போலக் கடையில் உள்ள பொருட்களை. இன்றைய நாகரீகத்துக்கு ஏற்றபடி மாற்றலாமே என்றேன், நீங்களானால். வழி வழியாய் வந்த குடும்பச் சொத்தையே விற்கப் போகிறேன் என்கிறீர்களே. சார்,!” என்றாள் அவள்,

“வழி வழியாய் வந்த குடும்பச் சொத்தா? அப்படி என் கைக்கு வந்த இந்தக் குடும்பத்துச் சொத்தை. நான் விரும்புவேன் என்று உனக்கு என்னம்மா. நிச்சயம்?”

புவனேந்திரனின் குரலில் லேசாக வெளிப்பட்ட கைப்பு.

பூவலிங்கத்தித்தின் பேச்சை நினைவுறுத்த. நளினிக்குச் சுரீலென்றது,!

வழி வழியாக என்றால். அவனுடைய தந்தைக்கு. இந்த “உன்னதம்” கிடைக்கவில்லையே,!

அவனுடைய பெற்றோரை ஒதுக்கிய பாட்டி. வேறு வாரிசு இல்லாததால் மட்டுமே. அவனிடம் கொடுத்த சொத்தின்மீது.
அவனுக்கு எப்படி ஈடுபாடு வரும்?

அந்த வெறுப்பும் சேர்ந்ததால்தான். இலகுவாக விற்றுவிட முடிவு செய்தானோ?

அப்படியானால். விற்றுவிட்டுப் போயே விடுவானா?

அவசரமாக யோசித்து. “ஆனாலும். ஒரு தொழிலை மிகவும் வெற்றிகரமாக நடத்த வாய்ப்பு இருக்கும்போது. அதை முயன்று பாராமலே. விட்டு விடுவீர்களா? பெரிதாகத் தொழில் நடத்துகிறவன் என்று சொல்லிக் கொண்டீர்களே,!ஒரு தடவை. ஒரே ஒரு தடவை என்னோடு வந்து பாருங்கள். சார்,!நான் சொல்லுகிற மாதிரித் துணிகளை விற்கிற இடங்களில் கூட்டம் எப்படி அலை மோதுகிறது என்று நீங்களே நேரில் பாருங்கள்,!அப்போதுதான் . நான் சொல்வது உங்களுக்குப் புரியும்,!” என்றாள் அவள். குரலில் சிறு மன்றாடலுடன்,

“ம்ம்ம்
” என்று புவனேந்திரன் யோசிக்கும்போதே. “கூட்டம் அதிகமாக இருக்கும் இடங்களுக்குப் போக வேண்டாம். சார்,!”
என்றான் அவனுடைய காவலர்களுள் ஒருவன்,!

“ஆமாம் சார், அவர்கள் சொல்லுகிற மாதிரி. கூட்டம் அலை மோதுகிற இடங்களில். கண்டபடி மேலே வந்து விழுவார்கள். சார்,
அவர்களை. யார் என்ன என்று கண்டு ஒதுங்கவோ. விலக்கவோ முடியாது,!” என்றான் மற்றவன்,

தன் காதுகளையே நம்ப முடியாத அளவுக்கு. நளினிக்கு ஆச்சரியமாகிப் போயிற்று,!

உத்தமப் பெண்கள் என்று சொல்லப் படுகிறவர்கள்கூட. கூட்ட நெரிசல்களில் மேலே இடிப்பவர்களைச் சிறு எரிச்சலோடு அலட்சியப்படுத்துகிற காலம் இது,!ஆண்பிள்ளையான இவன் மீது அடுத்தவர்கள் பட்டுவிடுவார்களே என்று. அங்கே போகாதே. இங்கே செல்லாதே என்று ஆலோசனை கூறப்படுகிறதே,!

அதுவும். அவனிடம் பணி புரிகிறவர்களே ஆலோசனை கூறுகிறார்கள்,!

புவனேந்திரனும். அதை ஏற்று. அது பற்றிச் சிந்திப்பதாகவும் தோன்றவே. அவளுக்கு இன்னமும் ஆச்சரியமாகிப் போயிற்று,!

இந்தப் பாதுகாவலர்கள்,!இந்த ஆலோசனை,!சிந்தனை,!ஏன்?

ஆனால். அதைப் பற்றி விசாரிப்பதைவிட முக்கியமான விஷயம் வேறு இருக்கிறது,!

நூலையும். துணியையும் மொத்த உற்பத்தி செய்கிறவனுக்குப் பொருட்களின் சில்லறை விற்பனை பற்றிக் கற்றுக்கொடுத்தாக வேண்டியிருக்கிறது,!

எனறே அவனுக்குச் சரியாக. "சரி சார், கூட்ட நேரத்தில் போக வேண்டாம், காலை பத்து மணிக்குப் போனால். எந்தக் கடையிலும் கூட்டமே இராது,!நாளைக் காலை வாருங்கள். போய்ப் பார்க்கலாம்,!" என்று அழைத்தாள் ,

"மறதி, மறதி,!நாளை ஞாயிற்றுக் கிழமைம்மா,!கடைகள் மூடியிருக்குமே,!"

"ஒன்றும் மறக்கவில்லை,!உங்கள் "உன்னதம்" மட்டும்தான். பழைய காலத்து வழக்கப்படி ஞாயிற்றுக் கிழமை மூடியிருப்பது,! இப்போதெல்லாம். பெரும்பாலும் ஆண் பெண் இருவருமே வேலை செய்து சம்பாதிப்பதால். "சண்டே ஷாப்பிங்" என்று. இப்போதெல்லாம் ஞாயிறன்றுதான் கடைகளில் அதிக விற்பனை,! ஆனால். வார முழுதும் வேலை செய்த இறுக்கம் தளரக் காலையில் சற்று ஓய்வாக வீட்டில் இருந்துவிட்டுத் தாமதமாகக் கிளம்புவார்கள்,! அதனால்தான். காலையில் கூட்டமிராது,!"

சற்று வியப்புடன் அவளைப் பார்த்தான் அவன், "நிறையத் தெரிந்து வைத்திருக்கிறாயே,!" என்றான் பாராட்டுதலாக, "அங்கே எல்லாம் உற்பத்தித் துறையில் இருப்பதால். இது போன்ற விவரங்கள் புதிதாக இருக்கிறது,!"

வாயால் ஒன்றும் சொல்லாவிட்டாலும். அவனது உடை. பெல்ட் போன்றவற்றை. ஒரு தரம் பாராதிருக்க நளினியால் முடியவில்லை,!

அதைக் கவனித்து. "உடை. என் வீட்டுக்கு வந்து. அளவெடுத்துத்

தைத்து வருவது, அவர்களே. பொருத்தமாக மற்றவற்றையும் கொண்டுவந்து விடுவார்கள், கொஞ்சம் அதிகச் செலவாகும்,! ஆனால். இவற்றுக்காக நான் வெளியே அலைந்து திரிய நேராது,!“ என்று. அவனது வழக்கமான சிறு முறுவலுடன் கூறினான் அவன்,

வெளியே அலைந்து திரிய நேராதிருப்பதற்காக. அதிகம் செலவு செய்கிறானா? நாலு பொருட்களைப் பார்த்து. நமக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுப்பதே ஒரு சுகம் என்று இவனுக்குத் தெரியாதா? நேரம் இல்லையா? பிடிக்கவில்லையா? அல்லது .......................................

மீண்டும் நளினிக்கு ஏதோ உறுத்தியது,!என்னவென்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாத. ஏதோ ஒன்று,!

பலமுறை யோசித்தும். அது என்னவென்று. நளினிக்கு ஒன்றும் புரியவில்லை,!

ஆனால். மறுநாள் குறிப்பிட்ட இடத்தில். புவனேந்திரன் அவளுக்காகக் காத்து நிற்பதைப் பார்த்தபோதோ. உறுத்தல் பற்றிய நினைவே மறந்து போயிற்று,!

# அத்தியாயம் -5

கிட்டத்தட்ட புவனேந்திரனின் "உன்னதத்"தின் அளவிலேயே அமைந்திருந்த. சில பெருங்கடைகளை அவனுக்குக் காட்டிவிட்டு. ஒன்றின் உள்ளே நளினி அவனை அழைத்துச் சென்றாள்,!

வாங்குவோரின் பணப்பைக்குத் தக்கபடி. என்னென்ன மாதிரித் துணி வகைகள் இருக்கின்றன என்று எடுத்துக் காட்டினாள், தைக்காத துணிகள். தைத்துத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் ஆடைகள் ………………., எல்லா வகையிலும். விலை குறைந்தது. கூடியது எல்லாமே இருப்பதையும். சின்னச் சின்ன அலங்கார வேலைகளுக்கு ஏற்றபடி விலை கூடுவதையும் எடுத்துக் காட்டி விளக்கினாள்,
சலிக்காமல் காட்டிய விற்பனைப் பெண்ணுக்காகத் தனக்கு ஒரு சல்வார் செட்டையும் வாங்கிக் கொண்டாள்,

ஆனால். பில் போடப் போனபோது. புவனேந்திரன் பணம் கொடுக்கவும். அதைத் தடுக்க முயன்றாள்,

ஆனால். "இது உன் ஞாயிறு ஓய்வைத் தியாகம் செய்து. "உன்னதத்"துக்காகப் புரிந்திருக்கும் அதிகப்படிப் பணி, அதனால். இந்தச் செலவுக் கணக்கு "நிறுவனத்"தைதான் சார வேண்டும்,!" என்று முடித்துவிட்டான் அவன்,

ஆடைகளுக்கேற்ற விதமாய். விலை குறைந்த "காஸ்ட்யூம்; " நகைகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தபோது. "கூட்டம் அதிகமாகிறது. பாஸ்,!" என்று. பாதுகாவலர்களில் ஒருவன் வந்தான்,

உடனேயே. "கிளம்புவோம்,!" என்று புவனேந்திரன் சொன்னது. நளினிக்கு ஏமாற்றமாகத்தான் இருந்தது,!

ஆனால். காரை நிறுத்திவிட்டு வந்த இடத்தைப் பார்த்ததும். "பார்த்தீர்களா. சார்? இந்தக் கார் நிறுத்துமிடம் நிரம்பிப் போயிற்று,! உங்களது போல. டயோட்டா. பென்ஸ். ஸ் கோடா போன்ற வண்டிகள்கூட. எத்தனை நிற்கின்றன. பாருங்கள்,!நிறுத்த இடம் இல்லாமல். இடம் தேடிச் சுற்றுகிறவை எத்தனை? இந்த மாதிரிக் கார்களில் வருகிற
உங்கள் பாஷையில். தலையில் மகுடம் வைக்காத மகாராஜாக்கள்,! அவர்களும்கூடத் தங்களுக்குத்

தேவைப்பட்டவைகளை வாங்க. இங்கேதானே குமிகிறார்கள்,!”
என்று தன் கூற்றுக்கு. அவள் மேலும் ஆதாரம் காட்டவும்.
புவனேந்திரன் வாய்விட்டுச் சிரித்தான்,!

“உன் கருத்தை மற்றவர்கள் மீது எப்படித் திணிக்கிறாய் என்பது.
மற்றெல்லாவற்றையும் விட. மிக நன்றாகத் தெரிகிறது,!பா வம்.
அப்புறமாய் மாட்டிக் கொள்ளப் போகிற அந்த அப்பாவி,!” என்று
மீண்டும் நகைத்தான் அவன்,!

எதற்காக. இதில் இவ்வளவு தீவிரமாக இருக்கிறோம் என்று.
அவளுக்கே புரியவில்லைதான்,!அவனது தொழில்,!அவன்
நடத்துகிறான், அல்லது. மூடுகிறான்,!இதில். அவளுக்கென்ன வந்தது?

என்னதான் வந்ததோ? ஆனால். புவனேந்திரன் இந்த “உன்னதத்”தை
வெற்றிகரமாக நடத்தியே ஆக வெண்டும் என்ற வேகத்தை. அவளால்
விட முடியவில்லை என்பது நிச்சயம்,!

அவனது கேலிப் பேச்சில் முகம் சிவந்தபோதும் சமாளித்துக்கொண்டு.
“அப்படியானால். நான் சொன்னதை ஒத்துக் கொள்கிறீர்கள் என்று
அர்த்தமா. சார்?” என்று விடாமல் கேட்டாள் அவள்,

முறுவலோடு. சாரில் ஏறிக் கொள்ளுமாறு சைகை செய்தான் அவன்,
“உன்னைக் கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன்,”

“இல்லை சார், எனக்கு இங்கே கொஞ்சம் வேலை இருக்கிறது,!

. “ “வேலை? என்ன வேலை? “ என்று கேட்டவன். “சொல்லக் கூடாதது
என்றால். வேண்டாம்,!” என்று சேர்த்துச் சொன்னான் ,

அவள். தன் பெரிய கைப்பையைத் திறந்து. உள்ளிருந்தவற்றை எடுத்துக்
காட்டினாள்,

அலங்கார வேலைகள் செய்திருந்த பல துண்டுத் துணிகள், “சில
கடைகளில் ஆர்டர் எடுத்துச் செய்து கொடுக்கிறேன். சார்,
“உன்னதத்”திலும் இதைக் காட்ட வந்தபோதுதான். “விண்டோ
டிஸ்ப்ளே” செய்கிறாயா என்று. இப்போதைய பணியைத் தந்தார்கள்,!”
என்று. விவரமும் தெரிவித்தாள்,

“ஓ,!அதனால்தான். குந்தன். சிக்கான் என்று அப்படி அடுக்க முடிந்ததா?
குட்,!” என்றான் பாராட்டுதலாக, “போய். உன்

வேலையைப் பார்,!நான் கிளம்புகிறேன்,"

"ஆனால் சார்....இன்னமும். நீங்கள் ஒரு முடிவும் சொல்லவில்லையே,!"

"நிஜமாகவே. அந்த அப்பாவி. ரொம்பவே பாவம்தான்,!" என்று மீண்டும் முறுவலித்தான் அவன், உடனேயே. "யோசிக்கிறேன். நளினி,!நீ சொன்னது,. என்னைக் கூட்டி வந்து இங்கே கடைகளில் காட்டியது அனைத்தையும் யோசித்துப் பார்க்கிறேன்,! இப்போதைக்கு என் பதில் இதுதான், ஓகே,!பிறகு சந்திப்போம்,!" என்றுவிட்டுக் கிளம்பினான் புவனேந்திரன்,

ஆனால். அந்த "பிறகு சந்திப்போமி"ன் போருள். மறு நாள் அலுவல் அறையில் சந்திப்பது அல்ல. அவன் ஊரை விட்டுச் சென்று. திரும்பி வந்தபின் சந்திப்பது என்று வேலைக்குச் சென்றதும் அறிய வந்தபோது. அவளுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது,!

ஊருக்குப் போவதாகத் தன்னிடம். அவன் ஒரு வார்த்தை சொல்லவில்லையே என்று வருத்தமாகவும் இருந்தது,!

ஆனால். அவளது ஏமாற்றம். வருத்தம் பற்றி யாரிடம் சொல்வது?

மறைக்க வேண்டும் என்று தோன்றவில்லை,!ஆனாலும். சகஜமாகப் பேசிப் பழகும் பெற்றோரிடம்கூட. இதைப் பற்றிச் சொல்ல. நளினிக்குப் பிடிக்கவில்லை,!

நிலைமை புரியாமல். அவளைத் தேற்றுவதாக எண்ணி. யாரேனும். ஏதேனும் சொன்னால் எரிச்சல் வரும்,!

ஆனால். இரண்டு நாட்கள் கவனித்துவிட்டு. "என்னடா செல்லம்?" என்று விவரம் கேட்ட தாயிடம். உண்மையைச் சொல்லாதிருக்கவும் அவளால் முடியவில்லை,!

"அருமையான இடம். அம்மா,!வீணாக விட்டுவிடுவார்களோ என்று கொஞ்சம் வருத்தமாக இருக்கிறது,!" என்றாள் மகள்,

"அப்படி விட்டுவிடுவார்கள் என்று எனக்குத் தோன்றவில்லை. நளிம்மா,!தொழில் நடத்துகிறவன் என்று தன்னைத்தானே சொல்லியிருக்கிறார். என்கிறாய், வளாகத்தில் முடங்கிக் கிடக்கும் பணத்துக்கு லாபம் வேண்டும் என்பதுதானே. அவரது விருப்பமும்,! யோசி,!ஞாயிறன்று கடை காட்டக் கூட்டிப் போனாய் என்று

ஆயிரம்ரூபாய்ச் சுரிதாருக்குப் பணம் கொடுத்தாரே. தொடர்ந்து நடத்துகிற எண்ணம் இல்லாவிட்டால். அந்தப் பணம் அவருக்கு விரயம்தானே? அப்படி வீணாக்குவாரா? நீதானே. பிடிவாதமாய் வரச் சொன்னாய். உன் பாடு என்று சும்மா இருந்திருக்க மாட்டாரா? அங்கே அவரது இருப்பிடம் கோவை என்றுதானே சொன்னாய்? அங்கே அவருக்கு வேலை இருந்திருக்கலாம்,. போயிருப்பார்,! எனக்கென்னவோ. நீ சொன்ன வழியில் ஒரு பிரமாதமான திட்டத்தோடு மிஸ்டர் புவனேந்திரன் திரும்பி வருவார் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது,!" என்று சகுந்தலா நிச்சயமாகக் கூறவும். நளினிக்கும் போன உற்சாகம் திரும்பியது,!

அவளுடைய அன்னை சொன்னது சரிதானே?

"உன்னதத்"தைத் தொடர்ந்து நடத்தும் எண்ணம் இல்லாவிட்டால். அந்த ஆயிரம்ரூபாய் அவனுக்கு வீண்தானே? விட்டுப் போகிறவன். அதுவேறு செலவு ஏன் செய்ய வேண்டும்? தொடர்ந்து நடத்துவதானால். இது ஒரு நல்ல முதலீடு,! இவ்வளவு நியாயமாக நடந்தானே என்று. அவளும் விசுவாசமாக இருப்பாள்,!

"நீங்கள் சொன்னது கரெக்ட். அம்மா,!" என்றாள் அவள். குதூகலம் பெருக,!

நளினியின் எதிர்பார்ப்பு நனவாக. விரைவிலேயே. புவனேந்திரன் திரும்பி வந்துவிட்டான்,!ஒரே வாரத்தில்,!

வந்து. தன் உடனடி வேலைகளை முடித்ததும். நளினியைக் கூப்பிட்டுப் பேசினான்,

"நீ சொன்னதை யோசித்துப் பார்த்தேன். நளினி, அதன்படி. நம் வளாகத்தின் விற்பனைப் பொருட்களை மாற்றிவிடலாம் என்று முடிவு செய்திருக்கிறேன்,!" என்றான் அவன்,

முகம் மலர. "அப்படியானால். தொடர்ந்து நடத்தப் போகிறீர்கள்,!" என்று மகிழ்ச்சியோடு கூறினாள் அவள்,

"வேறு வழி? இதை நடத்தாமல் விட்டுவிட்டால். என் காதைப் பிடித்து முறுக்கி. விரட்ட. நீ கோவைக்கே வந்துவிட மாட்டாயா? அந்தப் பயம்தான்,!"

முதலாளியின் காதைப் பிடித்து முறுக்குவதா?

“சா ர்....,!” என்றாள் அவள் திகைப்புடன்,!

அவன் நகைத்துவிட்டு. “அந்த அளவுக்குப் போக மாட்டாய்தான்,! ஆனால். நீ என்னிடம் வலியுறுத்தவில்லை என்று சொல்ல முடியாதுதானே?” என்று இலகுக் குரலில் கூறியவன் தொடர்ந்து. “நீ வாதாடியதில் ஒன்று சரிதான். நளினி, தொழிலில் வெற்றி பெற ஒரு வாய்ப்பு இருக்கும் போது. அதை முயன்று பார்க்காமல் விடுவது. தப்புதான், அத்தோடு. என் இயல்புக்கு. அது பொருத்தம் இல்லாததும் கூட,!அது எப்படியோ நேர்ந்தது, போகட்டும், இப்போது.... “ என்றவாறு அவள் முகத்தைப் பார்த்தவனின் பேச்சு ஒரு கணம் நின்றது,!

“ஏன் அப்படி நேர்ந்தது என்று தெரியும் போலத் தோன்றுகிறது,!” என்றான் ஒரு மாதிரிக் கண்டனக் குரலில்,!

புவனேந்திரனின் எரிச்சலையும். நளினியால் புரிந்துகொள்ள முடிந்தது,!யாருக்குத்தான். அவர்களது வாழ்க்கை பொது விஷயமாக அலசப்படுவது பிடிக்கும்?

“ “உன்னதம்” வம்பு மடம் அல்ல. சார்,!ஆனால். ரகசியம் என்றும் எதுவும் இராது,!அதிலும். முதலாளியின் விஷயத்தில் எல்லோருக்கும் ஆர்வம் இருப்பது. இயல்புதானே?” என்றாள் அவள். சமாதானமாக,

“ஆனால். என்னைப் பற்றி இவர்களுக்கு என்ன தெரியும். பேசுவதற்கு?” என்றான் அவன் கடுமையான குரலில்,!

ஆனால். உடனேயே முகம் மாறி. “சரிசரி, போகட்டும்,!உன்னை வரச் சொன்ன காரணத்தைப் பார்ப்போம், “ என்றவன். மேஜைமீது இருந்த சில ஃபைல்களைக் காட்டிப் “பிரித்துப் பார்,!அங்கே கோவையில் உள்ளவை. அகில இந்திய அளவில் உள்ளவை என்று சில நிறுவனங்களில் இருந்து. அவரவர்களின் மாதிரிகளை வரவழைத்தேன், துணிகள். ரெடிமேடுகள் எல்லாமே,!முதலில் ஜவுளியில் தொடங்குவோம், பிறகு. எல்லாவற்றிலும் கொண்டு வருவோம்,!இவற்றுள். நம் வளாகத்துக்கு ஏற்றவை. எதெது என்று தேர்ந்தெடுத்துக் கொடு, உடனேயே ஆர்டர் கொடுத்து விடலாம்,!“ என்று அவளை அவசரப்படுத்தினான்,

உற்சாகத்துடன் ஃபைல்களின் பக்கங்களைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவளின் கை நின்றுவிட. “நா னா?” என்று

தயக்கத்துடன் கேட்டாள்
நளினி,

“நீயேதான்,!குறைந்த பட்சமாகத் துணி விஷயம் நீதான் தெரிவு செய்ய வேண்டும், உனக்கு அதில் விஷய ஞானம் இருக்கிறது,! கூடவே. ஆர்வமும் இருக்கிறது,!“ என்றான் புவனேந்திரன்,

அவளால். முடியும்தான், கூடவே. ஆசையும் இருந்தது,!ஆனால் ........

சற்று யோசித்துவிட்டு. “அது முடியாதே. சார்,!” என்றாள் நளினி,!

“ஏன்? ஏன் முடியாது?”

“கடைக்குப் பொருள் வாங்குவது என் வேலை அல்ல. சார்,!” “உன்

ஓ. அதிகப்படி வேலை என்று பார்க்கிறாயா? அதற்குத் தனியாக ”

“ஐயோ. அப்படியில்லை சார்,!” என்று அவன் பேச்சில் குறுக்கிட்டுச் சொன்னாள் அவள், தொடர்ந்து. “இங்கே கிட்டத்தட்டக் கடைசியாக வேலைக்குச் சேர்ந்தவள் நான், பொருட்களைத் தேர்வு செய்து வாங்குவதை. நிர்வாகிகளும். தலைமை விற்பனைப் பொறுப்பாளர்களும் செய்து வருகிறார்கள்,!இதில். என் தலையீட்டை. அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள்,!” என்று விளக்கினாள்,

“சொல்வது நான், செய்வது நீ, இதில். என்னிடம் ஊதியம் வாங்கிக்கொண்டு பணி புரியும் அவர்கள் என்ன ஒத்துக் கொள்வதும். ஒத்துக் கொள்ளாததும்?” என்றான் அவன் சற்று அழுத்தமான குரலில்,

“அது சரி. சார். நீங்கள் முதலாளியாய்ச் சொல்லிவிட்டுக் கிளம்பிவிடுவீர்கள், அப்புறம். நாள் பூராவும் இங்கே அவர்களோடு கூட இருந்து பணிபுரியப் போவது. நான் அல்லவா? சும்மாவே. இது விஷயமாக என்மீது. ஏற்கனவே கோபம் இருக்கிறது,!இதைச் செய்தேன் என்றால். அப்புறம். பெரும் பிரச்சினையாகிவிடும், வேண்டாம் சார்,!” என்றாள் அவள் கவலையுடன்,

“அப்படியே பார்த்தாலும். இந்த அறையில் வைத்து நீ தேர்ந்தெடுப்பது யாருக்குத் தெரியப் போகிறது?”

“இரண்டும் இரண்டும் நாலு. சார்,!இங்கே நான் வந்து போனதும்.

நீங்கள் ஆர்டர் கொடுத்தால். தெரியாதா? இப்போதுதானே சார். பேசினோம். உங்கள் கதையை நீங்களோ. உங்கள் பாட்டியோ சொல்லியா. எல்லோருக்கும் தெரிந்தது?"

"என் கதை,!என்னை பற்றி. யாருக்கு என்ன தெரியும்? என் கதை என்று. எல்லோரும் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்?"
என்று. கசந்த குரலில். ஒரு கரகரப்புடன் கேட்டான் புவனேந்திரன்,

"நடந்ததைத்தான்,!உங்கள் அம்மாவை மணந்ததற்காக. உங்கள் அப்பாவும் சேர்ந்து

வீட்டை விட்டுப் போனது,. உங்கள் பெற்றோர் இருவரும் விபத்தில் விபத்தில் மறைந்தது
,உங்கள் பாட்டி அழைத்த போது,
நீங்கள் வர மறுத்தது ..........................கடைசியாக மரணப்படுக்கையில். உங்களிடம் சொத்துக்களை ஒப்படைத்துவிட்டுப் பாட்டி போனது
இப்படி எல்லாமே. எல்லோருக்குமே தெரியும் சார்,!"

"ஓ " என்று சற்று நேரம் பேசாதிருந்தான் அவன்,

பிரச்சினையின் தீவிரத்தில். அவன் தன்னை மறந்துவிட்டானோ என்றுகூட நளினிக்குத் தோன்றியது, "சார்
" என்று மெல்ல அழைத்து. "உங்கள் விருப்பத்தைச் சொன்னால். வழக்கமாகச் செய்கிறவர்களே. உங்கள் சொல்;படியே தேர்ந்தெடுக்கக் கூடும்.
சார்," என்றாள் அவள். மெதுவாக,

மேஜையிலிருந்து பார்வையை உயர்த்தி அவளைப் பார்த்தான் புவனேந்திரன்,

தலையை உலுக்கிக்கொண்டு. "இல்லை. அது சரிவராது,!சொல்படி என்பது வேறு,!விருப்பம்போல என்பது வேறு,!அத்தோடு. நீ குறிப்பிட்டவர்கள் எல்லோருமே. குறைந்த பட்சமாக ஒரு தலைமுறை மூத்தவர்கள்,!இரண்டு தலைமுறை மூத்த பாட்டிக்கு ஏற்ப. ஒரு குறிப்பிட்ட கருத்தில். ஆண்டுக் கணக்கில் ஊறிப் போனவர்கள், அதைத் தாண்டி வந்து. அவர்கள் நம் வழியில் யோசிப்பது கடினம்,! மேலும். இந்த விஷயத்தில். எனக்கு உன் மீதுதான் நம்பிக்கை,!இந்த அலுவலகம் இல்லை என்றால். வேறு எங்கேயேனும் .......................என் இடத்துக்கு உன்னை அழைத்துப் போவதும் பயன் இராது,!அங்கே உள்ள பணியாட்களுக்கு. இங்கே தொடர்பு இருக்கிறது,!காஃபி ஷாப் மாதிரி இடங்களில் உட்கார்ந்து. அரை மணி நேரத்தில் முடிக்கிற

வேலையும். இது அல்ல,!என்ன செய்வது என்று. உனக்கு ஏதாவது தோன்றுகிறதா?” என்று கேட்டான் அவன்,

இந்தத் திட்டத்தை ஏற்றால். பல லட்சங்கள் முதலீடு; போட வேண்டிய புவனேந்திரனுக்குத் தன்மீது இவ்வளவு நம்பிக்கை இருப்பது. நளினிக்குப் பெருமையாக இருந்தது,!அத்தோடு. இங்கே வேலை செய்யத் தொடங்கியதில் இருந்து. அவள் வெகுவாக முயன்று. பயனில்லை என்று ஆற்றாமையோடு விட்ட ஒன்று நடக்கப் போகிறது என்கிற மகிழ்ச்சியும் நிறையவே இருந்தது,

இவ்வளவுக்கு வந்து. உப்புப் பெறாத சின்னக் காரணங்களால் கெட்டுவிடக் கூடாதே,!

எனவே. அவசரமாக யோசித்து. “சார். உங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்றால். நீங்கள். எங்கள் வீட்டுக்கு வர முடியுமா? ரொம்பவும் முன்னாலேயே கட்டப்பட்ட ஃப்ளாட் என்பதால்.

வீட்டுக்கு முன்புறம் வராந்தா விசாலமாக இருக்கும், அங்கேயே. பிரம்பு சோஃபா செட்டெல்லாம் போட்டிருப்போம், அங்கே. உட்கார்ந்து வேலை செய்யலாம்,!நானே. அங்கே அமர்ந்துதான். என் துணி வேலைகளைச் செய்வது,!எங்கள் வீடு. கடைசி ஃப்ளாட் என்பதால். வேறு யாரும் போய் வந்து இடையூறாகவும் இருக்காது,! என் அம்மா. அப்பா. தங்கைதான், தங்கை. பிளஸ் டு “ அவள் பாடத்திலேயே மூழ்கிக் கிடப்பாள், அம்மா. உதவியாகவே இருப்பார்கள்,!“ என்று வேகமாகச் சொன்னாள் அவள்,

“அதாவது. வீட்டுக்கு வெளியேயே நிறுத்துகிறாய்,!” என்று சிரித்தபோதும். “இது. நல்ல யோசனையாகத்தான் தெரிகிறது,! எதற்கும். உன் தந்தை வீட்டில் இருக்கும் நேரம் சொல்லு, நான் வந்து. அவரிடம் நேரில் அனுமதி கேட்டு. அதன் பிறகு. வேலையைத் தொடங்குவோம்,!” என்றான் புவனேந்திரன்,!

அவ்வளவு பெரிய மனிதன். முதலாளி என்ற பந்தா காட்டாமல் பெற்றவரின் உரிமையை மதிக்கிறான் என்பதே. சுதர்சனத்துக்கு அவனிடம் ஓர் ஈடுபாட்டை ஏற்படுத்த. அவரும் சம்மதித்தார்,

இப்படித்தான். புவனேந்திரன். நளினியின் வீட்டுக்கு வந்தது,!

அவன் வருமுன். அவனுடைய பாதுகாவலர்கள் வந்து. வீட்டைச் சுற்றிப் பார்த்தது. நளினி எதிர்பார்த்ததுதான் என்றாலும். அது பற்றித்

தாயிடம் விளக்கம் சொல்லுகையில். அவளுக்குக் கொஞ்சம் சங்கடமாகத்தான் இருந்தது,!

ஆனால். அவன் இனிமையாகப் பேசித் தந்தையிடம் அனுமதி பெற்ற விதமும். தொடர்ந்து அவனோடு சேர்ந்து செய்த வேலையும். இடையிடையே கலகலப்பாக நடந்த பேச்சும் அவள் மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கவே. இந்த எரிச்சல் மறந்து போயிற்று,!

புவனேந்திரன் வாராவாரம் சென்னைக்கு வர.  வேலையும் வெகு முனைப்பாக நடக்க. நளினியும் அவனது வரவை. மிகவும் ஆவலோடும் ஆனந்தத்தோடும் எதிர்பார்க்கலானாள்,!

மூன்று வாரங்கள் இப்படிக் கழிய. நாலாவது வாரம். புவனேந்திரன் சென்னைக்கு வந்தபோது. மாலையில் அவனது வரவுக்காக அவள் வீட்டில் காத்திருக்கையில். வாயிலில் வந்து நின்ற சிறு காரிலிருந்து. புதியவன் ஒருவன் இறங்கி வந்து. அவளிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான்,

கடிதம் கொண்டு வரும் கோகுல். துணிகள் விஷயத்தில் வல்லுனன் என்றும். கடைக்கு வேண்டியவற்றைத் தேர்ந்தெடுப்பதில். தனக்கு அளித்த ஒத்துழைப்பை. நளினி கோகுலுக்கும் அளிப்பாள் என்று நம்புவதாகவும். அதில் புவனேந்திரன் எழுதியிருந்தான்,!

புவனேந்திரன். தன் முகத்தில் ஓங்கி அறைந்தாற்போல உணர்ந்தாள் நளினி,!

# அத்தியாயம் -6

ஏதோ ஒரு வகையில். புவனேந்திரன். தன்னை அவமதித்து விலக்கிவிட்டாற்போல உணர்ந்து. நளினி தவிக்கக் காரணம் இருந்தது,!

அவன் வந்த அந்த மூன்று வாரங்களில். முதல் வாரம் மட்டும்தான். அவன் வார நாட்களில் மட்டுமாக வந்தது,!மற்ற இரு முறையும். வியாழன் அல்லது வெள்ளியன்று வந்து. ஞாயிறு முடியச் சென்னையிலேயெ இருந்துவிட்டுப் போனான்,!

வார நாட்களில். மதிய உணவு இடைவேளைகளில் வேலை செய்தனர், ஆனால். ஞாயிற்றுக் கிழமையில். காலை தொடங்கி. மாலை வரை வேலை நடந்தது,!

சின்ன வயதாகத் தோன்றுகிறானே. மெய்யாகவே. வேலைதான் இவனது நோக்கமா என்று சற்றுக் கவலைப்பட்ட சகுந்தலா கூட. வேலை நடந்த வேகத்தைப் பார்த்து அதிசயித்துப் போனாள்,

இடையிடையே. காஃபி. குளிர் பானம் ஏதாவது கொணர்ந்து வைப்பாள், முறுக்கு. தட்டை என்று. ஒரு சிற்றுண்டி. அடுத்து வந்தது,!

வெறும் நன்றி கூறி உண்டுவிட்டுப் போகாமல். புவனேந்திரன் சகுந்தலாவிடமும் அபிப்பிராயம் கேட்பான்,!

கூடவே ஒரு பாராட்டும் இருக்கும்,!

" "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்று ஒரு பழமொழி சொல்வார்கள்,!இந்த மாதிரி ஒரு சிறு உப்புக்கல் கூட அதிகமோ. குறைவோ இல்லாமல். இப்படி ருசியாகச் செய்து தந்தால். இந்த உயிர் இன்னொரு பிறவி எடுக்கும்போதுகூட. இந்தச் சுவையை மறக்காது. ஆன்ட்டி,!" என்று அவன் கூறுகையில். சகுந்தலாவுக்கு உச்சி குளிர்ந்து போகும்,!

"இப்போதெல்லாம் உப்புத் தூள்தான், உப்புக் கல்லே கிடையாது,!" என்று மடக்கியபோதும். அந்த "உப்புக்கல்" என்ற வார்த்தையில். நளினியின் மனம் இதமாகக் குறுகுறுக்கும்,!

உப்புக்கல் என்ற வார்த்தையை வேண்டும் என்றுதான். புவனன்

சொன்னானா? சொல்லும்போது. லேசாக அவளைப் பார்த்தானா?

ஞாயிற்றுக் கிழமைகளில். சேர்ந்து சாப்பிட அழைத்தபோது. மறுக்காமல் அவர்களோடு அமர்ந்து ரசித்து உண்டான், அடுத்த வேளைக்கு. பீட்சா. சான்ட்விச் என்று எல்லோருக்குமாக வரவழைத்தான்,

“ஐயோ. நான் பிளஸ் டு “ படிக்கிறேனாக்கும்,!எனக்கெல்லாம். யாரிடமும் பேச நேரமே கிடையாது,!” என்று புருவத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு அலையும் மஞ்சரியைக் கூட. உட்கார்ந்து இரண்டு வார்த்தை பேச வைத்தான்,

மொத்தத்தில். முதுகை ஒடிக்கிற அளவுக்கு வேலையும் நடந்தது,!கூடவே. தன்

வீட்டாரோடு அவன் இணைந்து பழகிய விதத்தில். நளினிக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது,!

கடைசித் தடவை புவனேந்திரன் வந்தபோது. அந்த மகிழ்ச்சியை அவள் முகத்தில் அதிகமாகக் காட்டிவிட்டாளோ?

காட்டிவிட்டாளோ என்ன? காட்டத்தான் செய்தாள், ஒருவரின் வரவு சந்தோஷமாக இருக்கும்போது. அதை மூடி மறைக்க வேண்டிய அவசியம் என்ன?

அதிலும். அந்த நபர் அவள் வீட்டு விருந்தாளியாக வரும்போது?

அவள் சிரித்துக்கொண்டே. “லட்சம் நல்வரவு,!” என்றபோது. புவனேந்திரன் பதிலுக்குச் சிரித்தபடிதான் உள்ளே வந்ததாக. அவள் அப்போது நினைத்தாள்,

ஆனால். சற்றுத் திகைத்து நின்றுவிட்டு. அதன் பின்னர் சமாளித்துச் சிரித்தானோ என்று இப்போது யோசித்துப் பார்க்கையில் அவளுக்குத் தோன்றியது,!

ஏன்? ஒருவர் நம்மை மகிழ்ச்சியோடு வரவேற்பதில்கூடத் திகைப்பதற்கு என்ன இருக்கிறது? அவள் ஒன்றும். அவனுடைய விரோதி இல்லையே,!

மனம் எரிமலையின் மடியாய்க் குழம்பிக் குமுறியபோதும். பெற்ற தாயிடம்கூட. அவளால் அதைக் காட்டிக்கொள்ள முடியவில்லை,!

“புவனேந்திரன் சாருக்கு வேறு நிறைய வேலை இருக்கிறதாம்மா,!

அதனால். இந்த வேலையை இவரிடம் ஒப்படைத்து இருக்கிறாராம்,!” என்று. அறிமுகம் வேறு செய்து வைக்க வேண்டியிருந்தது,!

அவளை விட ஓரிரு ஆண்டுகளே மூத்தவனான கோகுல். உடைத் தயாரிப்புக் கலையில். பெரும் பட்டங்கள் வாங்கியிருந்தான், புவனேந்திரன் எழுதியிருந்த மாதிரி. வல்லுனனாகவும் இருந்தான்,

அத்தோடு. முன்னேறும் ஆர்வமும் இருந்ததால். அவனோடு வேலை செய்வது. நளினிக்குமே. அறிவு பூர்வமாக ஆக்கம் அளிப்பதாகத்தான் இருந்தது,! சொல்லப் போனால். எந்தெந்த துணி வகைகளை. எந்தெந்த மாதிரித் தைத்து அணிந்தால். தோற்றம் சிறப்பாக இருக்கும் என்பதெல்லாம். புவனேந்திரனை விடவும். கோகுல் அதிகமாகவே தெரிந்து வைத்திருந்தான்,!

அவளை விடவுமே,!

கோகுலோடு வேலை செய்யத் தொடங்கிச் சிறிது நேரத்திலேயே நளினி இதைப் புரிந்துகொண்டாள், எனவே. மெய்யாகவே. செய்யும் பணி சிறப்பாக இருக்க வேண்டும் எனும் ஒரே காரணத்துக்காகவே. புவனேந்திரன். இந்தக் கோகுலை அனுப்பியிருக்கிறான் என்று. நளினி தன்னைத் தானே சமாதானம் செய்துகொண்டாள்,!

ஆனால். இது பற்றி “உன்னதம்” வளாகத்தில். புவனேந்திரன் தன்னை அழைத்துச் சொல்லுவான் என்று எதிர்பார்த்து மாலையில் வேலைக்குச் சென்றவள். ரொம்பவே ஏமாந்து போனாள்,

அவனாக. அவளை அழையாதது மட்டுமின்றி. அவளாக முயன்றபோதும். புவனேந்திரனை அவளால் சந்திக்க முடியவில்லை,!

மறு நாளும். அதற்கு மறுநாளும் என்று. அந்த முறை அவன் அங்கிருந்த அத்தனை நாட்களும் இதுவே தொடரவும். புவனேந்திரன் தன்னை வேண்டும் என்றே ஒதுக்குகிறான் என்று அவளுக்குத் தௌ;ளத்தெளிவாகத் தெரிந்து போயிற்று,!

ஏன்? ஏன். என்று பல்லாயிரம் முறை யோசித்து மனதைப் புண்ணாக்கிக் கொண்டாளே தவிர. அந்த ஒதுக்கத்தின் காரணத்தை அவளால் ஊகிக்கவே முடியவில்லை,!

போகிறான் என்று அலட்சியப்படுத்தவும் முடியாமல் மிகவும் வேதனையாக இருந்தது,!

அவ்வளவு தூரம் சகஜமாக. குடும்பத்துடனேயே சேர்ந்து அமர்ந்து உண்டு. பேசிச் சிரித்துப் பழகிவிட்;டு. இப்போது பெரிய முதலாளியாக ஒரு கடைநிலைப் பணியாளைப் போலப் புவனேந்திரன்;;; தன்னை நடத்துவதை அவளால் தாங்க முடியவில்லை,!

ஆனால். அவளது வீட்டுக்குப் புவனேந்திரன் வந்தது. "ஆன்ட்டி. அங்கிள்" என்று அவளுடைய பெற்றோருடன் ஓர் உறவினனைப் போலப் பழகியது. எல்லாம். அவனது வேலை நன்கு நடக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகவா?

அவனது இடத்துக்குத் தகுதியுள்ள இன்னோர் ஆள் கிடைத்ததும். அப்படியே ஒதுங்கிக்கொண்டு விடுவானா?

எப்படி முடியும்?

அவனும். சந்தோஷமாகத்தானே பேசிச் சிரித்தான்?

அந்த சந்தோஷத்துக்காக. அவளைப் போல. அவனது மனமும் ஏங்காதா?

ஆனால். அவனுக்கெல்லாம் மனம் ஒன்று இருந்தால்தானே. ஏங்குவதற்கு?

முதலாளி அல்லவா? கொஞ்சம் சிரித்துப் பேசுவதாகக் காட்டிக் கொண்டாலே. முழு மூச்சுடன் வேலை செய்வாள் என்று கணக்கிட்டிருக்கிறான்,!

அவன் எதிர்பார்த்தது போலவே. இரவு தூக்கத்தில்கூட. வண்ணங்கள். வடிவமைப்புகள். துணி வகைகளைப் பற்றியே யோசித்தது. அவளது முட்டாள்த்தனமே தவிர. அதில் அவனைக் குற்றம் சொல்ல என்ன இருக்கிறது?

இந்தக் குமுறலின் ஊடே. நளினிக்குக் கோபமும் வந்தது,!

அவளது வீடு என்ன. "உன்னதத்"தின் கிளையா? அல்லது. புவனேந்திரன் அதற்குத் தனியாக வாடகை கொடுக்கிறானா? என்ன உரிமையில். அவளது வீட்டில் இந்த வேலையைச் செய்வது?

வேறு இடம் சரியாக இல்லையே என்று. ஏதோ. அவளாகத்தான் ஓர் இளக்கத்தில் இந்த ஐடியா சொன்னாள்,!ஆனால். அதுதான் சாக்கு என்று. அதையே நிரந்தரமாக்கி விடுவதா?

அடுத்த முறை அவன் வரும்போது. இந்த விஷயம் பற்றிப் புவனேந்திரனிடம் காரசாரமாக இல்லாவிட்டாலும். கறாராகப் பேசிவிட வேண்டும் என்று நளினி முடிவெடுத்தபோது. ஒரு நாள் காலையில். நளினி வேலைக்குக் கிளம்பு முன்பாக. கூரியரில் அவளுக்கு ஒரு கடிதமும். அவளுடைய தந்தைக்கு ஒரு பெரிய பார்சலும் வந்தன,

இரண்டையுமே. அனுப்பியது புவனேந்திரன்தான்,!

பெரிய பார்சலை அவசரமாகப் பிரித்துப் பார்த்த சகுந்தலாவும். சுதர்சனமும் வியந்து நின்றனர்,

சென்னை "பூம்புகா"ரில் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்த கைவினைப் பொருட்களில். ஒரு பெரிய சூரியச் சக்கரத்தைப் பார்த்து ஆசைப்பட்டு விலையைக் கேட்டுவிட்டு. மிரண்டு போய் ஓடியே வந்துவிட்டதாக. ஒரு தரம் நகைச்சுவை ததும்ப. அவர்கள் இருவரும் புவனேந்திரனிடம் விவரித்திருந்தனர்,

அதே சூரியச் சக்கரம்தான் பார்சலுக்குள் இருந்தது,!கூடவே ஒரு சிறு கடிதமும்,!

"உன்னத"த்தின் சரித்திரத்தில் ஒரு முக்கிய மாறுதலைச் செய்யப் பல்வேறு உதவிகளை. அன்போடு செய்ததற்காகத் தனது நன்றியை. இந்தச் சிறு அடையாளத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்வதாகப் புவனேந்திரன் கடிதத்தில் எழுதியிருந்தான்,!

அவர்கள் செய்த உதவிக்கு. நேரில் வந்து நன்றி தெரிவிப்பதுதான் முறையாகும்,!. ஆனால். கடை வளாகத்தில் சில மாற்றங்கள் செய்வதால். வேலை மிகுதி,. அதனால் நேரில் வர முடியவில்லை என்று. ஒரு காரணத்தையும். அந்தப் பெரிய தலைமுறை ஏற்கும் விதமாக அவன் பதவிசாகவே எழுதியிருந்தான்,!

சகுந்தலாவுக்கு மனம் உருகிப் போயிற்று,!

"அருமையான மனிதர்,!இப்படி ஒரு பாஸ் கிடைத்தது. உன் அதிருஷ;டம்,!" என்றார் தந்தையும்,!

"உனக்கு என்ன எழுதியிருக்கிறார்? இதே போலவா?" என்று இருவரும் கேட்க. நளினி  தனக்கு வந்த கடிதத்தை நீ;ட்டினாள்,

அவளுக்கும் கடிதத்தில் நன்றி தெரிவிக்கப் பட்டிருந்தது,!சில

விவரங்களும்,!

மாற்றம் குறித்து “உன்னதத்”துடைய நிர்வாகிகளுக்கு அறிவித்துவிட்டதாலும். அலுவலகத்திலேயே இந்தத் தேர்ந்தெடுக்கும் வேலைகளைச் செய்யத் தனியிடம் ஒன்று ஒதுக்கியிருப்பதாலும். கோகுலும். நளினியும் அங்கேயே சேர்ந்தமர்ந்து. இதே பணியை வெளிப்படையாகச் செய்யலாம் என்ற தகவல் இருந்தது,!

இந்த வேலை மாற்றம். நளினிக்கு ஒரு பதவி உயர்வாகக் கொடுக்கப் பட்டிருந்தது,!

கூடவே. அதுவரையிலும் அவள் செய்த அதிகப்படி வேலைக்காக. ஒரு கணிசமான தொகைக்கான ஒரு காசோலையும்,!

பதவி உயர்வு. பரிசு என்று பெற்றவர்கள் மகிழ்ச்சியில் பூரிக்க. எதையும் ஒத்துக்கொள்ளப் பிடிக்காமல். அதே சமயம் எதையும் வெளியே காட்டிக் கொள்ளவும் முடியாமல். நளினி உள்ளுரக் குமுறினாள்,

காட்டிக் கொள்வது இருக்கட்டும்,!அவளுக்கே. தான் என்ன விரும்புகிறோம் என்றுதெளிவாகப் புரியாத நிலை,!

பணம் கொடுத்து. ஒரு வல்லுனனின் உழைப்பை வாங்கக் கூடிய நிலையில் உள்ளவன். அவனது மற்ற வேலைகளுக்கு இடையில். இதையும் இழுத்துப்போட்டுச் செய்துகொண்டே இருப்பான் என்று எதிர்பார்க்க முடியாதுதான்,!

ஆனால். புவனேந்திரன் இப்படித் திடுமென வெட்டிக் கொண்டது. அவளுக்குப் பிடிக்கவில்லை,!

அத்தோடு. அவள் செய்த உதவிக்கு அவன் விலை போட்டுப் பணம் அனுப்பியது. என்னவோ. அவளை அவமானப்படுத்திவிட்டது போல. அவளுக்கு ஆத்திரமூட்டியது,!

அவள் என்ன பணத்துக்காகவா. இந்த அதிகப்படி வேலையைச் செய்தாள்?

எண்ணப் போக்கில் தொடர்ந்து. “பின்னே எதற்காகச் செய்தாள்” என்ற கேள்வி தோன்றவும்.

அவளுக்கே ஒன்றும் புரியாது போயிற்று,!

அவனிடம் ஊதியம் வாங்கிக்கொண்டு பணி புரிகிறவள்,!அவள் செய்த அதிகப்படி வேலை. பணம். பதவி உயர்வு. இதற்காகவெல்லாம் இல்லை என்றால் வேறு எதற்கு?

என்ன யோசித்தும் அவளுக்குப் புரியவில்லை,!

இந்தக் குழப்ப நிலையிலேயே. மேலும் இரு மாதங்கள் கடந்து போயின,!

இந்த அறுபது நாட்களுமே. புவனேந்திரனை அவள் பார்க்கவே இல்லை,!

வளாகத்துக்கு அவன் நேரில் வந்ததாகவும் தெரியவில்லை,!

ஆனால். அவன் நேரில் வராவிட்டாலும். “உன்னத”த்தில் பல மாற்றங்கள் நிகழலாயின,

ஜவுளிப் பகுதியைப் போலவே. வளாகத்தின் எல்லாத் துறைகளிலுமே. இந்த மாற்றம் அமுலாக்கம் செய்யப்பட்டது,

மதியம் கடையை மூடுவது நிறுத்தப்பட்டது,!

இந்த மாற்றங்களைத் தாங்கிய விளம்பரங்கள். பெரிய பத்திரிகைகளில் வெளியாயின,

இந்த மாற்றங்கள் பிடிக்காதவர்களும். அது பற்றி. உரக்கப் பேசப் பயப் பட்டார்கள்,!சின்னப் பயல் என்று எண்ணப்பட்டவன். எங்கேயோ இருந்துகொண்டு. இங்கே இப்படி ஆட்டி வைக்கிறானே,. இவனது காதுகள் எங்கெங்கே இருக்கின்றனவோ என்று அஞ்சினார்கள்,!

அதற்கேற்ப. புதிதாகப் பலர் வேலைக்குச் சேர்க்கப்பட்டார்கள்,!

அவர்கள் அனைவருமே. புவனேந்திரனால். நேரடியாக வேலையில் அமர்த்தப்பட்டார்கள், கோகுலைப் போல,!

பூவலிங்கத்தின் தலைமையில் மேலும் பலர் சேர்க்கப்பட்டு. பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டது,!வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்ததால். அது மிகவும் அவசியமாகவும் ஆயிற்று,!

ஒரு காலத்தில் நளினி விரும்பிய விதமாகத்தான். வளாகக் கடைகள் “ஜேஜே” என்று நடந்தன, ஆனால். அதைப் பார்த்து மகிழ

முடியாமல். அவளது மனதுதான். ஏனோ வெறுமையாக இருந்தது,!

நாளுக்கு நாள் அந்த வெறுமை கூடிற்றே தவிர. ஒரு சிறிதும் குறைவதாக இல்லை,!

எரிச்சலுற்றவளாய். அன்று இரண்டு மணி நேரம் விடுப்பு எடுத்துக்கொண்டு. நளினி "உன்னதத்"தை விட்டுச் சீக்கிரமே கிளம்பி விட்டாள்,!

ஆனால். வீட்டை நெருங்குகையில். அதுவும் பிடிக்கவில்லை,!

ஏன் சீக்கிரம் வந்தாய்?. உடம்புக்கு என்ன? குளிரா? காய்ச்சலா? என்ன என்று ஆயிரம் கேள்விகளால். அன்னை ஆயிரம் கேள்விகளால். அவளைத் திணறடித்து விடுவாள்,!

வீடு போகிற வழியில் சற்று நேரம் கடைகளில் சுற்றிவிட்டு. மெல்ல வீட்டுக்கு

நடந்து சென்றாள்,

வீடு இருக்கும் தெருவுக்குள் புகும்போது. அவளது வீட்டுப் பகுதியில் இருந்து. ஒரு பெரிய நீளக் கார். தெருவின் மறுமுனையில் வளைந்து திரும்பியது,!

இது புவனேந்திரனின் கார் போலத் தெரிகிறதே. வீட்டுக்கு வந்திருப்பானோ? அவன் வருகிற நேரம் அவள் வீட்டில் இல்லாமல் போய்விட்டாளே,!

பரபரப்போடு. ஓட்டமும் நடையுமாக அவள் வீட்டுக்கு விரைந்தால். அங்கே அவளுக்கு மேலாகப் படபடப்புடன். அவளுடைய தாயார் இருந்தாள்,

தந்தையும்கூட,!

மகளைப் பார்த்ததும். சற்றே அதிர்ந்தாற்போல இருவரும். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்,!

# அத்தியாயம் - 7

பெற்றோர் இருவருமே. அவளைத் திகைத்து நோக்கியது. நளினிக்கு வியப்பாக இருந்தது,!

பொதுவாகக் குடும்ப அங்கத்தினருள் ஒளிவு மறைவு பழக்கமில்லை,!அவசியம் இல்லாதது. அவசியமற்ற வீண் வேதனை என்று தோன்றிச் சொல்லாமல் விடுவது தவிர. எல்லாவற்றையும் கலந்து பேசி விடுவதுதான் வழக்கம்,!ஏதாவது குழப்பம் என்றாலும். நேரடியாகக் கேட்டுவிடுவதுதான்,!

பெரியவர்களாகப் பேசட்டும் என்று சற்றுப் பொறுத்திருக்க முயன்றால். நளினிக்கு. வினாடி யுகமாகத் தோன்றியது,!

அது. புவனேந்திரனின் கார்தானா. இல்லையா?

அவனது கார்தான் என்றால். அதில் அவனேதான் வந்தானா?

அவள் இல்லாத நேரத்தில் வந்து. அவளுக்குத் தெரியாமல். அவளுடைய பெற்றோரிடம் என்ன சொல்லியிருப்பான்?

ஓர் அரை நிமிஷ நேரம்கூடப் பொறுமையைக் கடைப்பிடிக்க முடியாமல். “என்னம்மா விஷயம்?” என்று கேட்டுவிட்டாள் அவள்,

மீண்டும் பெற்றவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவும். பொறுமையிழந்து. “ அப்பா. ப்ளீஸ்,!எதையும் மறைக்காமல். என்னிடம் சொல்லுங்கள்,!நம் வீட்டுக்குப் புவனேந்திரன் வந்தாரா? அவரது காரைப் பார்த்தேனே,!என்னவாம்? என்னை என்னைப் பற்றி. ஏதேனும் சொன்னாரா? இப்படி. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தது போதும்,!தயவு பண்ணி. விஷயத்தைச் சீக்கிரமாகச் சொல்லுங்கள்,! ............ இஇல்லாவிட்டால். இந்த இறுக்கம் தாளாமல். என் தலையே வெடித்துவிடும்,!” கெஞ்சுதலாக வற்புறுத்திக் கேட்டாள்,!

அப்போதும் கணவனும் மனைவியும் அடுத்தவர் முகத்தைப் பார்க்கவும். கோபமும் கூடவே பயமும் தோன்ற. “போதும்பா,! அதுதான் இருபத்துமூன்று ஆண்டுகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே,!இன்னமும் என்ன? முதலில் என் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு. அப்புறமாக உங்கள்

பார்வையைத் தொடருங்கள்,!நீங்கள் இப்படிப் பதில் சொல்லாமல் தயங்கத் தயங்க. எனக்கு என்னவோ ஒரு மாதிரிப் பயமாக இருக்கிறதே,!” என்று சற்றுத் தீனமான குரலில் முடித்தாள்,!

மகள் கலங்குகிறாள் என்று அறிந்ததும். “ பயப்பட ஒன்றும் இல்லை. பாப்பா,!” என்று பெற்றவர்கள் இருவருமே கோரசாக இயம்பினர்,!

“பின்னே?”

நளினி கேள்வியாக நோக்கவும். “மெய்யாகவே பயப்பட ஒன்றுமே கிடையாதுதான்,!ஆனால். நாம் எதிர்பார்த்திராத சில விஷயங்களைப் பற்றித் திடுமெனக் கேட்கும்போது. சற்று அதிர்ச்சியாகத்தானே இருக்கிறது?” என்றார் சுதர்சனம்,!

“அப்படி என்ன எதிர்பாராத விஷயம். இப்போது தெரிய வந்தது?”

“முதலில் உட்கார், பேசுவோம், ஏனென்றால். இது உனக்குத் தெரிந்திருக்க வேண்டிய விவரம்,!” என்று தொடங்கி. “நம் புவனேந்திரன் திருமணம் ஆனவர்,!உனக்குத் தெரியுமா?” என்று கேட்டார்,!

“கல்யாணம் ஆகி ......” என்று பெற்றவர் மேலே சொன்னது எதுவும் காதில் விழாமல். நளினிக்குக் கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது,!

திருமணம் ஆனவன்,!ஏன் ஆகியிருக்கக் கூடாது? கிட்டத்தட்ட முப்பதைக் கூட எட்டாத வயது,!தோற்றம் இருக்கிறது,. தொழில் இருக்கிறது,. வளம் இருக்கிறது,!பெண்

வீட்டார் மொய்ப்பதில் ஆச்சரியம் என்ன?

அவனுக்குத் திருமணம் ஆகிக் குழந்தைகள்கூட இருக்கக் கூடும்,! இயல்புதானே?

இதில். நளினி இவ்வளவு அதிர்ச்சி அடையவோ. வருத்தப்படவோ. என்ன இருக்கிறது?

ஆனால். வயிறு காலியான உணர்வுடன் நெஞ்சை அடைத்து. கண்ணை இருட்டி. அவள் மயக்கமடைந்து. கீழே விழாமல் இருந்ததே அதிசயம்தான்,!

அந்த அளவுக்கல்லவா அதிர்ந்து போனாளே,!

ஆனால். ஏன்?

யாரோ ஒருவன்,!அவன் முதலாளியாகவே இருந்தாலும். அவனது திருமணம். அவளை இந்த அளவுக்குப் பாதிப்பானேன்?

கேட்பானேன்? உண்மைதான். துலாம்பரமாக விளங்கிற்றே,!

“கடவுளே,!நான் புவனனை நேசிக்கிறேன்,! அதனால்தான் ........ “

“என்ன?,!” என்று பெற்றோரின் அதிர்ந்த குரல்களைக் கேட்ட பிறகுதான். தன் மனது எண்ணியதை. வாய் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறது என்பது. நளினிக்கே புரிந்தது,!

என்ன மடத்தனம்,!நியாய அனியாயங்களைப் பற்றி. அவளுக்குத்தெளிவாகப் போதித்திருக்கும் நல்லவர்களான இந்தப் பெற்றோர். அவளைப் பற்றி என்ன நினைப்பார்கள்,!

கவலையும். வேதனையுமாக அவர்களைப் பார்த்து. “ஆனால். புவனேந்திரனோடு. நான் அப்படி ஏதும் பழகியது கிடையாதும்மா,! என் மமனதில் மட்டும்தான் ................. ஆனால். அவருக்கு ம , மனைவி இருப்பது. எனக்குத் தெரியாதும்மா,!யா யாருமே சொன்னதே இஇல்லை,!சொ , சொல்லியிருந்தால் ......................” என்று உள்ளிருந்த வலியில் மேலே பேச முடியாமல் நிறுத்தினாள். அவள்,!

“மனைவி இருந்தால்தானே
“ என்று தொடங்கிய கணவனை விழித்து நோக்கிவிட்டு. “பார் கண்ணு. புவனேந்திரனின் திருமணமே ஒரு பரிதாபமான கதை,!இருபத்தோரு வயதிலேயே மணந்துகொண்டு இருக்கிறார்,!ஆனால். மணமாகிப் பத்தே நாட்களில். அந்தப் புது மனைவியைப் பறிகொடுத்தும் இருக்கிறார், பாட்டியிடம் கொஞ்சமும் ஒட்டுதல் இல்லாததால். திருமணம் பற்றி. முதலில் இங்கே தெரிவிக்கவே தோன்றவில்லையாம்,!பிறகு. அவளே போய்விட்ட பிறகு. தெரிவிக்கும் அவசியமே இல்லாது போயிற்றாம்,! இப்போது ..........................................” என்று சகுந்தலா தயங்கினாள்,

மணமாகிப் பத்தே நாட்களில். புது மனைவியைப் பறிகொடுத்திருக்கிறானே. பாவம் என்று உருகிக் கொண்டிருந்தவளுக்குத் தாயின் தயக்கம். மனதில் பட்டது,!

பெற்றோரை மாறி மாறிக் கூர்ந்து பார்த்து. “இப்போது மட்டும். அதைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம். என்ன வந்தது? அதிலும். இங்கே வந்து. உங்களிடம்?” என்று கேட்டாள் நளினி,!

சகுந்தலா மேலும் தயங்க. “மிஸ்டர் புவனேந்திரனுக்கு உன்னை மிகவும் பிடித்திருக்கிறதாம்,!திருமணம் செய்துகொள்ள விரும்புகிறாராம்,!அதனால். தன்னைப் பற்றிய விவரம் முழுவதையும் எங்களிடம் தெரிவித்துவிடுவதுதான் நியாயம் என்று. இங்கே வந்து சொல்லியிருக்கிறார்,!உன்னிடமும் சொல்லச் சொன்னார்,!சொல்லி. நன்கு யோசித்து ஒரு முடிவெடுக்குமாறு கூறினார்,!“ என்று ஒரு கணம் நிறுத்திவிட்டு. சுதர்சனமே தொடர்ந்தார்,

“அம்மா. நீ உலகம் தெரியாத முட்டாளில்லை,!உன்னை நாங்கள் வீட்டுக்குள்ளேயே பூட்டி வைத்து வளர்க்கவும் இல்லை,! புவனேந்திரனின் வளம். வசதி பற்றி. உனக்கே தெரியும்,!நாம் கனவில்கூட. எண்ணிப் பார்க்க முடியாத சம்பந்தம். இது,!ஆனால். அவரிடம் இருக்கும் பணத்துக்காக. அவரை மணந்துகொள் என்று நான் சொல்ல மாட்டேன்,!ஆனால். நீயும் அவரை ...... அவரை நினைத்திருப்பதாகத் தோன்றுவதால் ......”

அவரது பேச்சில் இடைமறித்து. “ நீங்களாக ஓர் அபிப்பிராயம் தொனிக்கப் பேசாதீர்கள்,!எதையும். நளினியே யோசித்து முடிவெடுக்கட்டும்,!” என்றாள் சகுந்தலா,

ஆனால். உடனேயே. “அவரிடம் பணம் இருக்கலாம், ஆனால். என்ன இருந்தாலும். இரண்டாம்தாரம் அல்லவா? நம் பெண் புதுப் பூ,! அதை நினைக்கும்போது. எனக்கு உறுத்துகிறதே,!” என்றாள் தொடர்ந்து,!

“என்னைச் சொல்லிவிட்டு. இப்போது நீ அபிப்பிராயம் கூறவில்லையா?” என்று. மனைவியிடம் பாய்ந்தார் சுதர்சனம்,

“நீங்கள் சொன்னதால்தான் நானும் சொல்ல வேண்டியதாயிற்று,!” என்றாள் மனைவி பதிலுக்கு,!

“என்னத்தைச் சொன்னாய்? பெரிதாக இரண்டாம் தாரம் என்றாயே. இன்றைக்கு எத்தனை பையன்கள் அங்கே. இங்கே போகாமல் நல்லபடியாக இருக்கிறார்கள்? அதை என்னவென்று கொள்வது? தப்பான இடங்களுக்குப் போகாத நல்ல பையனாகத்

தேர்ந்தெடுப்பது எப்படி என்று. நானே கலங்கிக் கொண்டிருந்தேன்,! எப்படியும். புவனேந்திரன் நல்ல விதம் என்பது. உனக்கும் நிச்சயம்தானே?” என்று சுதர்சனம் கேட்டபோது. சகுந்தலா மறுத்துப் பேசவில்லை,!

புவனேந்திரன் அவர்கள் வீட்டிற்கு வந்து. நளினியோடு சேர்ந்து வேலை செய்தபோது. அவனது கண்ணியமான நடத்தை குறித்துக் கணவன் மனைவி இருவருமே தனிமையில் பலமுறை பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்,!

பார்வையில்கூடக் கனவான் என்று சகுந்தலாவே சொல்லியிருக்கிறாள்,

ஆனாலும் விடாமல். “அடியாட்கள் மாதிரி. இருவரைக் கூடவே அழைத்துக்கொண்டு அலைவதுதான் கொஞ்சம் ஒரு மாதிரி இருக்கிறது,!” என்றாள் பெற்றவள்,

“பத்திரிகையில் எத்தனை படிக்கிறாய். தொழிலதிபர் கடத்தல். அது இதென்று,!அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று எச்சரிக்கையோடு இருப்பதைப் பாராட்டாமல். அசட்டுத்தனமாகக் குறைப்படுகிறாயே,!”

இருவர் பேச்சையும் அரைகுறையாகக் கவனித்தபடி. நளினி தனக்குள் யோசித்தாள்,

அவன் சிம்லாவுக்கு அழைத்ததை. அவசியமற்ற பிரச்சினை என்று பெற்றோரிடம் சொல்லாமல் விட்டது நல்லதாயிற்று என்று எண்ணினாள் அவள்,!

அது மட்டும் தெரிந்தால். அவன் முகத்திலேயே விழித்திருக்க மாட்டார்கள்,!

ஆனால். அவளை அப்படி அழைத்தவன். மற்றவர்களோடு அப்படிச் சென்றதே இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? அப்புறம் என்ன நல்லவன்?

ஆனால். மெய்யும் பொய்யுமாய் உலா வரும் அலுவலக வதந்தியின் படிப் பார்த்தால். பெண்களிடம் அவன் நெருப்புதான்,! திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை என்றுதான் பேச்சு,!கோகுல் மாதிரிக் கோவையிலிருந்து இங்கு வந்து பணிபுரிகிறவர்கள் கூட. அந்த மாதிரித் தவறாக. அவனைப் பற்றிப் பேசியதாகக் கேள்வி இல்லை,!

சிறு பொறி என்றால்கூடப் பெரு நெருப்பென்று பரவியிருக்குமே,! ஒதுங்கிப் போனால்கூட. இது போன்ற விஷயம் என்றால். கூப்பிட்டு வைத்துக் கதையாய்ச் சொல்வார்கள்,!காவல் பொறுப்பாளர் என்று. கம்பீரமாக ஒதுங்கிப் போகும் பூவலிங்கமே. புவனேந்திரனுடைய பெற்றோர் பற்றி. அவளிடமே சொன்னாரே,!

அப்படியானால். அவளிடம் மட்டும்தான். அவன் அப்படியா?

ஆமாம் என்றால் நளினி சட்டெனப் பரபரப்புற்றாள்,

ஒரு வேளை. அப்போதே அவனிடம் பாதிப்பு ஏற்பட்டிருந்ததோ? உண்மை நேசம் என்று தெரியாமல். வெற்று ஆசை என்று எண்ணிக் கேட்டிருப்பானோ?

அப்படி மட்டும் இருந்தால் ...................................................... ,

ஆனால். ஒரு தரம் மணந்தவனுக்குக் காதல் என்றால் என்னவென்று தெரியாதா?

அந்தக் கணத்தில். அவனை மணந்து. அவனோடு வாழ்ந்த அந்தப் பெண்ணின் நினைவில். அவளுக்கு வயிறு காந்திவிட்டது,!

சே,!பாவம்,!செத்துப் போனவளைப் பற்றி. என்ன இது என்று. நளினி தன்னைத் தானே கண்டித்து. நேர்ப்படுத்த வேண்டியிருந்தது,!

மகளது முகத்தையே பார்த்திருந்தவர்கள் போல. “என்னம்மா?” என்று பெற்றோர் கேட்கவும். சட்டெனச் சுதாரித்தாள் அவள்,

“நா ன் எனக்குக் கொஞ்சம் யோசிக்க வேண்டும். அம்மா,!” என்றாள், “என் மனமே எனக்கு இப்போதுதான் .............. இன்னமுமே. ஒன்றும்தெளிவாகப் புரியவில்லை,!ஏதோ குழப்பமாக ........................ , அதனால் ..................................................................அதனால் ................................................................. “ என்று முடிக்க முடியாமல் தடுமாறினாள்,

“அது சரிதானம்மா,!வாழ்க்கை முழுவதற்குமான தீர்மானம், இதை அவசரப்பட்டு எடுக்கக் கூடாது,!அதனால். நிதானமாக. நல்லது கெட்டது பற்றி நன்கு யோசித்து முடிவு பண்ணு,!

புவனேந்திரன் கூட. அப்படித்தான் சொன்னார்,!”நீங்களும் நளினியுமாகத் தீர யோசித்து முடிவு பண்ணிச் சொல்லுங்கள்” என்றார், ஆனால் பாவம்,!கண்ணில் மட்டும் ஒரு தவிப்பு இருக்கத்தான் செய்தது,!” என்றார் சுதர்சனம்,

தந்தையின் விருப்பம். நளினிக்கு நன்றாகவே புரிந்தது,!

தாய்க்கும் புவனனைப் பிடிக்கத்தான் செய்யும்,!தந்தை எடுத்துச் சொன்ன பிறகு. அவள் மறுத்துப் பேசவும் இல்லை,!

ஆயினும் …… ,

மறுநாள் அலுவலுக்கு. நளினி சற்றுச் சீக்கிரமாகவே கிளம்பிச் சென்றாள்,

ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்ட போதும். பெற்றவர்கள். மகளிடம் ஏன் என்று. ஒன்றும் கேட்கவில்லை,!

சந்தேகம் இருந்தால்தானே. கேட்பதற்கு?

நளினி நேராகச் சென்ற இடம். புவனேந்திரனின் வீடுதான், ஆனால். வீடு வரை சென்றவளுக்கு. உடனே மனம் மாறிவிட்டது,!

வீட்டிலுள்ள பணியாளர்களுக்கும். கடை வளாகத்து ஆட்களுக்கும் தொடர்பு இருப்பதாக. முன்பே ஒரு தரம் புவனேந்திரன் கூறியிருந்தது நினைவு வர. அங்கே சென்றால். தனியாக வீட்டுக்கே சென்றாளாம் என்று கண்ட பேச்சு கிளம்பக் கூடும் என்று தயக்கம் உண்டாயிற்று,!

இது சரியில்லை,!

சற்று யோசித்துவிட்டு. ஏதோ நினைவு வர. ஆட்டோவைத் திருப்பி ஓட்டச் சொன்னாள்,

அவள் எதிர்பார்த்தது போலவே. சற்றுத் தொலைவில் ஒரு பூங்காவும். அருகில் ஒரு பொதுத் தொலைபேசி பூத்தும் கண்ணில் பட்டன,!வரும்போது. அசுவாரசியமாகப் பார்த்தபடி வந்தது,! நல்லவேளையாக நினைவு வந்ததே என்று எண்ணியபடி. அங்கே இறங்கிக்கொண்டாள்,

தொலைபேசியில் புவனேந்திரனை அழைத்தபோது. அவளுக்குக் கொஞ்சம் படபடப்புதான்,

ஆனாலும். “நா ன். நளினி பேசுகிறேன், உங்களிடம் தனியாகப் பேச வேண்டும், உங்கள் வீட்டிலிருந்து. சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில். ஒரு சின்ன பூங்கா இருக்கிறது,!அங்கே என்னைச் சந்திக்க முடியுமா? “ என்று. வேகமாகக் கேட்டுவிட்டுப்

பூங்காவின் பெயரைச் சொன்னாள்,

“அந்தப் பூங்காவை வெளியில் இருந்து பார்த்திருக்கிறேன், பத்து நிமிஷங்களில் அங்கே இருப்பேன்,!” என்று அவன் உடனடியாக ஒப்பவும். நளினிக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது,!

உள்ளே சென்று தனியே உட்;கார்ந்திருக்க மனம் வராமல். பூங்காவின் வாயில் அருகேயே நின்றுகொண்டிருந்தாள்,

அதிக நேரம் காத்திருக்கத் தேவை இல்லாமல். அவன் சொன்ன பத்து நிமிஷங்களுக்கும் சற்று முன்னதாகவே. புவனேந்திரனினன் நீளக் கார் அங்கே வந்து நின்றது,!

சொன்ன நேரத்துக்கும் முன்பாகக் கார் வந்துவிட்டது. அவளுக்கு மகிழ்ச்சிதான்,!

ஆனால். அவனுக்குப் பதிலாக. அவனுடைய பாதுகாவலர்களில் ஒருவன் இறங்கிவந்து. “சார் காரில் இருக்கிறார்,!வந்து காரில் ஏறிக்கொள்ளுமாறு. உங்களிடம் சொல்லச் சொன்னார்,!” என்றதுதான். அவளுக்கு லேசாக உறுத்தியது,!

காரில் ஏறினால். இந்தப் பாதுகாவலனும் கூட ஏறுவானே? அப்புறம். அவனிடம் தனியாக என்ன பேசமுடியும்?

அவள் நினைத்தது போலவே. அந்தப் பாதுகாவலனும் காரில் ஏறிக்கொள்ளக் கார் கிளம்பியது,!

மூன்று வரிசை உட்காரும் இடம் கொண்ட அந்தக் காரின் பின் சீட்டில். அவன் அமர. புவனேந்திரனுடைய அடுத்த காவலன் காரை ஓட்டினான்,!

அவள் காரில் ஏறிக் கார் கிளம்பியதுமே. “நளினி. வீட்டில் அம்மா. அப்பா சொன்னார்களா? உன் முடிவைச் சொல்லத்தான் அழைத்தாயா? என்ன முடிவு செய்தாய்?” என்று ஆவலாகப் புவனேந்திரன் கேட்கவும். நளினியின் மனம் துணுக்குற்றது,!

பெற்றோர் ஏற்பாடு செய்யும் திருமணம் என்றாலுமே. மணமக்கள் இருவரும் மனம் விட்டுப் பேசும்போது. யாரும் கூட இருப்பதில்லை,! காருக்குள் இன்னும் இருவர் இருக்கும் நினைவே இல்லாமல் இவன் என்ன. இப்படிக் கேட்கிறான்?

# அத்தியாயம் -8

இரண்டு அன்னியர்களை வைத்துக்கொண்டு. என்ன கேள்வி கேட்கிறாய் என்று அதட்டிப் பேசவும். நளினிக்கு மனம் வரவில்லை,!

புவனேந்திரனைப் போய். எப்படி அதட்டுவது?

அத்தோடு.  அவனது கேள்விக்குரிய பதிலையும். இப்போதே அவளால் கூற முடியாதே,!சில விஷயங்களைப் பற்றிப் பேசித்தெளிவு பெற்ற பிறகுதானே.   ......குறைந்த பட்சமாய் அவனிடம் ஓர் உறுதியேனும் பெற்ற பிறகல்லவா. அவளால் நிச்சயமாக பதிலைச் சொல்ல முடியும்?

ஆனால். அதையும். இந்த இரு காவலர்கள்    சகுந்தலாவின் பாஷையில் “அடியாட்கள்” காது கேட்க. அவளால் ஒரு வார்த்தைகூடப் பேச முடியாது,!

எனவே. சிறு தயக்கத்துடன். “நான் உங்களிடம் சற்றுத் தனியாகப் பேச வேண்டும்,!” என்று தாழ்ந்த குரலில். அவனுக்கு மட்டும் கேட்கும்படி மெல்ல விளம்பினாள்,

“தனியாகத்தானே  ......” என்று வியப்புடன் தொடங்கியவன் சட்டெனப் புரிந்து. முன்னே காரை ஓட்டிக் கொண்டிருந்தவனின் தோளைத் தொட்டு. “முத்து. நேற்று கூட்டம் நடந்த நட்சத்திர ஹோட்டல் நினைவிருக்கிறது. அல்லவா? அங்கே. காஃபி ஷாப்புக்குப் போக வேண்டும்,!உள்ளே போய்விட்டால். பாதுகாப்பான இடம்,!” என்றான்,

என்ன பாதுகாப்பு என்று எண்ணியபோதும். நளினி ஒன்றும் சொல்லவில்லை,!காஃபி ஷாப் கூட்டம் இல்லாமல் இருக்க வேண்டுமே என்று மட்டும் நினைத்துக் கொண்டாள், ஏனெனில். அவள் பேச விரும்பியவற்றை. அடுத்தவர் அறிய. கேட்க முடியாது,!

நட்சத்திர ஹோட்டலின் காஃபி ஷாப்பில் அந்த நேரத்தில் பெரிதாகக் கூட்டம் இல்லைதான், மொத்தம் இருபது பேர் இருந்திருப்பார்கள்,!ஆனால். அந்த முத்து தன் சகாவோடு. அவர்களோடு கூடவே உள்ளே வந்து. அவர்களையும். நுழைவாயில்களையும் கவனிப்பதற்கு ஏதுவாக. முன்னும்

பின்னுமாக. அவர்களுக்கு அடுத்த மேஜைகளில் உட்கார்ந்தது. அவளுக்கு எரிச்சலூட்டியது,!

இப்படி இரண்டு பார்வையாளர்களை வைத்துக்கொண்டு. அவர்களால் எப்படித் தங்கு தடையின்றி. தன்னியல்பாகப் பேச முடியும்?

தன் மெய்காப்பாளர்களை நளினி பார்ப்பதைக் கவனித்துவிட்டு. "முத்துவும். திருமயனும் எப்போதும் கூடவே இருப்பதால். அவர்களைத் தனிப்பட்ட மனிதர்களாக நினைக்க எனக்குத் தோன்றுவது இல்லை,!" என்றான் புவனேந்திரன்,

"ஆனால். எனக்கு அப்படி எண்ணத் தோன்றவில்லையே் என்றாள் அவள்,

"தோன்ற வேண்டும்,!பாதுகாப்பு விஷயத்தில். நீக்குப் போக்குக் கூடாது என்று. முன்பே நான் உன்னிடம் சொல்லியிருக்கிறேன்,! அதனால். இந்த இருவரையும். வாழ்வில் ஓர் நிரந்தர அங்கமாக நினைப்பதற்கு. நீ பழகிக் கொள்ள வேண்டும்,!" என்றவன். தலையசைத்து. "நம்பிக்கைதான், என்றாலும். நீ இன்னமும் முடிவே சொல்லவில்லை,. அதற்குள் எங்கே போய்விட்டேன். பார்,!" என்று லேசாக முறுவலித்தான், "சொல்லு நளினி, ஏதோ பேச வேண்டும் என்றாயே,!"

நம்பிக்கையா? எப்படி வரும்? அதுவும். கேவலமாக ஒன்று கேட்டு. அதை அவள் மறுத்து .......................................... எல்லாம் மறந்துவிட்டானா?

அதைப் பற்றி. இந்த இருவர் முன் எப்படிக் கேட்பது? ஆனால். கேளாமல் விடவும் முடியாது,!

"அது வந்து சார் " என்று அவள் ஒருவாறு தொடங்க முயற்சிக்கையில். அவன் குறுக்கிட்டு. "இன்னமும். "சாரா" ?" என்று. மென்குரலில் கேட்டான்,!

என்ன குரல்,!

தலையை உலுக்கித் தன்னைச் சமாளித்துக்கொண்டு. "அஅன்றைக்குப் பூவலிங்கம் சார் வேலைக்காக. சிம்லாவுக்குக் கூட வந்து. ஏதேதோ கேட்டீர்களே,!அது, , அது காத வந்து.

நேசத்தின் அறிகுறி ஆகுமா?" என்று. ஒரு வழியாகக்

கேட்டேவிட்டாள்,!

கண்ணில் பாராட்டோடு. “ கெட்டிக்காரத்தனமான கேள்வி,! அதாவது. எப்போதிருந்து உன்னை நினைக்கத் தொடங்கினேன் என்று கேட்கிறாய்,!அப்படித்தானே? “ என்று புன்னகை செய்தான்,

அவள் பேசாதிருக்கவும். “எப்போது என்று சொன்னால். உன்னால் நம்பக் கூட முடியாது. நளினி,!அது, , முதல் பார்வையில் என்று சொல்ல முடியாது,!ஆனால். அசட்டுத்தனமாய் வேலையை விட்டுவிட்டாயே என்றேனே. நினைவிருக்கிறதா? அப்போது. உன் முகபாவம்,!அன்றைக்கு என்னால். தூங்கவே முடியவில்லை,!தூக்கம் வருவதற்காக. இரண்டு மணி நேரம் நீந்தினேன், ஆறு ஆண்டுகளாக. எந்தப் பெண்ணும். என்னை அப்படிப் பாதித்தது இல்லை,!அதுதான். ஒருவேளை நெருங்கிப் பழகினால். அந்தப் பாதிப்பு மறைந்துவிடக் கூடும் என்று எண்ணினேன்,!ஆனால். நீ மறுத்தபோதும் ஏமாற்றம் தோன்றாமல். ஒழுக்கத்தை மதிக்கிறாய் என்று. எனக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது,! ......” என்றவன். அவளது விரிந்து நோக்கிய விழிகளைக் கண்டு சிரித்தான்,!

“உண்மை கண்மணி,!ஆனால். அப்போதும். இவ்வளவு உறுதியாக நினைக்கவில்லை,!உன்னோடு. உன் குடும்பத்தோடு பேசிப் பழகுவது சந்தோஷமாக இருந்தது,!என் வரண்ட வாழ்க்கைக்கு அதுவே பெரிய சுகமாக. அதற்குமேல். அப்போது நான் எதையும் நாடவில்லை,!ஆனால். உன் கண்ணில் நேசம் தெரியவும். கலங்கிப் போனேன்,!நான் பட்ட மரம்,!என்மேல். எப்படி ?”

அவன் கலங்கினானோ என்னவோ. நளினி ரொம்பவே திகைத்துப் போனாள்

இவன் எப்போதே. அவளை அறிந்திருக்கிறான்,!

இன்னதென்று. அவளே அறியும் முன்பாகவே. அவன் தெரிந்து வைத்திருக்கிறானே,!

ஒரு தொழிலதிபனாகப் பல தரத்தாருடன் பேசிப் பழகிதால் வந்த திறமையா? அல்லது ...... ,ஒரு பெண்ணுடன்; நெருங்கிப் பழகியிருந்ததால் வந்த அனுபவ அறிவா?

தன்னை மீறி. “அவர்களை உங்கள் மனைவியை மிகவும் நேசித்தீர்களா?” என்று கேட்டாள் நளினி,

சில வினாடிகள். இந்தக் கேள்விக்கு அவன் பதில் சொல்லப் போவதில்லையோ என்றே நளினிக்குத் தோன்றியது,!

ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டோம் என்றுகூட,!

அவளுக்கு யுகமாகத் தோன்றிய அரை நிமிஷத்துக்குப் பிறகு. மேஜைமேல் வைத்திருந்த கையிலிருந்து. புவனேந்திரன் பார்வையை அவள் முகத்துக்கு உயர்த்தினான்,

அவளது கண்களை நேராகச் சந்தித்து. "உன்னைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்பதற்காகப் பொய் சொல்ல எனக்கு விருப்பம் இல்லை. நளினி, அந்தத் திருமணம் நடந்தபோது. எனக்கு இருபத்தியோரு வயது, ரதி. இருபதை எட்டவில்லை,!அந்தப் பத்து நாட்களுக்குள். சிரிப்பு. அழுகை. சச்சரவு. சமாதானம். அன்பு. ஆசை ....எல்லாமே எங்களுக்குள் இருந்தது,!சந்தோஷமாகவே இருந்தோம்,!அவள் ...... அவள் போன பிறகு. உலகமே இருட்டாகிப் போய்விட்ட மாதிரி இருந்தது,!என் தொழில்கள். கூடவே. உள்ஞ்ரச் சில பிடிவாதங்களும் இருந்ததால்தான். மீண்டு வந்தேன் எனலாம்,!உன்னைச் சந்திக்கும் வரையும். பெண்களிடம் வேறு எந்த நினைவும் எனக்கு வந்ததும் கிடையாது,!உன்னைக் கூட. வந்து போகும் மேகத்தைப் போலச் சற்று வலுவான ஒரு சலனம் என்றுதான். முதலில் நினைத்தேன்,! பிறகு. உன் கண்ணில் ஆர்வத்தைக் கண்டபோதும். "இந்தப் பட்ட மரத்தோடா?" என்று. ஓடி விடத்தான் முயன்றேன், ஆனால். உன்னைப் பிரிந்து வாழ முடியாது என்று. இந்த இரண்டு மாதங்களில். ஐயம் திரிபற அறிந்துகொண்டேன்,!" என்றவன். என்றவன் கை நீட்டி. அவளது கரத்தைப் பற்றினான்,!

"இனி. நீதான் சொல்ல வேண்டும்,!"

இணைந்திருந்த கரங்களின் மீது. நளினியின் பார்வை பதிந்தது,!

அவனது வலிய. பெரிய கரம், அதனுள். மெல்லிய நீண்ட விரல்களுடன் அவளது கை, இரண்டும். மிகப் பொருத்தமாக இணைந்திருந்தன,!

பார்த்துக் கொண்டிருந்தவளின் கண்கள் பளிச்சிட்டன,

இமை தாழ்த்தி. அதை மறைத்து. "எப்படிச் சொல்ல வேண்டும்?" என்று வினவினாள் அவள்,

சிறு யோசனையில் சுருக்கிய புருவம் உடனே உயர. “எல்லோரையும் போல. உனக்கும் பிடித்திருக்கிறது என்று வார்த்தைகளால்தான்,!” என்று கூறும்போதே. அவன் முகத்தில் ஆவலுடன் கூடிய முறுவல் மலரத் தொடங்கிவிட்டது,!

ஓரக் கண்ணால் நோக்கி. “இரு மாதங்களுக்கு முன்பாகக் கண்ணில் சேதி படித்தவருக்குத் இப்போது படிக்கத் தெரியாதா. என்ன? “ என்றபோது. அவளது குரல் கொஞ்சிக் குழைந்தது,!

அவனது விழிகள் சட்டெனப் பளபளத்தன,!

பார்வையோடு நில்லாமல். “இப்படிப் பொது இடத்துக்கு வந்தது. சரியில்லை என்று இப்போது தெரிகிறது,!” என்று அவன் கூறவும். அவளது கன்னங்கள் செம்மை பூசின,!

ஆனாலும் விடாமல். “என்னைப் பொறுத்தவரையில். இப்போதைக்கு எல்லா இடங்களும் ஒன்றுதான்,!” என்றாள் நளினி,

“நிஜம்?”

“நிச்சயமான நிஜம்,!” என்று பிடிவாதமாக இயம்பினாலும். கூச்சமும் மிகவே. பார்வையைத் திருப்பியவளின் கண்களில். புன்னகையோடு வாயிலைப் பார்த்த திருமயன் தென்பட்டான்,

இவ்வளவு நேரம். புவனேந்திரனும் அவளும் பேசியது அனைத்தும். இவர்கள் இருவருக்கும்தெளிவாகக் கேட்டிருக்கும்,! கேட்டிருக்கிறார்கள்,!முகத்தைப் பார்த்தாலே. தெரியவில்லையா?

அவர்கள் இருவருக்கும் மட்டுமே சொந்தமான ஓர் இனிய சல்லாபம். இன்னும் இருவரைப் பார்வையாளர்களாகக் கொண்டு அரங்கேறியிருக்கிறது,!

தொண்டையில் ஏதோ கசப்பாக உணர்ந்தாள் அவள், அசங்கியமாகவும்,!

பேச்சுப் போக்கில் அவளே. இவர்களை மறந்து போனாளே,! ஒருவேளை. புவனனைப் போலவே. அவளும் ஆகிவிட்டாளா?

அதெப்படி முடியும் ?

இப்போதே. புவனேந்திரன். அவளது கையைப் பிடித்ததையும். இந்த இருவரும் பார்த்திருப்பார்கள், இன்னும்
கன்னத்தை வருடுவது. ஒரு சின்ன அணைப்பு. உதட்டிணைப்பு ………………………………………………………………… என்று. இதெல்லாம்கூட

நடக்கக் கூடும்தானே? அதெல்லாம். தனிமையில் நடப்பதுதானே. இனிமை? அவைகளுக்கும். இவர்களைச் சாட்சியாக வைத்துக் கொள்வது என்றால். நினைக்கவே நெஞ்சு கூசும் அருவருப்பாக இருந்தது அவளுக்கு,

இந்த ஒருதரமே. ஏதோ குழப்பமும் ஆர்வமுமாக. அவள் தன்னை மறந்து இருந்துவிட்டாள்,!ஆனால். இதை நீடிக்க விட முடியாது,! நிச்சயமாய்,!

பாதுகாப்பு விஷயத்தில். நீக்குப் போக்குக் கூடாது என்று பிடிவாதமாக இருப்பவன் புவனேந்திரன், அவனிடம். அவசரப்பட்டுப் பேசிப் பெரிய பிரச்சினையாக ஆக்கிவிடக் கூடாது,. மெல்லத்தான் சொல்ல வேண்டும் என்று அப்போதைக்கு நளினி சும்மா இருந்தபோதும். சொல்லித்தான் ஆக வேண்டும் என்பதில் அவளும் உள்ளுரப் பிடி,வாதமாகவே இருந்தாள்,

அத்தோடு. இவர்கள் முன்னிலையிலேயே. அவளது எண்ணத்தைச் சொல்வதும் முடியாதுதானே?

ஆனால். புவனேந்திரன் அருகில் இவர்கள் இல்லாத நேரம் எது என்று யோசித்தவாறு பார்த்தால். குடித்த காஃபிக்கும். கொறித்த முந்திரிப்பருப்புக்கும் பில் வந்திருந்தது,

எப்போது கொண்டு வரச் சொன்னானோ?

“உன் வீட்டுக்குப் போய். அத்தை. மாமாவிடம் விஷயத்தைச் சொல்லி விடலாம். வா, பாவம். என்ன ஆயிற்றோ என்று கவலைப்;பட்டுக் கொண்டிருப்பார்கள், “ என்று. பில்லுக்குச் சில நோட்டுகளை வைத்துவிட்டுப் புவனேந்திரன் எழுந்தான்,

என்ன கரிசனம்,!அத்தையும். மாமாவும் கவலைப்படுவார்களாமே,!

அதற்குள் உறவு கொண்டாடத் தொடங்கிவிட்டானே,!

“என் அப்பா. அம்மா பற்றி. என்னை விடக் கவலைப்படுகிறீர்கள்,!” என்றாள் அவள் கின்டலாக,

“பின்னே? உனக்கு. அவர்கள் வெறும் பெற்றவர்கள்,!ஆனால். எனக்காக அல்லவா. அவர்கள் உன்னைப் பெற்று வளர்த்து வைத்திருக்கிறார்கள்,!இந்த நன்றிகூடக் காட்டவில்லை என்றால்

எப்படி? " என்றான் அவன் பதிலுக்கு,!

"அது சரிதான்,!ஆனால். உங்கள் நன்றியை இன்னும் பல ...... " என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போதே. திருமயன் அருகில் வந்தான்,!

"முத்து காரை எடுக்கப் போயிருக்கிறான். சார், எடுத்ததும். செல்லில் கூப்பிடுவான், அப்போது போனால் போதும்,! அதுவரை " என்று. அவர்கள் அருகே நெருங்கி நின்று. கவனத்துடன் சுற்றுமுற்றும் பார்க்கலானான்,!

புவனேந்திரனைப் பாதுகாக்கிறானாம்,!

ஒரு சின்ன விதையைப் போட்டு வைக்கலாம் என்று பார்த்தால். கெடுத்துவிட்டானே என்று தோன்றிய எரிச்சலை அடக்கிக்கொண்டு. பேசாமல் நின்றாள் நளினி,

வீட்டில். சுதர்சனம். சகுந்தலா இருவருமே. இந்தச் செய்தியை எதிர்பார்த்திருந்ததாகவே தோன்றியது,!

இனிப்பு எடுத்து வரும் சாக்கில் மகளை உள்ளே அழைத்துப் போய். "அந்த முதல் மனைவியைப் பற்றி உனக்கு ஒன்றும் இல்லையேம்மா?" என்று சிறு கலக்கத்துடன் பெற்றவள் வினவினாள்,

தாயை நேராக நோக்கி. "அது. அவரது கடந்த காலம். அம்மா,! நிகழ்காலமும். எதிர்காலமும் நம்முடையதாக இருக்கும்போது. முடிந்துபோன ஒன்றைப் பற்றி. நமக்கு என்ன. அம்மா?" என்று நளினி கேட்கவும். தாயின் முகமும்தெளிந்தது,!

எப்போதேனும் சில நினைவலைகள் தோன்றி மறையக் கூடுமே தவிர. மற்றபடி புவனேந்திரனின் முதல் திருமணத்தை. முடிந்து போன விஷயமாகத்தான் நளினி நிச்சயமாக நம்பினாள்,

ஆனால். அது அப்படியல்ல,. ஒரு விசித்திரமான வகையில் தொடர்ந்துகொண்டேதான் இருக்கும் என்று. அவள் அனுபவித்துத்தான் அறிய நேர்ந்தது,!

# அத்தியாயம் - 9

திருமண நிச்சயத்தைப் பகிரங்கப் படுத்தாமல். அவர்களுக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று புவனேந்திரன் சொன்னபோது. யாருமே. அதை ரொம்பப் பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை,!

ஏனெனில். அவனைப் பற்றி அவநம்பிக்கையுற வழியின்றி. ஒரு நீதிபதி. ஒரு போலீஸ் அதிகாரி. இவர்களின் முன்னிலையில். திருமணம் பற்றி எழுதிக் கையெழுத்திட்டு. அந்தப் பெரிய மனிதர்களின் சாட்சிக் கையொப்பத்தோடு. சுதர்சனத்திடம் . அவன் ஏற்கனவே கொடுத்து விட்டிருந்தான்,

அதுவும். சுதர்சனமாக எந்த ஒரு உறுதியையும் கேட்கு முன்னதாகவே,!

அத்தோடு. கோவைக்கே சென்று. அவனைப் பற்றி. சுதர்சனம்தெளிவாக விசாரித்து அறியவும். வழி வகை செய்து கொடுத்திருந்தான்,!

சுதர்சனத்துக்குப் பயணத்தில் மிகுந்த திருப்தி,!அதன் பிறகு. வருங்கால மருமகன் என்ன சொன்னாலும். அவரைப் பொறுத்த வரையில். அப்பீலே கிடையாது,!

சகுந்தலாவுக்கே. தன் செல்ல மகளுக்கு. யார் யார் கண் பட்டுவிடுமோ என்று பயம்தான்,!

ஆனால். புவனேந்திரனுக்கு இது இரண்டாம் மணம் என்பதால். ஆரவாரம் வேண்டாம் என்று எண்ணுகிறானோ என்று. அவளுக்குக் கவலையாகவும் இருந்தது,!

என்ன இருந்தாலும். அவளுடைய மகளுக்கு. இது முதல் திருமணம்தானே? அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டாமா?

ஆனால். “மாப்பிள்ளைக்குப் பிடிக்கவில்லை என்றால். விட்டுவிடேன். சக்கு,!” என்று சுதர்சனமும் சொல்லிவிட்டார்,

மகளுக்கோ. சடங்குகள். சம்பிரதாயங்கள். உறவினர். கூட்டம் பற்றிய நினைவே இருக்கவில்லை,!அவளைப் பொறுத்த வரையில். புவனேந்திரனை அடிக்கடி கண்ணால் பார்த்துக் கொண்டிருப்பதே.

போதுமானதாக இருந்தது,!

பானகத் துரும்பாக ஒரே ஓர் எரிச்சல். அவனைத் தனியே சந்திக்க. பேச முடியாமல். பாதுகாப்பு. பாதுகாப்பு என்று அவனது மெய்காப்பாளர்கள் கூட இருந்ததுதான்,!

ஒருவருக்கு ஒருவர் என்று ஆனபின். அவனைப் பார்க்க வேண்டும். கேலியும் கிண்டலுமாகப் பேசிச் சிரிக்க வேண்டும்,. தோளில் சாய வேண்டும்,. அவன் கன்னத்தில் செல்லமாகத் தட்டும்போது. பதிலுக்குத் தானும் அவன் மூக்கைப் பிடித்து ஆட்ட வேண்டும் என்று வயதுக்கும். நிலைமைக்கும் உரிய எத்தனையோ ஆசைகள் அவளுக்கு,!

சொல்லப் போனால். எல்லாமே வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்கு உட்பட்டவைதான்,

ஆனால். எப்போதும் புவனனுடன் கூடவே இருந்த பாதுகாவலர்கள் முன்னிலையில். ஒன்றுமே முடியாமல். தன்னை அடக்கிக்கொண்டு. அவள் சும்மா இருக்கும்படி ஆயிற்று,!

நாளுக்கு நாள் பொறுமையிழந்து கொண்டிருந்த நளினிக்கு. அந்த நிலையை எப்படி மாற்றுவது என்பது தவிர. வேறு எதுவும் பெரிதாகத் தோன்றவே இல்லை,!

எனவே. சகுந்தலாவும். தன் ஆசைகளை அடக்கிக்கொள்ளும்படி ஆயிற்று,!

ஆனால். பூ விரியும்போது வாசனை பரவுவதைத் தடுக்க முடியுமா?

நல்ல வரன் இருப்பதாகக் கூறிக்கொண்டு. ஒரு திருமணத் தரகர் வந்தார், . அவரிடம் ஏற்கனவே திருமணம் நிச்சயமாகிவிட்டதைச் சொல்வதுதானே. முறை?

அத்தோடு. நளினியுடைய குடும்பம் வசித்தது. ஃப்ளாட்டில், எல்லோரிடமும் தோழமையோடு பழகுகிற குடும்பம் என்பதால். பேச்சுவாக்கில். நளினி. புவனேந்திரன் திருமணம் பற்றிய செய்தியும். அரசல் புரசலாக வெளியே பரவலாயிற்று,!

இந்நிலையில். ஒரு நாள் தெரு முனையில் இருந்த பலசரக்குக் கடையில். வெல்லம் வாங்கி வரச் சென்ற நளினி. தன் பின்னோடு. ஒரு குறிப்பிட்ட இடைவெளி விட்டு. ஒருவன் தொடர்ந்து வரவும்

சற்று மிரண்டாள்,

யாரிவன்? அதற்காகப் பின் தொடர்கிறான்?

பொதுவாக. அந்தப் பகுதியில் பயம் கிடையாது,!பல ஆண்டுகளாக. அங்கேயே வசிப்பதால். பார்த்தால் குறைந்த பட்சமாக ஒரு புன்முறுவலைப் பரிமாறிக் கொள்ளும் அளவுக்குத் தெரிந்தவர்களே,! உதவி என்று அழைத்தால் கட்டாயம் வருவார்கள், எனவே. சின்னப் பிள்ளை கூடத் தனியாகக் கடைக்குப் போய்ச் சாமான் வாங்கி வரும்,!

அந்த அளவுக்குப் பாதுகாப்பானது,!

பாதுகாப்பு,!

சட்டெனப் பொறி தட்ட. நளினி நின்று. தன்னைத் தொடர்ந்தவனைக் கூர்ந்து நோக்கினாள்,!

சுற்று முற்றும் கவனத்துடன் ஆராயும் அதே பார்வை,!பான்ட் பாக்கெட்டில் மறைந்;திருந்த ஒருகை,!துப்பாக்கியோ. கத்தியோ. ஏதோ ஓர் ஆயுதத்தின் பிடியில் அந்தக் கை இருக்கும் என்பது. புவனேந்திரன் மூலம் அவள் அறிந்த விஷயம்,!

ஏன் இப்படிப் பாக்கெட்டுக்குள் கையை வைத்தபடியே இருக்கிறார்கள் என்று. முத்து. திருமயன் பற்றிக் கேட்டபோது. புவனேந்திரன் அவளிடம் சொல்லியிருக்கிறான்,!ஏதேனும் அவசரம் என்றால். அப்போது பயன்படுத்த. ஆயுதம் தயார் நிலையில் இருக்க வேண்டுமாம்,!

“தன்னைக் கொல்ல வரும் பசுவையும் கொல்லலாம்” என்று பழமொழி உண்டுதான்,!

ஆனால். இன்னொரு மனிதரை ரத்தம் சிந்த வைப்பதற்குத் தயார் நிலையில் ஒருவன் அலைவது என்றால் அவளுக்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றியது,!

அது ஒரு புறம் இருக்க. தனக்குத்தான் பாதுகாப்பு. பாதுகாப்பு என்று இரண்டு பேரை எப்போதும் கூட்டிக்கொண்டு. அடியாட்களோடு திரியும் தாதா போலப் புவனேந்திரன் அலைகிறான் என்றால். அவளுக்குமா?

அவனையே. இந்தப் பழக்கத்தை விட்டொழிக்கச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தவளுக்கு. ஆத்திரம் வந்தது,!

அல்லது. ஒரு வேளை அவள்தான் தவறாக எண்ணுகிறாளோ?

இந்த இடத்தில். யாரும் அவளை எதுவும் செய்துவிட முடியாது என்ற தைரியத்துடன். நளினி. அந்தப் புதியவனை ஒற்றை விரலால் அருகில் அழைத்தாள்,

அவன் வந்ததும். “என்ன வேலை இது? ஏன். என் பின்னோடு வருகிறீர்கள்?” என்று விசாரித்தாள்,

ஆனால். அவள் கூப்பிட்டதும் தயங்காமல் அவன் வந்த விதமே. அவளுக்கு உண்மையை உணர்த்திவிட்டபோதும். ஒரு வேளை அப்படியிராதோ என்ற ஒரு சிறு நப்பாசையில். அவனிடம் கேட்டாள் நளினி,

ஆனால். நப்பாசை. அற்பாசை ஆகிவிட. “என் பெயர் சக்திவேல், உங்கள் பாதுகாப்புக்காகப் புவனேந்திரன் சார். என்னையும். கண்ணன் என்று இன்னும் ஒருவரையும் நியமித்திருக்கிறார்,!” என்றான் அவன்,!

“இன்னும் ஒருவர் வேறா?”

“ஆமாம்,!ஒருவரை மட்டும் பாதுகாப்புக்கு வைப்பது. இக்கட்டான சமயங்களில். பயனற்றுப் போய்விடும்,!எப்போதுமே. குறைந்தது இரண்டு பேரேனும் சேர்ந்து. இந்த வேலை செய்வது நல்லது,!” என்று விளக்கினான் அவன்,

நளினிக்கு. வெடிக்கப் போகும் எரிமலை போன்று. மனம் குமுறியது,!

ஆனால். அவளது கோபத்தை இவனிடம் காட்டி என்ன செய்வது? எய்தவன் இருக்க. அம்பை நோவது மடத்தனம்,!

எனவே. பிடிவாதமாகப் புன்னகைத்து. “ஆமாமாம்,!புவனேந்திரன் ஒன்று செய்து. அது பலனற்றுப் போகலாமா? இவ்வளவு நேரம் சும்மா நின்று போரடித்திருக்குமே,!அந்தக் கடைக்குப் போய். உபயோகமாய் ஒரு கிலோ வெல்லம் வாங்கிவாருங்களேன்,!” என்றாள் அவள். இனிய குரலில்,!

குரலில் மறைந்திருந்த ஏளனம் எளிதில் கண்டுபிடிக்கக் கூடியதில்லை,!பௌதிகப் பாடத்தில். “உள்ளுறை வெப்பம்” என்பார்களே அதைப்போல வெளிப்படையாகத் தெரியாமல் கலந்திருந்தது,

அதை. அந்த சக்திவேல் கண்டுபிடித்தானோ. என்னவோ? ஆனால். வெல்லத்தை வாங்கிவர மறுத்துவிட்டான்,

“என் வேலை. உங்கள் பாதுகாப்பு. மேடம், கடைக்குப் போய்ச் சாமான் வாங்குவதில் என் கவனத்தைச் சிதற விட முடியாது,!” என்று. ஒரு காரணத்தைச் சொன்னானே தவிர. இருந்த இடத்தை விட்டு. அசையவே இல்லை,!

அதுவே. அவளுக்கு எரிச்சல்,!

போதும் போதாததற்கு. அந்தக் குடியிருப்புகளின் சங்கத் தலைவர் வேறு. அவர்களைப் பார்த்துவிட்டு. அருகில் வந்து. “யாரம்மா? எதுவும் பிரச்சினையா?” என்று விசாரிக்கத் தொடங்கினார்,!

இந்த மாதிரி விஷயம் என்று உண்மையைச் சொன்னால். பந்தாக் காட்டுவது போல இருக்கும்,!எனவே. “பி பிரச்சினை ஒன்றும் இல்லை. அங்கிள், தெரிந்தவர்தான், சும்மாதான் பே பேசிக் கொண்டிருக்கிறேன் ...............”ஏதோ வாய்க்கு வந்ததைச் சொல்லிச் சமாளிக்கும்படி ஆயிற்று,!

தலையாட்டிவிட்டு அவர் போய்விட்டாலும். நளினியின் சீற்றம் தணிய வெகு நேரம் ஆயிற்று,!

ஆத்திரத்தில் புவனேந்திரனிடம் ஏதாவது கண்டபடி பேசிவிடக் கூடாது என்று தோன்றவே. மனம் சற்று சமனப்படும்வரை நளினி பொறுத்திருந்தாள்,

என்னதான் பழைய ராஜாக்கள் காலம் மாதிரி மெய்க்காவலர்களை அவன். அவனுக்கு வைத்திருப்பதே அவளுக்குப் பிடிக்காவிட்டாலும். அவனிடம் வாக்குவாதம் செய்யப் பிடிக்காமல்

வாளா இருந்தாள்,!

ஆனால். இப்போது அவன் நியமித்திருப்பது. அவளுக்கு அல்லவா?

முன்னதைக் காட்டிலும். இது அதிக எரிச்சல்தான், ஆனால். அவன் செய்தது. அவளது நலம் கருதி,!அதனால். அவனிடம் சினம் காட்டுவது. சரியல்ல,!நிதானமாக எடுத்துச் சொல்ல வேண்டும்,!

ஒருவாறு மனதை அமைதிப்படுத்திக்கொண்டு. புவனேந்திரனுக்கு ஃபோன் செய்தால். அவளிடம் விடை பெறாமலே. அவன் சென்னையை விட்டுக் கிளம்பிச் சென்றிருந்தான்,!

அப்படி அவன் சொல்லாமல் சென்றதே இல்லையே,!

மறு நாளில் இருந்து. திரும்பி வரும்வரை. அவளைப் பார்க்க முடியாதே என்று வருத்தப் படாமல். அவன் பிரிந்து போனதும் கிடையாதுதான்,!

சட்டென நளினியின் மனம் கலங்கிப் போயிற்று,!

"போய் வருகிறேன்" என்று ஒரு வாக்கியம்,!

அவளிடம் ஏன் சொல்லவில்லை? ஏதேனும் கோபமா?

ஏன் கோபம்? அவள் ஏதேனும் தப்பு செய்தாளா?

அவளை அறியாமலே ஏதேனும் தப்பு செய்து. அவளிடம் மனம் வெறுத்துப் போய்விட்டானா?

முன்பும். இதே போல நன்றாகப் பழகிக்கொண்டு இருந்தபோதுதான். திடீரென்று ஒதுங்கிக் கொண்டான்,

இப்போதும். அப்படிச் செய்யமாட்டான் என்று. என்ன நிச்சயம்?

முன்பு. திரும்பி வந்தான், ஆனால். இப்போதுமட வருவான் என்று என்ன நிசச்சயம்?

தொழில் இருக்கிறது,. கட்டாயம் வரத்தான் போகிறான்,

ஆனால். அவளிடம் உள்ள அன்பு? அது மாறாமல் இருக்கும் என்ன நிச்சயம்?

நிச்சயம்தான்,. நிச்சயமேதான்,!இதே தொழில் முன்னரும் இருந்தது,! ஆயினும். அது போதாதென்று. அவளுக்காக வரவில்லையா?

இப்போதும் வருவான்,

இப்படிப் பலவாறு யோசித்து. மிகவும் சிரமப்பட்டு மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவள் கவலையோடு காத்திருந்தால். ஒன்றுமே நடவாதது போல. அவன் வெகு சாதாரணமாகத் திரும்பி வந்தான்,!

வந்தவன். அவளிடம் சொல்லாமல் கொள்ளாமல் சென்றது பற்றி. எந்த விளக்கமும் இல்லாமல். "இந்தத் தளிர்ப் பச்சை வண்ண சல்வாரில். நீ தேவதை மாதிரி இருக்கிறாய்,!" என்றபோது. நளினியால் அதை இயல்பாக ஏற்க முடியவில்லை,!

பத்து நாட்களாகப் பட்ட துன்பம் உசுப்ப. “நான் உங்களைத் தேடினேன்,!ஆனால். நீங்கள் ஊருக்குப் போய்விட்டதாக. உங்கள் வீட்டுக் காரியஸ்தர் சொன்னார்,!” என்றாள் ஒரு மரத்த குரலில்,!

ஒரு வினாடி தயங்கினானோ?

அவள் நிச்சயப்படுத்திக் கொள்ளுமுன். “அடடா,!” என்று தலையில் தட்டிக்கொண்டான் புவனேந்திரன், “இதைத்தான். துரதிர்ஷ;டம் என்பது,!வழக்கமாக. நானாகத்தானே ஓடி ஓடி வருவது? அப்படியின்றி அதிசயமாக. மகாராணி நீயே என்னைத் தேடி வந்தால். அந்தச் சமயம் பார்த்து. வேலை என்னை வேறிடத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டது. பார்,!என்னம்மா. ஏதும் தன்னந் தனிமையில் கவனித்தாக வேண்டிய சமாசாரமா? அதற்கெல்லாம். கால நேரம் எதற்கு? இப்போது வேண்டுமானாலும் ............................... என்ன சொல்லுகிறாய்?” என்று தணிந்த குரலில் கொஞ்சலாகக் கேட்டுக் கண் சிமிட்டினான்,!

அவனது பேச்சின் பொருளும். கண் சிமிட்டலுமாக. நளினியின் முகம் செக்கச் சிவந்து போயிற்று,!

“ச்சு,!போங்கள்,!என்ன பேச்சு இது? நான் ஒன்றும். அந்த மாதிரி உங்களைத் தேடவில்லை,!ஆனால் .......” என்றவளை இடைமறித்து. “நினைத்தேன்,!” என்றான் அவன் சோகமாக,!

“நமக்கேதுடா அப்படிப்பட்ட அதிர்ஷ;டமெல்லாம் என்று. முதலிலேயே சந்தேகம்தான்,!ஆனாலும். ஒரு நிமிஷம். மனம் என்னென்னமோ ஆகாயக் கோட்டை கட்டிவிட்டது,!ஆனாலும். அவ்வளவு உயரத்திலிருந்து. மனிதனை இப்படித் தடாலென்று படு பாதாளத்தில் தள்ளக் கூடாதும்மா,!பார். ஏமாற்றத்தில் எனக்குச் சரியாகப் பேசக்கூட முடியவில்லையே,!“ என்று. அவன் மேல் மூச்சு வாங்கிக் காட்ட. அடக்க மாட்டாமல். அவளுக்குச் சிரிப்பு வந்துவிட. அந்தப் பேச்சு அத்தோடு போயிற்று,!

அவளை வீட்டிற்குக் கூட்டிவந்து. பெற்றோருடன் கலகலப்பாகப் பேசியிருந்துவிட்டுப் புவனேந்திரன் கிளம்பிச் செல்லும்வரை. நளினிக்கு வேறுபாடாக ஒன்றும் தோன்றவில்லை,

அதிலும். பேசியது திருமணத் திட்டங்கள் ,!

எப்படி எளிமையாகக் கோவிலில் திருமணத்தை

முடித்துக்கொண்டு. நேரே திருமணப் பதிவு அலுவலகத்துக்குப் போய்த் திருமணத்தைப் பதிவு செய்துவிடுவது என்று அவன் மண நாளின் நிகழ்வுகளை வரிசைப்படுத்தி. அவன் விளக்கிச் கூறியபோது. நளினியின் முழு மனதும் அதில்தான் இருந்ததே தவிர. வேறு எதையும் எண்ணிப் பார்க்கக் கூட அவளுக்குத் தோன்றவில்லை,!

பிறகும். வீட்டினர் நால்வரும் அது பற்றித்தான் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தனர்,

தான் விரும்பியதுபோல. விலை உயர்ந்த டிஷ;யூ. புரோகேட் சேலைகளில் மகளை அலங்கரித்துப் பார்க்க முடியாது போல இருக்கிறதே என்று. சகுந்தலா குறைப்பட்டாள், சூரிய சந்திரப் பிரபைகளோடு நெற்றிச் சுட்டி. நத்து. இடுப்பில் ஒட்டியாணம் என்று. தன் அழகிய மகளின் அலங்காரம் பற்றி. அவளுக்கு எண்ணிறந்த கனவுகள்,!

வருங்கால மருமகனின் எளிமையான திருமணத் திட்டத்துக்கு. அந்த மாதிரி அலங்காரங்கள் சற்றும் பொருந்தாது,!

இந்தச் சுருக்கமான எளிய திருமணத்திற்கு. அவர் விரும்பிய வண்ணம். அக்கம் பக்கத்தார். உறவினர். நட்பாளர்கள் அனைவரையும் எப்படி அழைப்பது என்ற குழப்பம்

சுதர்சனத்துக்கு,!

இதற்கிடையே. “எனக்கு வகுப்பில் எந்தப் பரீட்சையும் இல்லாத நாள் பார்த்துத் திருமணத்தை வையுங்கள்,!லீவு போடவும் சொல்லாதீர்கள், நான் பிளஸ் டு “வாக்கும்,!” என்று பெரிய முக்கியஸ்தி போல. ஊடுபா ஓட்டினாள். தங்கை மஞ்சரி,!

வீட்டுக்குக் கடைக்குட்டி என்பதால். அவளது பேச்சில் எல்லோருக்கும் சிரிப்புதான் வந்தது,!

பேச்சும் சிரிப்புமாக இருந்துவிட்டு. நால்வரும் படுக்கப் போகவே. மணி பதினொன்றை நெருங்கிவிட்டது,!

ஆனால். புவனேந்திரனின் புன்னகை முகத்தை நினைத்தவாறே சுகமாகப் படுத்தவளுக்குச் சட்டென்று உறுத்தியது,!

சொல்லாமல் கொள்ளாமல். தான் திடுமென வெளியூர் சென்றது பற்றிய விவரத்தைப் புவனேந்திரன். அவளிடம் விவரம் சொல்லவே

இல்லை,!

எப்போதுமே. தனது வேலைகளை எல்லாம். அவளிடம். அவன் ஒப்பித்துக் கொண்டிருந்தான் என்று சொல்ல முடியாது,!அப்படி. அவள் எதிர்பார்க்கவும் இல்லை,!

“உன்னதம்” தவிர. அவனது மற்ற தொழில்கள் பற்றி. அவனே சொன்னாலும். அவளுக்குப் புரிவதற்கில்லை,

ஆயினும். மில்லுக்குப் பஞ்சு வாங்கப் போனேன்,. பிரின்ட் போட்ட பனியன் துணி. ஏற்றுமதிக்கு முடித்துக் கொடுப்பதைப் பார்க்க வேண்டியிருந்தது,. இப்படிப் பொதுவாக என்ன விஷயம். எங்கே போனான் என்பது பற்றிச் சொல்லுவான்,

செல்லும்போதும் சொல்லுவான்,!அல்லது. வந்த பிறகேனும் பேச்சில் வரும்,!”உன்னிடம் மறைப்பதற்கு ஒன்றுமில்லை” என்பது போன்ற இயல்பான பேச்சு,

எப்படியும். இன்னும். “இத்தனை நாட்கள் உன்னைப் பார்க்க முடியாதே” என்று வருத்தப்படாமல் அவன் பிரிந்து சென்றதே கிடையாது,!

ஆனால். இந்த முறை அதெல்லாம் ஒன்றுமின்றி அவன் சென்றது மட்டுமின்றி. சென்று என்ன செய்தான் என்பதையும் சொல்லாமலே மழுப்பிவிட்டான்,!

அது மழுப்பலேதான்,!

மேற்கொண்டு பிடிவாதமாகக் கேட்டு விடுவாளோ என்ற கலக்கத்தில். அதைத் தவிர்ப்பதற்குத்தான். புவனேந்திரன் அவ்வளவு கொஞ்சலும் குலாவலுமாகப் பேசினானோ?

திருமணத் திட்டங்கள் பற்றி விவரித்ததுகூட அதற்காகத்தானோ என்றும் தோன்றவும்.

நளினி குழம்பிப் போனாள், குன்றியும்,!

எப்போதுமே. அவன் சென்னையில் இல்லாதபோது. நளினிக்குக் கொஞ்சம் மனதுக்குச் சோர்வாகத்தான் இருக்கும், அப்புறம். அவன் திரும்பி வந்ததும். உலகம் வண்ணமயமாக ஆகிவிடும்,

இப்போது அவளிடம் சொல்லாமல் கொள்ளாமல் போனபோது தோன்றிய. புவனேந்திரன் தன்னை வெறுத்துவிட்டானோ. விலகிப் போய்விடுவானோ என்று தோன்றிய கலக்கங்கள் எல்லாமே. அவனை நேரில் பார்த்த பிறகு அடியோடு மறைந்து போயின,

ஆனால். அவள் அறியக் கூடாத ஏதோ ஒரு மர்மம் அவனது வாழ்வில் இருக்கிறதோ என்ற ஐயம் இப்போது அவளுக்கு உண்டாயிற்று,!

அது என்னவாக இருக்கக் கூடும்?

அவளிடம் சொல்லக் கூடாதது என்றால். ஒரு வேளை. அது. அவனுடைய முதல் மனைவி சம்பந்தப்பட்டதாக இருக்குமோ?

# அத்தியாயம் -10

நளினியின் மனம் ரொம்பவே குழம்பலாயிற்று,!

புவனேந்திரனின் மர்மப் பயணத்தின் காரணம். அவனுடைய முதல் மனைவி தொடர்புடையதாக இருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் மட்டும்தான். அவளுக்கு முதலில் தோன்றியது,!

அந்த ரதியின் பிறந்த நாளோ? அன்றி இறந்த நாளோ? அது தொடர்பான சடங்குகளுக்காகப் புவனேந்திரன் சென்றிருக்கக் கூடும் என்றாலும். அதை முழுமையாக அவளால் ஒப்ப முடியவில்லை,!

அந்த மாதிரி விஷயம் என்றால். அதை மூடி மறைப்பானேன்?

அதுவும். ஏற்கனவே மணமானதை வெளிப்படையாகச் சொன்னவன். இதையும் சொல்லிவிட்டே சென்றிருக்கலாம்,!ஒருவர் இறந்துவிட்டால். சில குறிப்பிட்ட நாட்களில் அவர்களை நினைவுகூர்ந்து. சல சடங்குகளைச் செய்வது. நம்மில் பழக்கம்தானே? அதுவும். அவனது முதல் மணம் அவனது கடந்த காலம்,. அதை. அவள் பொருட்படுத்தப் போவதில்லை என்றுவிட்ட பிறகு. இது போன்ற விஷயங்களை அவளிடம் மறைக்கத் தேவையே இல்லையே,!

எனவே. இது வேறு விஷயம்,!

எப்போதும். கிங்கரர்கள் மாதிரிக் கூடவே நிற்கும் காவலர்களின் காதுகளுக்குக் கூட எட்டக் கூடாத தொழில் ரகசியமாக இருக்கக் கூடும் என்று தன்னைத்தானே. நளினி சமாதானம் செய்துகொண்ட போதும். அவள் கொஞ்சமும் அறியாத ஏதோ ஒன்று புவனேந்திரனின் வாழ்வில் இப்போதும் இருப்பது. அவளுக்கு உறுத்தலாகவே இருந்தது,!

அப்படி எதையும். அவனிடமிருந்து மறைக்க வேண்டும் என்று. அவளுக்குத் தோன்றியதே இல்லையே,!

இந்நிலையில். அவளது ஆத்திரத்தைத் தூண்டும் விதமாக. மறுநாள் வேறொன்று நடந்தது,!

தனக்குப் போலவே புவனேந்திரன். அவளுக்கும் காவலுக்கு ஆள் வைத்தது. நளினிக்குக் கொஞ்சமும் பிடிக்காத ஒன்று, அது பற்றித் தன்னுடைய வருங்காலக் கணவனுடன் பேசி. அந்தக்

காவலை நிறுத்தியாக வேண்டும் என்று. அவள் ஏற்கனவே முடிவு செய்திருந்தாள்,

ஆனால். ஏற்பாடு செய்து. சம்பளமும் கொடுக்கும் புவனேந்திரனின் சொல்தான். அந்தப் பாதுகாவலர்களிடம் எடுபடும் என்று புரிந்ததால். அவன் திரும்பி வரும்வரை. இந்தப் பாதுகாவல் விஷயம் அவளது குடியிருப்புப் பகுதியில் மற்றவர்கள் கவனத்தை ஈர்க்காத விதத்தில். மிகவும் எச்சரிக்கையுடனேயே நடந்துகொண்டாள்,

சாதாரணமாக வெளியே செல்வதை நிறுத்திக்கொண்டு. தந்தை வேலைக்குச் செல்லும்போது. அவருடனேயே "உன்னத"த்துக்குச் சென்று இறங்கிக்கொண்டு. வேலை முடிந்து. அவர் திரும்பி வரும்போது. அவருடனேயே அவளும் திரும்பி வந்தாள்,

குடியிருப்புப் பகுதிக் கடைக்குக் கூடச் செல்வது இல்லை,!

துணிகளுக்கு அலங்கார வேலைக்குத் தேவையான பொருட்களை வாங்குவது. வேலை முடித்த துணிகளை. உரிய இடங்களில் சேர்ப்பது எல்லாவற்றையும் விட்டுவிட்டாள்,

எனவே. அந்தக் காவலர்கள் அவளைப் பின் தொடர்வது. வெளிப்படையாக யார் கண்ணிலும் பெரிதாகப் படாமலே இருந்து வந்தது,!

ஆனால். அன்று இரவெல்லாம் மனக் குழப்பத்தில் புரண்டவள். காலையில் அதிக நேரம் தூங்கிவிட. சுதர்சனமும் அன்று வெளியே ஒருவரைச் சந்தித்துப் பேசிவிட்டு வேலைக்குப் போக வேண்டியதாக இருந்ததால். தேவைப்பட்டால். நளினியை ஆட்டோவில் போகச் சொல்லும்படி மனைவியிடம் கூறிவிட்டு. அதிகாலையிலேயே கிளம்பிவிட்டார்,!

நளினிக்கும் அது உசிதமாகவே தோன்றியது,

குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளியே வந்தால். "உன்னத"த்துக்கு வெகு அருகிலேயே இறங்குவதற்குப் பஸ் வசதி இருந்தது,

ஆனால். அவள் பஸ்ஸில் ஏறி. முன்னும் பின்னுமாக இந்தப் பாதுகாவலர்களும் ஏறி. இங்குமங்கும் விழித்துப் பார்த்தால். ஏதேனும் ஏடாகூடம் ஆகி. இவர்களுக்குத் தர்ம அடி விழுந்துவிடுமோ

என்று. நளினிக்குப் பயமாக இருந்தது,

எனவே. அலுவலகத்துக்குக் கிளம்பி. தெருமுனை வரை நடந்து சென்று. அங்கே வந்த ஆட்டோ ரிக்ஷாவை நிறுத்தி. ஏறினாள்,

முன்னும் பின்னுமாகச் சக்திவேலும். அவனுடைய கூட்டாளியும் கூடவே வந்தபோதும். யாரோ தெருவில் போகிறவர்கள் போலவே வந்ததால். அதுவரை பிரச்சினை இல்லை,!

ஆனால். அவள் வண்டியில் ஏறுகையில் சக்திவேல் அருகில் வந்து. ஆட்டோ ஓட்டியை முதுகில் தட்டி. “பாரப்பா. நான் இந்த அம்மாவுக்குக் காவல்,!பின்னோடு பைக்கில் வருவேன், கவனித்துச் சற்று மேதுவாகவே போ,!” என்றான்,

குழப்பமும் குறுகுறுப்புமாக நோக்கியபோதும். ஆட்டோ ஓட்டியும் தலையாட்டிவிட்டு. ஏவப்பட்ட விதமாக. நிதானமாகவே வண்டியை ஓட்டினான்,

பக்கவாட்டுக் கண்ணாடியில் தெரிந்த அவனது முகத்தில். குறுகுறுப்பையும் ஆர்வத்தையும் கண்ட நளினிக்கு மனதோடு. உடம்பும் கூசிக் குறுகிப் போயிற்று,!

இந்த ஆட்டோ ஓட்டி. இப்போது என்ன நினைத்துக் கொண்டிருப்பான்?

“காதலனோ. கணவனோ இவளுக்குக் காவல் வைத்திருக்கிறான்,!இவளது நடத்தை எப்படிப்பட்டதோ” என்றுதானே எண்ணுவான்?

அவன் நினைப்பது மட்டுமா? அவன் முகத்தைப் பார்த்தாலே. இந்தக் கதையை யார். யாரிடமோ சொல்லத் துடித்துக் கொண்டிருப்பது. நன்றாகத் தெரிந்தது,!

கண். காது. மூக்கு வைத்து. எத்தனை பேரிடமோ நன்றாக அளக்கப் போகிறான்,!

சே,!என்ன கேவலம்,!என்ன கேவலம் என்று நளினியின் மனம் பதறித் தவித்தது,!

இன்றைக்கு. இந்த அசட்டுத்தனத்துக்கு. ஒரு முற்றுப்புள்ளி வைத்தே ஆகவேண்டும் என்று தீர்மானித்த பிறகுதான். நளினிக்குச் சரியாக மூச்சுக்கூட விட முடிந்தது,!

அவ்வளவு ஆத்திரம்,!

வழக்கம் போலவே. மற்றவர்களைவிடச் சீக்கிரமாகவே புவனேந்திரன் வந்திருந்தான்,!

வெளிப்படையாக யாரும் உறுதிப்படுத்தாவிட்டாலும். ஊகமும் வதந்தியுமாக. புவனேந்திரன். நளினி உறவு. அங்கே எல்லோருக்கும் தெரிந்து போயிருந்தது,!

அதனால். அவளுக்குத் தனி மரியாதையும் கிடைத்துக் கொண்டிருந்தது,!

எனவே. அவனைத் தேடி அவள் சென்றபோது. அவளை யாரும் தடுக்கவுமில்லை,!

சும்மா உள்ளே போகச் சொல்லிவிட்டு. அப்புறமே. அவனுக்கே அறிவித்தார்கள்,

புவனேந்திரனின் அலுவல் அறைக்குள் நளினி சென்றபோது. அங்கே "உன்னத"த்துடைய தலைமைக் கணக்கரும். மூன்று தள நிர்வாகிகளும் இருந்தனர்,

எவ்லோரின் முகங்களிலும் புன்னகையும் இருந்தது,!

புவனனின் கண்களில். அவளுக்காக ஒரு தனியான பளிச்சிடல்,! அதைக் கண்டதும். அவளும் தன்னை மீறிப் புன்னனை செய்தாள்,!

"வா. நளினி,!" என்று அவளை முக மலர்ச்சியுடன் வரவேற்ற புவனேந்திரன், "உன் யோசனைப்படி விற்பனைப் பொருட்களை மாற்றினோம் அல்லவா? இந்த மாத விற்பனை வெகுவாகக் கூடியிருக்கிறது,!" என்று அவளிடம் தெரிவித்துவிட்டு. மீண்டும் மற்றவர்களிடம் திரும்பினான்,

"ஓகே. சார்,!நீங்கள் மூவரும். எந்தெந்தப் பொருட்களில் விற்பனை அதிகமாகி இருக்கிறது என்று. ஒரு கணக்கு எடுத்து எனக்கு அனுப்புங்கள், வாடிக்கையாளர்களைக் கவனிப்பதற்கு. இன்னும் அதிக ஆட்கள் வேண்டும் என்றால். அதைப் பற்றியும் விவரம் கொடுங்கள், கணக்கர் சார். சென்ற மாத வரவு செலவு பற்றி.தெளிவான ரிப்போர்ட் ஒன்று வேண்டும், இதே போலத் தொடர்ந்தால். தீபாவளிப் போனசை அதிகமாகக் கொடுக்கலாம். பாருங்கள்,!இனி. அவரவர் இடத்துக்குப் போய். இந்த வேலைகளைப்

பார்க்கிறீர்களா?”

அவள் வந்ததும் அனுப்புவது போலத் தோன்றாமல். நால்வரும் சிரித்த முகமாகவே. அவரவருக்கு அளிக்கப்பட்ட வேலைகளைக் கவனிக்கக் கிளம்பும்படிச் செய்துவிட்டானே,!

அவன் சொன்ன “போன”சால் வந்த மலர்ச்சியா?

மற்றபடி. அந்த மூன்று பெரியவர்களும். நளினியின் யோசனை என்பதை. எப்படி ஏற்பார்கள்? அவர்களிடம். அவள் முட்டிக்கொண்டதும். அவர்கள் மிரட்டியதும் எப்படி மறக்கும்?

அல்லது. விற்பனை அதிகரிக்க. அதிகரிக்க அவர்களுக்கே உற்சாகம் வந்துவிட்டதா?

கணக்கரும் சென்று. அவர் பின்னே கதவு மூடிக்கொண்ட பிறகு. “எல்லோரும் போயாயிற்று,!இப்போது சொல், என்னம்மா. என்ன பிரச்சினை?” என்று கேட்டான் அவன்,

பிரச்சினை என்று யார் சொன்னது என்ற கேள்வி தொண்டை வரை வந்து அடங்கியது,!

பதிலாக. ஓடிஓடி வருகிறவன் நான்தானே என்று அவன் சல்லாபிப்பதைக் கேட்டு மயங்கும் மனநிலை. அப்போது அவளுக்கு இல்லை,!

அத்தோடு. எல்லோரும் போயாயிற்று என்று அவன் சொன்னதே. இருவரின் எண்ணப் போக்குகளுக்கும் இடையே உள்ள இடைவெளியின் அளவை எடுத்துக் காட்டுவதைப் போல இருந்தது அவளுக்கு,!

ஏனெனில். அந்த அறையில் நடப்பன எதிலும் சம்பந்தப்படாமல் ஒதுங்கி. அந்தப் பெரிய அறையின் இரு மூலைகளில். முத்துவும். திருமயனும். இப்போதும் நின்று கொண்டுதான் இருந்தனர்,!

அவர்கள் இருவரும் அங்கே இருக்கையில். எல்லோரும் போயாயிற்று என்று. எப்படிச் சொல்ல முடியும்?

அவனால் முடிந்தது,!

ஆனால். அவளால். ஒரு போதும் முடியாது,!

இப்படி. அடிப்படையே தவறாக இருக்கிறதே,!

அத்தோடு. அவள் பேச வந்த விஷயத்தை. இவர்களை வைத்துக்கொண்டு சொல்லவும் முடியாது,!

“தயவுபண்ணிக் கிண்டலாக எதுவும் பேசாதீர்கள். புவனன், நான் உங்களிடம் தனியாகப் பேச வேண்டும், நிஜமாகவே தனியாக,!” என்றாள் மெல்லிய குரலில்,!

என்னதான் மென்குரலில் பேசினாலும். காவலர்கள் காதிலும் விழுந்துதான் இருக்கும்,!

எனவே. புவனேந்திரன் நிமிர்ந்து பார்த்ததும். அவர்கள் இருவரும் அறை வாயிலை நோக்கி நகர்ந்தனர்,

“நாங்கள் கதவின் அருகிலேயே நிற்கிறோம். சார்,!” என்று முத்து கூற. இருவரும் வெளியே சென்றனர்,

சாத்தியிருந்த கதவை ஒருதரம் பார்த்துவிட்டுப் புவனேந்திரன். நளினியிடம் திரும்பினான்,

இதுபோலப் பிறர் தவறாக ஊகிக்கக் கூடிய நிலையை ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது என்பதில். இருவருமே கவனமாகத்தான் இருப்பது,!ஆனால். அதையெல்லாம் கவனிக்கும் மனநிலையில். இன்றைக்கு நளினி இல்லை என்பது. அவள் முகத்தில் நன்றாகவே தெரிந்தது,!

எனவே. தன் இருக்கையிலிருந்து எழுந்து வந்து. அன்போடு அவளது கைகளைப் பற்றி. உட்கார வைத்து. பிரச்சினை என்னவென்று புவனேந்திரன் மறுபடியும் வினவினான்,

நளினி நேரடியாக விஷயத்துக்கு வந்தாள், “எனக்குப் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்திருக்கிறீர்களா?”

“நிச்சயமாய்,!சக்திவேலும் கண்ணனும்,!கிட்டத்தட்ட முத்து. திருமயனுக்குச் சமானமானவர்கள் என்று பாதுகாப்புக்கு ஆள் அனுப்பும் நிறுவனத்தில் சொன்னார்கள்,!எனக்கும் அப்படித்தான் தோன்றியது,!ஏன்? வேலையில் ஏதேனும் ஓட்டை விட்டார்களா? என்ன செய்தார்கள்? சொல்லு, உடனே. ஆளை மாற்றிவிடலாம்,!” என்றான் அவன் சட்டென மூண்ட கோபத்துடன்,

உச்சுக் கொட்டினாள் நளினி, “நான் ஆளே வேண்டாம் என்கிறேன்,! நீங்கள் ஆளை மாற்றுவது பற்றிப் பேசுகிறீர்களே,!” என்றாள்

எரிச்சலோடு,

“ஆள் வேண்டாமா? என்ன உளறல் இது? “

“உளறல் ஒன்றும் இல்லை,!இவ்வளவு காலம். இருபத்தியிரண்டு வருஷமாக. இந்த மாதிரிப் பாதுகாப்பு எதுவும் இல்லாமல்தான் வாழ்ந்திருக்கிறேன்,!எனக்கு எதுவுமே ஆனதில்லை,!இப்போது மட்டும் எதற்கு?” என்றாள் நளினி. பிடிவாதமான குரலில்,!

“உனக்கு விஷயம் புரியவில்லை. நளினி,!“ என்றான் புவனேந்திரன், “இப்போது. நான் தற்பெருமை பேசுவதாக நினைத்துக் கொள்ள மாட்டாய் என்று நம்புகிறேன், இதுவரை. நீ வாழ்ந்த விதம் வேறு,! எத்தனையோ லட்சக் கணக்கான பெண்களில் ஒருத்தியாக இருந்தாய், அழகிலும். சாதுரியத்திலும் மேம்பட்டிருந்தாலும். பலருள் ஒருத்தியே,! ஆனால். இப்போது அப்படியல்ல,!............................................. “

“ஏன். திடீரென்று எனக்குக் கொம்பு. கிம்பு முளைத்துவிட்டதா? “ என்று கிண்டலாகக் கேட்டுத் தொட்டுப் பார்த்துவிட்டு. “இல்லையே,!” என்று. உதட்டைப் பிதுக்கினாள் அவள்,

புன்னகைத்துவிட்டு. “இது. கண்ணுக்குத் தெரியாத கொம்பு,! புவனேந்திரனுடைய மனைவி. அதாவது மனைவி ஆகப் போகிறவள் என்கிற கொம்பு,!” என்றான் அவன் சிறு வருத்தமும் கேலியும் கலந்த குரலில்,

அவனது வார்த்தைகள் சித்தரித்த நிலைமை மனதிற்கு ஆனந்தமாகத்தான் இருந்தது,!ஆனால். அந்த மகிழ்ச்சியில். முன்னிருக்கும் பிரச்சினையை மறந்துவிடக் கூடாதே,!அதுவும். அப்படி மறக்கடிப்பதில் அவன் வல்லுனனும்கூட,!

யோசிக்கும் பாவனையில் புருவம் சுருக்கி . “புவனேந்திரனுடைய மனைவிக்குக் கொம்பு இருந்தே ஆக வேண்டும் என்று என்ன கட்டாயம்?” என்று கேட்டாள் நளினி,

“புவனேந்திரன் ஒரு பணக்காரன்,”

“இருக்கட்டுமே,!அப்போதும். உங்கள் வார்த்தைகளையே சொல்வதானால். நீங்களும் பணக்காரப் “பலருள் ஒருவர்”தானே?”

சற்றுத் தயங்கி. “ஆனால். ஆபத்து நேரக் கூடிய வாய்ப்பு அதிகம் உண்டும்மா,!” என்றான் அவன் புரியாத குழந்தைக்குச் சொல்வது

போல,,

“என்ன பெரிய ஆபத்து? எதுவானாலும் நாமாகச் சமாளிக்க வேண்டியதுதானே? நான் ஒன்றும் தண்ணீர் பட்டால் கரையும் உப்பல்ல. ஓர் ஆபத்தில் சிக்கினால் மீள முடியாமல் அழிந்து போவதற்கு,!“

கண்கள் பளிச்சிட. “நீ வெறும் உப்புக்கல் அல்ல. கண்மணி, உலகிலேயே விலை உயர்ந்த வைரக்கல் அல்லவா?” என்றான் புவனேந்திரன். பெருமிதக் குரலில்,

முகம் கனிந்தபோதும். “அது உங்களுக்குத்தானே? மற்றவர்களுக்கோ. வெறும் உப்புக்கல்லாகக் கூட. நான் பயன்பட மாட்டேனே, அந்தப் பெறுமானம்கூட இல்லாதவள்தானே? அப்புறம் எதற்கு. இந்தப் பாதுகாப்பு. பந்தா எல்லாம்?” என்று விடாமல் கேட்டாள் அவள்,

தொடர்ந்து. அந்த அறையில் ஓர் அமைதியற்ற அமைதி நிலவியது,

பிறகு. “இது பந்தா அல்ல, பாதுகாப்பு மட்டுமே,!எனக்காக. என் நிம்மதிக்காக. இந்தப் பாதுகாப்பை நீ சகித்துக்கொள்ளக் கூடாதா?” என்று இதமாகவே கேட்டான் அவன்,

ஒரு கணம் தயங்கினாலும். “இதேபோல. என் நிம்மதிக்காக விட்டுவிடக் கூடாதா என்று. நானும் கேட்கலாம் அல்லவா? எங்கள் வீட்டுச் சுற்றுப்புறம் பார்த்தீர்கள் அல்லவா? இயல்பான. சாதாரணமான வாழ்க்கை,!அந்த இடத்தில். இப்படிப் பழைய கால ராஜ பரம்பரை போல. முன்னும் பின்னும் பாதுகாவலுக்கு ஆட்களோடு நடமாடுவது என்றால். அது கொஞ்சம் ........................ கொஞ்சமென்ன. ரொம்பவே “அர்த்த ராத்திரியில் குடை பிடிக்கிற “ விதமாகத் தோன்றாதா? தோழமையோடு பழகுகிற யார் முகத்தை நான் நிமிர்ந்து பார்க்க முடியும்? நீங்கள் சொல்லாமல் கொள்ளாமல் வெளியூர் போயிருந்த இத்தனை நாட்களும். நான் கிட்டத்தட்ட வீட்டுக்குள்ளேயே சிறையிருந்த மாதிரிதான் இருந்தேன். தெரியுமா? “ என்று வாழைப்பழத்தில் ஊசியாய். அவன் சொல்லாமல் சென்றதையும் குறிப்பிட்டாள் நளினி,

ஊசி குத்திற்றோ. இல்லையோ. அதை அவன் கவனித்த மாதிரி காட்டிக்கொள்ளவில்லை,!

“நீ பத்திரமாக இருக்கிறாய் என்பது. மற்ற எதையும்விட. எனக்கு முக்கியம். நளினி, அதற்காகச் சில சங்கடங்களை நாம் சகித்துத்தான் ஆக வேண்டும்,!ஆனால். முதலில்தான். அவை சங்கடங்களாகத் தோன்றும், விரைவிலேயே. என்னைப்போல. உனக்கும் பழகிப் போய்விடும்,!” என்று. அதிலேயே நின்றான் புவனேந்திரன்,

விட்டுக்கொடுக்க. அவளுக்கும் மனமில்லை,!அவனையுமே. இந்தப் பைத்தியக்காரத்தனத்தை விட வைக்க விரும்புகிறவள் ஆயிற்றே,!

அதனால். “ சும்மாவே. நான் பத்திரமாகத்தான் இருப்பேன் என்கிறபோது. அனாவசியமாக இந்தச் சங்கடங்களை ஏன் சகிக்க வேண்டும்? தேவையே இல்லையே,!” என்றாள் அவளும் அழுத்தமாகவே,!

மீண்டும் ஒரு மௌனம் அவர்களிடையே நிலவியது,

சற்றுப் பொறுத்து. ஒரு நீண்ட பெருமூச்சின் பின் புவனேந்திரன் பேசினான்

“ரதி எப்படி இறந்தாள் என்று. உனக்குத் தெரியாதில்லையா?” என்று. மிகவும் தாழ்ந்த குரலில் கேட்டு. நிறுத்தினான்,

ரதி,!அவனுடைய முதல் மனைவி,!

திடுக்கிட்டு. நளினி அவனைப் பார்த்தாள்,!

# அத்தியாயம் -11

ரதியின் பெயர். முன்னொரு தரம் அவர்களிடையே வந்திருக்கிறது,! திருமணமாகி. அந்தப் பத்து நாட்களுக்குள் அந்த வயதுக்கேற்ப மகிழ்ச்சியோடு இருந்ததாகச் சொன்னான்,

புதுமண மகிழ்ச்சி,!

ஆனால். தேவதாசாக அதே நினைவில். தான் உருகிக் கொண்டிருப்பதாக அவன் கூறவில்லை,. அப்படிக் காட்டிக் கொள்ளவும் இல்லை,!

இப்போது என்ன சொல்லப் போகிறான்?

அத்தோடு. அவளது இறப்புக்கும். இந்தப் பாதுகாவலர்கள் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம் இருக்கக் கூடும்?

மீண்டும் புவனேந்திரன் பேசத் தொடங்குமுன் என்னென்னவோ கேள்விகள் மனதில் குவிந்தபோதும். நளினிக்கு எதையும் வாய்விட்டுக் கேட்கத் தோன்றவில்லை,!

ஏதோ மந்திரத்தில் கட்டுண்டவளைப் போல. அவனையே பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள்,

இன்னும் ஒரு சிறு இடைவெளியின் பின். தொண்டையைச் செறுமிக்கொண்டு. புவனேந்திரனே தொடங்கினான்,!

“ரதியை நான் மணந்தது. அவள் இறந்தது எதுவுமே. கோவையில்கூட. யாருக்கும் தெரியாது,!“ என்று தொடங்கியவன். தொடர்ந்து அதன் காரணத்தை விளக்கினான்,

“என் அப்பாவும் அம்மாவும் விபத்தில் இறந்தது. என் இருபத்தி ஒன்றாம் பிறந்த நாளைக்கு இரு மாதங்கள் முன்பு, தொழில் துறை நிர்வாகம் பற்றிப் படித்துக் கொண்டிருந்தேன், படிக்கும்போதே. அப்பாவுடன் தொழிலைக் கவனித்துக் கொண்டுமிருந்தேன், நம்முடையது நூற்பு ஆலை,!நூல் விற்பனை தொடர்பாக. நான் அகமதாபாதுக்குப் போய் வருவது உண்டு,!அம்மா. அப்பாவுக்குப் பிறகு. பாட்டி வந்து என்னை அழைத்தது. நான் வர மறுத்தது எல்லாம். தண்டோரா போட்டுப் பறையறிவிக்காத குறையாக இங்கே

எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன்,

“அம்மா இருக்கும்வரை என்னையும் வெறுத்து இருந்தவர்களுக்கு. இப்போது என்ன திடீர் உருக்கம்? அம்மா இறந்ததால். எனக்கென்ன தீட்டா கழிந்து விட்டது? அம்மா இருந்தாலும். இல்லாவிட்டாலும். என் அம்மாவின் வயிற்றில் நான் பிறந்தது மாறிவிடுமா. என்ன?

இப்படியெல்லாம் நினைத்து. அந்த ஆத்திரத்தில் நான் இங்கே வர மறுத்ததோடு. அப்போதைக்கு. அந்த விஷயம் முடிந்து போனது,!

“ஆனால். பெற்றோரின் இழப்பு பற்றிய வேதனைடு அப்போதுதான் கொஞ்சம் அடங்கத் தொடங்கியிருந்தது. இரு மடங்காக மீண்டும் என்னை வாட்டத் தொடங்கிவிட்டது,!கோவை

வீட்டில் தனியே இருக்கப் பிடிக்காமல். வெளியூர் வேலைகளை. அதிகமாக இழுத்துப் போட்டுக்கொண்டு. அங்குமிங்கும் அலைந்து. திரிந்து செய்தேன், அப்படி ஒரு தரம் அகமதாபாத் சென்றபோதுதான். ரதியைச் சந்தித்தேன்,!

“அவளுக்கும் சின்ன வயதுதான், அப்போதுதான் பதினெட்டுதான் ஆகியிருந்தது,!என்னைப் போலவே. அவளுக்கும் உறவென்று யாரும் இல்லை,!எனக்குப் பாட்டி இருந்தாலும். அவர்களைத்தான். அப்போது நான் உறவாக ஏற்கவே இல்லையே,! ரதி. இல்லத்தில் வளர்ந்தவள், அலுவலுக்கான படிப்பு கற்றுக் கொடுத்திருந்தார்கள்,!தாற்காலிகமான அலுவலக வேலைகளுக்கு அனுப்புவார்கள், அப்படி எனக்காக வந்தபோது. முதல் பார்வையிலேயே எங்கள் இருவருக்கும் பிடித்துப் போயிற்று,! அவளைப் பார்க்கையில். நெஞ்சை அரித்துக்கொண்டிருந்த பெற்றோரின் பிரிவுத் துயரத்தை. என்னால் மறக்க முடிந்தது,!ஒரே வாரத்தில் திருமணம் நடந்தது,!

“எப்படி இருந்தோம் என்றுதான் சொல்லியிருக்கிறேனே,!

“மணமாகிப் பத்தாவது நாள். அவள் காணாமல் போனாள்,! ………………………………………………………………… கடத்தப்பட்டாள்,!”

“என்னது?,!” என்று நளினி அதிர்ந்தாள்,! சூனியத்தை

வெறித்தவண்ணம் சொல்லிக் கொண்டிருந்தவன். சட்டெனத் திரும்பி. அவளைப் பார்த்தான்,!

“ஆமாம்,!ரதி கடத்தப்பட்டாள், !என் மனைவி என்கிற ஒரே காரணத்துக்காக. அவள் கடத்தப்பட்டாள்,!ஒரு பணக்காரனுடைய மனைவியைக் கடத்தினால். அவனிடம் நிறையப் பணம் பறிக்கலாம் என்று திட்டமிட்ட மனிதத்தன்மையே இல்லாத ஒரு கும்பலால். அவள் கடத்தப்பட்டாள், கடத்திக் கொலையும் செய்யப்பட்டாள்,!”

“ஐயோ,!” என்று பதறி எழுந்தாள் நளினி , “கொ கொலையா?”

அமைதியிழந்து நடந்து கொண்டிருந்தவன். அவள் எதிரில் வந்து நின்றான்,!“ஆமாம்,!கொலைதான்,!அந்த அரக்கர்களிடம். நான் பணத்தையும் இழந்து. மனைவியையும் பறிகொடுத்தேன், அவர்களிடமிருந்து. ரதி தப்ப முயன்றாளோ. அன்றி அடையாளம் காட்டி விடுவாள் என்று பயந்தோ. இரண்டு. மூன்று என்று. திரும்பத் திரும்பக் கேட்டு. என்னிடம் பத்து லட்சரூபாய்ப் பணத்தையும் வாங்கிக்கொண்டு. அவளையும் கொன்று விட்டார்கள். அந்த வெறியர்கள்,!பாவம்,!ஏழைப் பெண்,!பணத்துக்குக் கஷ;டப்பட்டாலும். எங்கோ நிம்மதியாக உயிரோடு இருந்திருப்பாள், அவளைச் சிறப்பாக வாழ வைப்பதாக நினைத்துச் சாகடித்து விட்டேன்,!அந்தக் கொலைகாரர்கள் கையால் கொல்லப் படுமுன். ரதி என்னமாகத் தவித்திருப்பாள்,!அவளை இழந்து. அந்த இருபத்தியொரு வயதில் நான் என்ன பாடு பட்டிருப்பேன்? சொல்லு. என் அன்புக்கு உரியவள் என்கிற காரணத்தால். உனக்கும் அந்த நிலை வந்துவிடக் கூடாது என்று. உன்னை நான் பாதுகாக்க முயல்வது. எப்படித் தப்பாகும் ? “ என்று. ஆத்திரத்துடன் கேட்டான்,

அவளது தோளைப் பற்றி. உலுக்காத குறை,!

ஆனால். இப்போதும். இந்தப் பாதுகாவலர்கள் விஷயத்தை அவளால் முழுதாக ஒத்துக்கொள்ள முடியவில்லை,!

“ரதி சின்னப் பெண். புவனன், அத்தோடு. இல்லத்தில் வளர்ந்ததால். சில விஷயங்கள் தெரியாமலே வளர்ந்திருக்கக் கூடும்,! ………………………………………………………………………………”

“என்னென்ன விஷயங்கள்?”

“எச்சரிக்கை உணர்வு

பாதுகாப்புக் கலைகள்,!நான் அப்படியல்லவே,!”

அடுத்த வினாடி நடந்ததை. நளினி சற்றும்

எதிர்பார்க்கவில்லை,!

மின்னல் விரைவுடன் அவளது இரு கரங்களையும் பின்புறமாகச் சேர்த்துப் பிடித்து. ஒரு காலால். அவளது இருகால்களையும் சுற்றிப் பிணைத்து. மறு கையால் அவளது தாடையைப் பற்றினான் புவனேந்திரன்,

அனிச்சையான திமிறல் பலனற்றுப் போகவும். திகைப்புடன் அவனைப் பார்த்தாள் அவள்,

"என்னவோ பாதுகாப்புக் கலைகள் என்றாயே,!அவற்றைப் பயன்படுத்தி. உன்னை விடுவித்துக் கொள்ளேன். பார்ப்போம்,!" என்றான் புவனன் ஏளனமாக,!

தன்னால் முடியாது என்று நன்றாகவே புரியவும். பேசாமல் அவனைப் பார்த்துக்கொண்டு நின்றாள் அவள்,

பார்வை இளகக் குனிந்து. அவளது இதழ்களில் லேசாக முத்தமிட்டு. அவளை விடுவித்தான் அவன்,

"பார். அவர்கள் வன்முறையைத் தொழிலாகக் கொண்டவர்கள்,!இந்தப் போர்க்கலைகள் எல்லாம். அவர்களுக்குத் தண்ணீர் பட்ட பாடு,!அதனால்தான். அதே கலைகளைத் திறம்படக் கற்றவர்களைப் பயன்படுத்தி. நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்கிறேன். நான்,!ஒரு முறை சூடு பட்டவன் நான், இன்னொரு பேரிழப்பை என்னால் தாங்க முடியாது,!நம் ஈடுபாடு. வெளியே பரவிவிட்டது,!அதனால். உனக்கு ஆபத்து வந்துதான் தீரும் என்று நான் சொல்லவில்லை,. ஆனால். அந்த வாய்ப்பு மிகவும் அதிகம்,!எனவே. இந்த மனிதர்களின் காவல் உனக்கு இருக்கும்வரை. என்னால் பெருமளவு நிம்மதியுடன் மற்ற வேலைகளைப் பார்க்க முடியும்,!அதில்லாமல். ஒவ்வொரு கணமும். நீ பத்திரமாக இருக்கிறாயோ. இல்லையோ என்று கவலைப்பட்டுக்கொண்டு இருக்க என்னால் முடியாது,!அதுவும் முடியாது,!உனக்கோர் ஆபத்து நேர்ந்தால். அதைத் தாங்கவும் என்னால் முடியாது,! அதனால் ................ அதனால். ஒன்று. இந்தக் காவலை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்,!அல்லது. உனக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய காரணத்தை நீக்க வேண்டும்,!புரிகிறதில்லையா? நாம் பிரிய வேண்டும்,! இவை தவிர. மாற்று வழியேதும்

கிடையாது,!” என்று முடித்தான் அவன்,

ஆனால். அவள் பதில் சொல்லு முன்னரே. அவளது கையைப் பற்றி முத்தமிட்டு. “பிரிவே பரவாயில்லை என்று சொல்லிவிடாதே. கண்மணி,!” என்றான் கொஞ்சுதலாக,!

கெஞ்சுதலாகவும்,!

அவளும்தான். அப்படி. எப்படிச் சொல்லுவாள்?,!

தன் சம்மதத்தைச் சொல்லாமல் சொல்லும் விதமாக அவன் தோளில் சற்று நேரம் சாய்ந்திருந்தாள் அவள்,

ஆனால். அப்போதும். அவளது குடியிருப்புப் பகுதியில் இந்தக் காவலர் பிரச்சினையை எப்படிச் சமாளிப்பது என்பதுதான் அவளைக் குழப்பியடித்துக் கொண்டிருந்தது,!

குடும்ப விவகாரங்களில் தலையிடா விட்டாலும். அங்கே. எல்லோருமே ஒருவருக்கொருவர் இலகுவாகப் பேசிப் பழகுகிறவர்கள், கேலியும் கிண்டலும் எளிதாக வரும்,!

புதிதாகக் கார் வாங்கியவர். இரண்டே தரம் “என் கார். என் கார்” என்றுவிட்டாலே. அவர் “கார்பந்தா” ஆகிவிடுவார்,! அதற்குமேல் போனால். “போர் பந்தா”,

அந்த மாதிரி இடத்தில். முன்னும் பின்னுமாய் மெய்காப்பாளர்கள் என்றால். அவளுடைய குடும்பத்துக்கு என்ன பெயர் வைப்பார்கள்? இது ஒரு பக்கம் என்றால். புவனேந்திரன் அஞ்சுகிற மாதிரியான ஆபத்து எதுவும் தனக்கு வரக்கூடும் என்று. அவளால் ஒப்பவும் முடியவில்லை,!இதில். எதைச் சொல்லி இந்த அன்பனுக்குப் புரியவைப்பது?

“என்ன யோசனை. நளின்? “ என்று கேட்டான் புவனேந்திரன்,

“வேறென்ன? அங்கே. இந்த இருவரையும் எப்படி இயல்பாகப் பொருந்தச் செய்வது என்றுதான்
” என்று உண்மையைச் சொன்னாள் அவள்,

“பொருந்துகிறார்களோ. இல்லையோ. அவர்கள் அங்கே இருக்கப் போவது. கட்டாயம்,!” என்றான் அவன் இறுகிய குரலில்,!

கடைசி முயற்சியாக. “அது மிகவும் பாதுகாப்பான பகுதிதான். புவனன், இதுவரை. அங்கே சின்னத் திருட்டுகூட நடந்தது இல்லை,!

அதனால். கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போமே?” என்று கேட்டாள் நளினி,

“பொறுத்து? பொறுத்திருந்து எதைப் பார்ப்பது? உன்னை யாராவது கடத்திக் கொண்டுபோகிறார்களா. இல்லையா என்றா? ஒரு வேளை. கடத்திப் போய்விட்டால்? உன் விஷயத்தில். ஆபத்து வருகிறதா இல்லையா என்று பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்க. நான் தயாரில்லை,!அதனால். இந்த மாதிரி அசட்டுப் பேச்சு. இனி வேண்டாம்,!” என்று கண்டிப்பான குரலில் கூறி முடித்தான் புவனேந்திரன்,

நளினியின் கற்பனைதானோ. என்னவோ. குடியிருப்புப் பகுதியில் உள்ளவர்கள் எல்லோரும். தன்னை இளக்காரமாகப் பார்ப்பது போல. ஓர் எண்ணம்,!

சங்கத் தலைவர். செயலாளர் முதலியோரிடம். சுதர்சனம் அவரவர் வீடுகளுக்குப் போய்ச் சக்திவேல். அவனுடைய கூட்டாளி பற்றிச் சொல்லிவிட்டு வந்தார்,!அவர்கள் இருவரும். தங்கள் வீட்டுக்கு வேண்டியவர்கள் என்று மட்டுமே,

ஆனால். அவர்கள் இருவரும். சும்மாவே அங்கே இருப்பதும். அவள் வெளியே சென்றால் மட்டும் கூட வருவதும். பிறர் கவனத்தைக் கவராது இருக்குமா. என்ன?

அவரவருக்கு. அவரவர் பிரச்சினை;,. இதில் நம்மைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்க. அவர்களுக்கு ஏது நேரம் என்று மகளுக்குச் சமாதானம் சொன்னபோதும். சுதர்சனத்துக்குமே. இந்தப் பாதுகாவல். இந்த இடத்தில் சற்று அதிகப்படியாகத்தான் தோன்றியது,

புவனேந்திரனின் நிலைமைக்கு. அது தேவையாக இருக்கலாம்,! அப்படித்தான் என்;று. ஒரு சமயத்தில் மனைவியிடம் அவனுக்காக வக்காலத்து வாங்கிப் பேசியவரும்கூட,!ஆனால். அவனுடைய மனைவியாக ஆகாத நிலையில். எதற்கு என்ற எண்ணம்தான்,

ஆனாலும் மகளது நன்மைக்காக என்று எண்ணித்தானே செய்கிறான் புவனேந்திரன் என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டார்,!

பெருமளவு மகளையும்,!

ஆனால். இருவருமே. புவனேந்திரனின் பிடிவாதத்துக்காகப் பொறுத்துப் போனார்களே தவிர. இந்தக் காவல் அவசியம் என்ற எண்ணம். அவர்களுக்கு ஒரு போதும். வரவில்லை,!

புவனேந்திரனையே அடியாட்களோடு அலைவது போல இருக்கிறது என்று கூறும் சகுந்தலாவும். கணவனைப் போலவே. பொறுத்துப் போனாள்,

பொறுத்துப் போனாலும். சற்று வசதியான மத்திய தரத்து வாழ்க்கையில் பழகியிருந்த அந்தக் குடும்பத்துக்கு. புவனேந்திரனின் அச்சம் புரிபடவே இல்லை,!

ஆனால். அவன். அதில் பிடிவாதமாக இருக்கவே. அவனை இழக்க விரும்பாமல். அவனது நிபந்தனையை ஏற்றுக் கொண்டார்கள் எனலாம்,!

செல்வம். செல்வாக்கு என்பது ஒருபுறம் இருந்தாலும். மகள் அவனை விரும்புகிறாள் என்பதும் அவர்களுக்கு முக்கியமாக இருந்தது,! ஆயினும். இந்தக் கூண்டுக்கிளி வாழ்வை. மகள் எவ்வளவு நாள் தாங்குவாள் என்று. சகுந்தலாவுக்குச் சந்தேகம்தான்,!

நளினியைப் பொறுத்தவரையில். தந்தையுடைய காரில் மட்டுமே வேலைக்குப் போவாள், அப்போதும் காவலர்கள் கூடவே வருவதுதான், ஆனால். முன்போல ஆட்டோ ஓட்டியிடம் ஏதாவது சொல்வது போன்றவற்றுக்கு இடம் இராதல்லவா?

கார் கிடைக்காதபோதும். மற்ற சமயத்திலும் வீடே கதியென்று இருக்கத் தொடங்கினாள்,

ஆனால். அப்போதும் நேரத்தை வீணாக்காமல். தனக்கும் தங்கைக்கும் துணிமணிகளில். மணி. கண்ணாடி. கல். சம்கி போன்றவற்றைக் கொண்டு. வேலைப்பாடுகளைச் செய்யத் தொடங்கினாள்,

பிடித்தமான வேலைதான்,!ஆனால். இதுவே. சில சமயங்களில் நளினிக்கு எரிச்சலூட்டவும் செய்தது,

முனைந்து வேலை செய்கிறபோது. சில சமயம். உரிய கற்கள். கோந்து போன்றவை தீர்ந்து போகும்,!ஒரு தரம். அந்தக் கோந்து. கொட்டிக் காய்ந்து போயிற்று,!முன்பானால். உடனே.

ஆட்டோவிலோ. பஸ்சிலோ சென்று. தேவையானதை வாங்கி வந்து. மறுபடியும் வேலையைத் தொடங்கிவிடுவாள்,!

இப்போதானால். சகுந்தலாவிடம் சொல்லியனுப்பி. வாங்க வேண்டியிருந்தது,!

அன்றாட வேலைகள். திருமண வேலைகள் எல்லாவற்றையும் ஒதுக்கிக்கொண்டு அவள் சென்று வாங்கி வந்தாலும். சில சமயங்களில் அவை தவறாகிப்போய். நளினியின் பொறுமையைச் சோதித்து. மூச்சு முட்டுவது போன்ற உணர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தன,

மற்றபடி. பட்டுக் சேலைகள். நகைகள் போன்ற அனைத்தையும். தாயையே வாங்கிவரச் சொல்லிவிட்டாள் நளினி,

ஏற்கனவே. மகளின் திருமணத்தின்போது தேவைப் படக் கூடியவை என்று சுதர்சனமும். சகுந்தலாவும் அவ்வப்போது வாங்கிச் சேர்த்து வைத்துக்கொண்டே இருந்ததால். அப்போது பெரிய அளவில் எதையும் வாங்கும்படி நேரவும் இல்லை,!

ஆனால். நளினியே நேரடியாகச் சென்று வாங்க வேண்டிய சில பொருட்களும் இருந்தன,

அவளது உள்ளாடைகளை. எப்போதுமே. அவளேதான் வாங்குவது வழக்கம்,!வாசனைப் பொருட்கள். மேக்கப் சாமான்கள் போன்றவைகளையும் தானேதான் தேர்ந்தெடுப்பாள்,!இப்போதும். அந்த வழக்கத்தை மாற்ற. நளினி விரும்பவில்லை,!

அதிலும் முக்கியமாக உள்ளாடைகளை,!

அதே சமயம். இரு அன்னிய ஆண்கள் புடைசூழச் சென்று. உள்ளாடையைத் தேர்ந்தெடுப்பதும். அவளுக்கு மிகவும் அசுசியாகப் பட்டது,!

ஆனால். இதைப் புவனேந்திரனிடம் சொன்னால். அவளது உணர்வை அவன் நிச்சயமாகப் புரிந்துகொள்ள மாட்டான் எனறு தோன்றவும். அவனிடம் சொல்லாமலே கடைக்குப் போய்த் தனக்கு வேண்டியதை வாங்கிவந்துவிட. நளினி முடிவு செய்தாள்,

ஆனால் அந்த முடிவு. அவளது திருமணத்தையே நிறுத்திவிட்டது,!

# அத்தியாயம்-12

தனியே கடைக்குச் சொல்ல. நளினி பிடிவாதமாக முடிவெடுத்ததின் இன்னொரு காரணம். புவனேந்திரன் ஊரில் இல்லாதது,!

இருவருக்கும் அறிமுகமாகி இந்தச் சில மாதங்களில். அவன் சொல்லாமலும். எங்கே என்ன காரியம் என்று விவரம் சொல்லாமலும். குறைந்தது ஐந்து முறையேனும் புவனேந்திரன் வெளியூர் சென்றிருப்பான், திரும்பி வந்த பிறகும். அது பற்றி அவன் பேசுவதில்லை,!

திருமணம் நிச்சயம் ஆன பிறகும். அவன் அப்படிச் சென்றது. அவளுக்கு வருத்தத்தோடு. சற்றுக் கோபமாகவும் இருந்தது,!

புவனேந்திரனின் கடந்த காலம். அவளுக்குச் சம்பந்தம் இல்லாததாக இருக்கலாம்,!ஆனால். நிகழ்காலம்? அதிலிருந்து. அவன் அவளை எப்படி ஒதுக்கலாம்?

அவளுக்கு மட்டும் அத்தனை கட்டுப்பாடுகளா? காவலர்களின் கண்காணிப்பா?

எவ்வளவோ ஆத்திரம் வந்தபோதும். அவன் சிரிப்பும் விளையாட்டுமாகப் பேசத் தொடங்கிதும். பதிலுக்கு. அவனைப் போலவே பேசத் தோன்றியதே தவிர. கோபத்தை இழுத்துப் பிடித்து வைத்துக்கொள்ள அவளுக்குவரவே இல்லை,!

அன்று. அவனிடம் பேச வேண்டும்போல. நளினிக்கு ரொம்பவும் ஆவலாக இருந்தது,!

ஒரு கருநீல வண்ணச் சுரிதார் செட்டுக்கு. வண்ணக் கல்லாலேயே வட்ட வட்டமாய் அங்கங்கே பூவேலை செய்துமுடித்திருந்தாள், அணிந்து பார்க்கும்போது. மிக அழகாக இருந்தது,!அந்த மகிழ்ச்சியை புவனனோடு கலந்துகொள்ள. அவள் மிகவும் விரும்பினாள்,

அதற்காக. அவனை செல்லில் பிடிக்கலாம் என்று பார்த்தால். செல்லை அணைத்து வைத்திருந்தான், ஃபோன் செய்து பார்த்தபோதுதான். அவளிடம் சொல்லாமலே. புவனேந்திரன் வெளியூர் சென்றிருந்தது. அவளுக்குத் தெரிய வந்தது,!

மீண்டுமா என்று எண்ணியவளுக்கு. முகம் கறுத்துச் சிறுத்துப் போயிற்று,!

அவள் மட்டும். அவளது ஒவ்வொரு கணத்துக்கும். பாதுகாவல் என்ற பெயரில். அவனிடம் கணக்குக் கொடுக்க வேண்டும்,!ஆனால். அவன் விருப்பம் போலச் சுற்றுவானா?

குறைந்த பட்சமாய். வெளியூர் போகிறேன் என்றுகூடவா. சொல்லக் கூடாது?

அதையெல்லாம் அறியும் உரிமை. உனக்குக் கிடையாது என்று வாய் வார்த்தையாகச் சொல்லாமல். செயலில் செய்துகாட்டி. அதற்கு அவளைப் பழக்குசிறானா? இன்னொருவர் மூலம் அறிய நேரும்போது. இன்றைய நிலையில். அவளுக்கு. அது எவ்வளவு பெரிய அவமானம் என்று கூடவா யோசிக்கக் கூடாது?

இதையெல்லாம் ஏற்று வாழ்வதற்கு. அவள் ஒன்றும் முதுகெலும்பே இல்லாத புழு அல்லவே,!

அல்லது. அவனது பணத்துக்காக அவள் எதையும் பொறுத்துப் போவாள் என்று எண்ணினானா?

அப்படி மட்டும் எண்ணியிருந்தான் என்றால். அவனுக்கு விரைவிலேயே ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருக்கிறது என்பது நிச்சயம்,!

இது பற்றிக் கட்டாயமாகப் புவனனிடம் பேசியாக வேண்டும் என்று எண்ணியவளுக்குத் தனக்காக நியமிக்கப்பட்ட பாதுகாவலர்களை உதறிவிட்டுத் தனியே கடைக்குச் சென்றாக வேண்டும் என்பதும் உள்ஞ்ர உறுதியாயிற்று,!

புவனனிடம் ஊதியம் பெறுகிறவர்களிடம் தன் அதிகாரம் செல்லாது என்பதால்.

அவர்களை ஏமாற்றிச் செல்ல வேண்டும் என்று திட்டமிட்டாள், தவிர. மற்ற யாரிடமும். புவனனிடம்கூடத் தான் தனியே செல்வதை மறைக்க. அவள் எண்ணவில்லை,!

அவளிடம் தெரிவியாமல் அவன் வெளியூருக்கே சென்று வரும்போது. அவள் உள்ஞ்ரில் ஒரு கடைக்குச் செல்வதில் என்னவென்று தப்புக் காண முடியும்?

இப்படித்தான் நளினி நினைத்தாள்,!

ஆனால் ..........................................................................

சக்திவேலுக்கும். அவனுடைய கூட்டாளிக்கும் தெரியாமல். வீட்டை விட்டு வெளியேறுவது. நளினிக்கு அப்படி ஒன்றும் கடினமாக இருக்கவில்லை,!

காவலர்கள் இருவரும் இருப்பது. பெரும்பாலும் முன் வராண்டாவில்தான், நளினியும். புவனேந்திரனும் உட்கார்ந்து வேலை செய்த இடம்,!

வாயில் வழியே. உள்ளே. வெளியே யார் சென்றாலும். இவர்களது பார்வைக்குத் தப்ப முடியாது,!

ஆனால். "லிஃப்ட்" வேலை செய்யாதபோது செல்வதற்காக. வீட்டின் பின்புறமாக ஒரு படிக்கட்டு இருந்தது, அதற்குச் செல்ல ஒரு கதவும் எல்லா வீடுகளுக்கும் உண்டு,

பாதுகாப்புக் கருதி. அந்தப் பின்புறக் கதவைப் பூட்டிவிடும்படி பாதுகாப்பு நிறுவனத்தால் ஆலோசனை கூறப்பட்டு. அப்படி அந்தக் கதவு பூட்டப்பட்டும் இருந்தது,!

எப்போதாவது மின்சாரம் தடைப்பட்டு. "லிஃப்"டைப் பயன்படுத்த முடியாதபோதும்கூட.

சக்திவேலிடம் தெரிவித்துவிட்டே அந்தக் கதவைப் பயன்படுத்தும்படி ஏற்பாடு செய்யப்

பட்டிருந்தது,

அந்தச் சமயங்களில். இருவரில் ஒருவர். அந்தப் பக்கம் காவலிருப்பார்கள்,

பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளைப் புவனேந்திரன் அப்படியே கடைப்பிடிப்பான்,

அதில். அரைகுறைத்தனமே கிடையாது,!அவன் ஏற்பாட்டில் ஏற்ற பணி என்பதால். அவனுடைய வருங்கால மனைவியின் வீட்டிலும் அதே நிலைமையையே. பாதுகாப்பு நிறுவனமும். அதனுடைய பணியாளர்களும் எதிர்பார்த்தனர்,!

அன்றுவரை. அவர்கள் குறைப்படும்படியாக எதுவும் நடக்கவும்

இல்லை,!அதனால். அவர்களுக்கு எந்தச் சந்தேகமும் ஏற்படவும் இல்லை,

எனவே. அந்தக் கதவின் வழியே. வீட்டை விட்டு வெளியேறி. நளினி கடைக்குச் செல்வது இலகுவாகவே முடிந்துவிட்டது,!

என்ன வாங்க வேண்டியிருந்தது என்பதைச் சொல்லியதால். மகளை அறிந்த தாயும் அவளைத் தடுக்கவில்லை,!பிளஸ் டு "தங்கைக்கும். அதுவே சரியாகப்பட்டது,!

பல நாட்களுக்குப் பிறகு. காவலர் புடைசூழச் செல்வது. அதை யார்யார் பார்த்து என்னென்ன கிண்டலடிக்கிறார்களோ என்பன போன்ற எந்தவிதக் கட்டுப்பாடோ. குன்றலோ இல்லாமல் வெளியே செல்கையில். வெகு சுதந்திரமாக. மிகச் சுகமாக நளினி உணர்ந்தாள்,

அந்தச் சுகத்தில். திட்டமிட்டதை விடவும் அதிக நேரம் வெளியே சுற்றியலைந்து. இன்னும் பல பொருட்களையும் வாங்கிக்கொண்டு. அவள் வீடு திரும்பினால். சிவந்த கண்களுடன். இறுகிய முகத்துடன் புவனேந்திரன் அவள் வீட்டில் உட்கார்ந்திருந்தான்,!உண்ணவும். அருந்தவுமாக. அவன் முன்னே வைக்கப்பட்டிருந்தவைகள் தொடக்கூடப் படாமல். அப்படியே இருந்தன,!

ஒரு கணம். நளினிக்குத் திக்கென்றுதான் இருந்தது,!

ஆனாலும். அவள் அப்படியென்ன தப்பு செய்துவிட்டாள்? அவனது அசட்டுப் பாதுகாவலை ஒரு தரம் மீறியிருக்கிறாள், மற்றபடி ஒன்றுமில்லையே என்று தோன்றிவிடவும். தானாக அவளது தலை நிமிர்ந்துவிட்டது,!

வீட்டில் அவளுடைய தந்தை. தாய் இருவருமே பெரும் சிக்கல் தீர்ந்த பெருமூச்சுடன். "வாம்மா,!" என்று அவசரமாக அவளை எதிர்கொண்டனர்,

"இதோ வந்துவிடுவாள் என்று. சொல்லிக்கொண்டே இருந்தோம்,! அதே போல. வந்துவிட்டாய், எல்லாம் கிடைத்ததாடா?" என்றாள் சகுந்தலா, "போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வா, புவனேந்திரன் அப்போது பிடித்து காத்திருக்கிறார்,!" என்றாள் குறிப்பாக,

புவனேந்திரன் வெறுமனே காத்திருக்கவில்லை,. பார்த்து நடந்துகொள் என்று தாயார் சொல்வது என்று நளினிக்குப் புரிந்தது,!

ஆனால். இந்த மூன்று மணிநேரம் சுதந்திரமாகச் சுற்றியலைந்தது. நளினியை வேறு விதமாக எண்ணவைத்தது,!

பாதுகாப்பு. பாதுகாப்பு என்று புவனேந்திரன் செய்வதெல்லாம் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றியது,!பொன் வண்ணம் பூசியதாலேயே. சிறைக் கம்பிகள் வேறாகி விடுமா? சொந்த

வீட்டிலேயே. காசு கொடுத்துக் கைதிகளாக வாழ்வதா?

அவசியமற்றுத் தன்னைத் தானே கைதியாக்கிக் கொண்டதோடு. அவளையும் அந்த நிலைக்கு. அவன் தள்ள முயற்சிக்கிறான்,!

அந்த நிலையிலிருந்து. தன்னோடு. பாவம். அவனையுமே காப்பாற்ற வேண்டும்,!

ஒரு ரதி கடத்தப் பட்டதாலேயே. எல்லாப் பணக்காரர்களுடைய மனைவிமாரும் கடத்தப்பட்டு விடுவார்களா. என்ன? மாட்டார்கள் என்று. அவனுக்குப் புரிய வைக்கவேண்டும்,!

அவனிடம் என்ன மாதிரிப் பேசிப் புரியவைப்பது என்று. அவள் அவசரமாக மனதுள் ஒத்திகை பார்க்கையில். “உன்னிடம் தனியாகப் பேசவேண்டும், சற்று வெளியே போய் வரலாமா?” என்று உணர்ச்சி துடைத்த குரலில் கேட்டான் அவன்,

ஒரு கணம் நளினி யோசித்தாள்,

புவனனோடு எங்கே சென்றாலும். அவனுடைய மெய்க் காவலர்கள் கண் பார்க்கும்
ஏன். காது கேட்கும் தொலைவிலேயே இருப்பார்கள், அப்படி இரு பார்வையாளர்களை அருகில் வைத்துக்கொண்டு. அவளால் இலகுவாகப் பேச முடியாது,!

எனவே. “நிஜமாகவே தனியாகப் பேசுவது என்றால். வெளியே போவதை விட. அப்பாவின் அலுவல் அறையில் இருந்து பேசுவது மேல்,,!” என்றாள். அவனுக்குப் பதிலாக,

அவளது பேச்சின் பொருள் புரிந்தாற் போலப் புவனனின் முகம் சற்றுக் கடுத்தது,!

ஆனாலும். அவளது யோசனையை மறுக்காமல். சுதர்சனத்தின் அலுவல் அறைப்புறமாக நடந்தான்,

அறைக் கதவுக்கு. முடிந்தவரை உட்புறமாகத் தூரச் சென்றவன்.

அவளும் அருகே வந்ததும். “நான் சொன்னது எதுவுமே. உன் மூளையை எட்டவில்லையா? ஏன் இப்படிச் செய்தாய்?” என்று. தணிந்த குரலில் சீறினான்,

முட்டாளே என்கிறானா?

“அன்னிய ஆண்களைப் பார்வையாளர்களாக வைத்துக்கொண்டு உள்ளாடைகள் வாங்கும் பழக்கம் எனக்குக் கிடையாது,!“ என்றாள் அவள் வெடுக்கென,

“ஓகோ,!நீ உள்ளாடைகளை வாங்கும்போது. உன்னைக் கடத்தக் கூடாது என்று. ஏதேனும் சட்டம் இருக்கிறதா?” என்றான் அவன் எகத்தாளமாக, “ அப்படியே ஒரு சட்டம் இருந்தாலும். அவர்கள் வன்முறையாளர்கள்,!அந்தச் சட்டத்தை எப்படியும் மீறுகிறவர்கள், இது கூடவா. உனக்குப் புரியவில்லை?”

பொறுமையிழந்து. “நிறுத்துங்கள் புவனன்,!என்ன இது. எப்போது பார்த்தாலும். கடத்தல். கடத்தல் என்றுகொண்டு,!” என்று ஆத்திரப்பட்டாள் நளினி;,

“என்ன செய்வது? எத்தனைமுறை சொன்னாலும். அது உன் மண்டையோட்டைத் தாண்டி. உள்ளே போவதாகத் தெரியவில்லையே,!அதனால்தான். திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டியிருக்கிறது,!” என்றான் புவனேந்திரன் பதிலுக்கு ஆத்திரமாகவே, ஆனால். உடனே தணிந்து. , “சொன்னால். புரிந்துகொள். நளினி, ஏற்கனவே. பட்ட கடனே எனக்கு முழுதாகத் தீரவில்லை,!இன்னும் உனக்காக வேறு கடன்பட வைத்துவிடாதே,!” என்றான் கனத்த குரலில்,

“கடனா? என்ன கடன்?”

“எனக்கு மனைவியான பாவத்துக்கு. ஒருத்தி பலியானது போதாதா? உனக்கும் ஏதேனும் நேர்ந்தால். நான் என்ன செய்வேன்? என்னால் தாங்கவே முடியாதும்மா,!”

எதுவும் நேரத் தேவையே இல்லை என்றால். இவன் ஏன் ஒத்துக்கொள்ள மாட்டேன் என்கிறான்? கீறல் விழுந்த பழைய கிராமஃபோன் இசைத்தட்டு மாதிரி. அதே “ கடத்தலை” உருப் போட்டால். அவளுக்கு எரிச்சல் வராதா? முதலில்.

“ நீங்கள் பாதிக்கப் பட்டவர். புவனன்,!சூடு பட்ட பூனை மாதிரி. பட்டறிவில் பேசுகிறீர்கள்,. ஒத்துக் கொள்ளுகிறேன்,!ஆனால். பூனையை விட. ஓர் அறிவு உங்களுக்கு அதிகம் இருக்கிறதில்லையா? அதைக்கொண்டு. யோசித்துப் பாருங்கள், எந்தப் பணக்காரனுடைய மனைவி எப்போது கிடைப்பாள். கடத்திப் போய்ப் பணம் பறிக்கலாம். கூடவே கொல்லலாம் என்று ஊரெல்லாம் வன்முறையாளர்கள் அலைந்து திரிந்து கொண்டிருக்கிறார்கள் என்றா நினைப்பது? அப்படி எல்லோரும் எண்ணத் தொடங்கினால். அப்புறம் தொழில் நடத்துதிலும். பொருள் ஈட்டுவதிலும். யாருக்கு ஆர்வம் இருக்கும்? மனைவியை நேசிப்பவர்கள் எல்லோரும். கையில் திருவோட்டைத் தூக்கிக்கொண்டு பிச்சையெடுக்கத்தானே. போவார்கள்? அப்புறம். நாட்டின் பொருளாதாரமே நாசமாகிவிடாதா?” என்று மனதில் இருந்ததை. மூச்சு விடாமல். படபடவென்று பொரிந்து கொட்டினாள்,

அவள் பேசி முடித்தபோது. புவனேந்திரனின் கண்களுக்குச் சமமாக. முகமும் கன்றிச் சிவந்து போயிருந்தது,

இறுக மூடியிருந்த உதடுகளும். கை முஷ;டிகளுமாக. அவன் உணர்ச்சிகளை அடக்கப் பாடுபடுவதைக் கண்ட நளினிக்குச் சற்றுப் பரிதாபமாகக்கூட இருந்தது,!

ஆனால். இது சொல்லியாக வேண்டிய விஷயமே அல்லவா?

அவன் கற்சிலையாய் நிற்க. அவனை நெருங்கி.அவனது கரத்தைத் தொட்டு. “மெய்யாகத்தான் சொல்லுகிறேன். புவனன், ரதிக்கு நேர்ந்த துரதிர்ஷ;டம் எல்லோருக்கும் நேர வேண்டும் என்று கட்டாயம் இல்லை,!நீங்கள் அப்படி அஞ்சத் தேவையும் இல்லை,!”

அவளது விரல்களுக்கு அடியில். புவனேந்திரனின் தோல் மேலும் இறுகுவதை அவளால் உணர முடிந்தது,!

அந்த இறுகலின் அடிப்படையான வேதனை புரியவும். அது தாங்காமல். “ஐயோ. வேண்டாம். புவன்,!” என்று இரு கைகளாலும் இவனை இறுக அணைத்தாள்,

அவனது கரங்களும் அவளைச் சுற்றிக்கொள்ள. இருவரும் சற்று நேரம். அப்படியே நின்றனர்,

அவனது இறுக்கம் மெல்லத் தளர்வதை உணர்ந்து. அவனது

தோளை மெல்ல வருடி. “அனாவசியமாக உங்களை வருத்திக் கொள்ளாதீர்களேன். புவனன்,!” என்று. வேதனையோடு வேண்டினாள் நளினி,

ஓரிரு கணங்கள் அசையாமல் நின்றுவிட்டு. ஆறுதலாக வருடிக் கொடுத்த அவளது கையைப் பற்றி நிறுத்தினான் புவனேந்திரன்,

“அனாவசியமாகவா?” என்று ஒரு மாதிரிக் குரலில் கேட்டவன். அவளை நேராக நோக்கி. “ரதிக்கு நேர்ந்து ஆபத்து எல்லோருக்கும் நேர வேண்டிய கட்டாயம் இல்லை என்றாயே. அப்படி நேரவே நேராது என்பதற்கு. என்ன உத்தரவாதம்?” என்று கேட்டான்,!

பழைய கதைக்கே வருகிறான்,!

இதற்கெல்லாம் என்ன உறுதி கொடுக்க முடியும்? வெகுசில வாய்ப்புகள் மட்டுமேதானே உண்டு என்றாலும். அதற்காகவேனும் அவள் காவல் கைதியாக வாழ்ந்தே ஆகவேண்டும் எனப் போகிறான்,!

உள்ளம் சலிப்புறக் கைகளை விடுவித்துக் கொண்டாள் அவள், “அப்படி வெகு அபூர்வமாக ஏதேனும் நேர்ந்தாலும். என்னைக் காப்பாற்றிக்கொள்ள. என்னால் முடியும்,!” என்றாள் எங்கோ பார்த்தபடி,

“எப்படியாம்? அன்றைக்குஎன்னிடம் மாட்டினாயே. அது போலவா?” என்று ஏளனமாகக் கேட்டான் அவன், “உன்னால் முடியாது என்று. அன்று போலவே இன்னொரு தரம் நிருபித்துக் காட்டினால். அப்போதேனும் மனதில் நிற்குமா?”

அவனது ஏளனம் தைக்க. “தேவையில்லை,!ஆனால் நீங்களும் ஒன்றை யோசித்துப் பாருங்கள்,. நான் ஒன்றும். உங்கள் வில்லாதி வில்லர்களை உற்றவர்கள் என்று நம்பி. உங்களிடம் போலத் தனியாகச் சென்று. அவர்களிடம் மாட்டிக்கொள்ளப் போவதில்லையே,!பொது இடங்களில். அந்த மாதிரிக் கடத்த முயன்றால். நம் பொது மக்கள் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள்,!அதனால். உங்கள் அச்சமும். கவலையும் அனாவசியமேதான்,!” என்றாள் அவள்.தெளிவாக,!

“ “கள்வன் பெரிதா. காப்பான் பெரிதா” என்று ஒரு வாசகம் சொல்வார்கள், மதுரையில் பார்த்திருக்கிறாயா? அவ்வளவு சிறப்பாகக் கட்டப்பட்டிருக்கும் திருமலை நாயக்கர் மகாலிலேயே.

அவரது காவல் படையையும் மீறி. கள்வர்கள் கன்னமிட்ட இடம் இருக்கிறது,!சாதாரணப் பொது மக்கள். எந்த விதத்தில். உன்னைக் காப்பாற்றிவிட முடியும் என்கிறாய்?” என்று கேட்டான் அவன்,

“அப்படிப் பார்த்தாலும். நாயக்க மன்னருடைய பெரும் படை வீரர்களையே மீறி. அந்தக் கள்வர்கள் கன்னம் போட்டிருக்கிறார்களே,!உங்கள் இரண்டு பாதுகாவலர்கள். அந்த வன்முறையாளர்களுக்கு எம்மாத்திரம்?” என்று மடக்கினாள் நளினி,

இவளிடம் என்ன சொன்னால் புரிந்துகொள்வாள் என்று அறியாதவன்போலச் சற்;று நேரம் அவளைப் பார்த்தபடி. புவனேந்திரன் புருவம் சுளித்து நின்றான்,

பிறகு. “உண்மையாகவே. இந்தப் பாதுகாப்பு தேவை இல்லை என்று உனக்குத் தோன்றுகிறதா. அல்லது இங்குள்ள சூழ்நிலையில் அது சங்கடமாக இருப்பதால். வேண்டாம் என்கிறாயா? நன்கு யோசித்து எனக்குப் பதில் சொல்லு. நளினி,” என்று வரண்ட குரலில் வினவினான்,

அவனது குரலும். “கண்மணி.  ம்மா” விகுதியைக் கைவிட்டு வெறுமனே நளினியென்று அழைத்த விதமும். அவளை எச்சரித்திருக்க வேண்டும்,!

ஆனால். அவனிடம் இருக்கும் ஒரே அசட்டுத்தனம் என்று அவள் கருதியதைப் போக்கிவிடும் வேகத்தில். “தேவையில்லை,. தேவையில்லை,. நிஜமாகவே. எனக்குப் பாதுகாப்புத் தேவையே இல்லை,!” என்றாள் அவள் அவசரமாக,!

“நான். உன்னை யோசித்துப் பதில் சொல்லச் சொன்னேன்,!” என்றான் அவன்  கோபமாக,

“மனதில் எப்போதும் இருப்பதைச் சொல்ல. எதற்கு யோசனை?” என்றாள் நளினி,

“மனதில் எப்போதும் இருப்பதா?” என்று . அவளது வார்த்தைகளையே மெதுவாகத் திருப்பிச் சொன்னான் புவனேந்திரன், “அப்படியானால். ஏற்கனவே யோசித்து. ஒரு முடிவுடன்தான் இருக்கிறாய் என்று தெரிகிறது,!”

“நிச்சயமாய்,!இனி நீங்கள்தான் யோசிக்க வேண்டும்,!”

“யோசித்து நான் எடுத்த முடிவு பற்றி. முன்பே உன்னிடம் சொல்லியிருக்கிறேன்,!“ என்றான் அவன் இளக்கமற்ற. கனத்த குரலில்,

அவன் சொன்னது நினைவு வர. நளினி அதிர்ந்தாள்,

# அத்தியாயம் -13

சக்திவேலின் காவல் தேவையில்லை என்று. புவனேந்திரனிடம் அவள் கேட்கப் போனபோது நடந்தது. நளினிக்குத் தௌ;ளத்தெளிவாக நினைவு இருந்தது,!

அவனது விஷயங்கள் எதையுமேதான் அவள் மறப்பது இல்லையே,!

அதிலும். இது. அவனது முதல் இதழொற்றுதல்,!

பிரிவைத் தேர்ந்தெடுத்து விடாதே என்று. அன்று. அவன் எப்படிக் கொஞ்சிக் கெஞ்சிக் கேட்டான்,!

அந்த அன்பு பெரு மரமாய் இவ்வளவு வளர்ந்த பிறகு. அவனுக்கு மட்டும் பிரிவது எளிதாகவா இருக்கும்? அதற்காக. அவனும். அவள் பக்கம் வரலாமே,!

ஆனால். புவனேந்திரன் ஒரு மாதிரிப் பிடிவாதக்காரன்,! பெற்றோருக்கு அனியாயம் செய்தார் என்று. பாட்டியைக் கடைசிவரை மரண வாசலில் ஒரு தரம் எட்டிப் பார்த்தது தவிர. இன்னமும்கூட. அவன் மன்னிக்கவே இல்லை,!

ஆனால். முன்பின் பார்த்தே அறியாத பாட்டியின் பாசமும். அவளது காதலும் ஒன்றல்ல, ,

அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள அன்பின் வலிமை பெரியது,. அது. அவனை. அவள் பக்கம் இழுத்து வந்துவிடும் என்று. நளினி பிடிவாதமாக எண்ணமிடும்போது. அதை நிருப்பிப்பவன் போன்று. புவனன் அவள் புறமாக ஓர் எட்டு எடுத்து வைத்தான்,

ஆனால். அவள் ஆவலாக நோக்குகையிலேயே. கைகளை இறுக மூடிக்கொண்டு. திரும்பி நடந்து. அறையை விட்டு வெளியேறிவிட்டான்,

வெளியே சென்றவன். அறைக்குள் நடப்பதைக் கவனியாதிருக்க மிகவும் முயன்று கொண்டிருந்த சுதர்சனத்திடம் போனான், “பாருங்கள். அங்கிள்,!என் கடந்த காலத்தில் நடந்தது பற்றி உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்,!விளக்கி. விலாவாரியாக விவரிக்க முடியாத சிலதைத் தேவையில்லை என்று

விட்டிருந்தேன் அதில் ............................................................. அங்கிள். நளினிக்கும் இது தெரிய வேண்டியதுதான், ..........................” என்று மேலும் சற்றுத் தடுமாறிவிட்டு. அவனே தொடர்ந்து பேசினான்,

“அங்கிள். ரதிக்குப் பூ மாதிரி முகம்,!இளமை. சந்தோஷம் எல்லாமாக. அன்றலர்ந்த பூ தவிர. அவள் முகத்துக்கு வேறு உவமை கிடையாது,! ஆனால். அவள் காணாமல் போய் இறந்து பத்து நாட்களுக்குப் பிறகு. பி பிணக் கிடங்கில் பார்த்தபோது. அந்த முகம் எப்படி இருந்தது. தெரியுமா? எனக்கு மறக்காது,!இந்தப் பிறவியில் அது மறக்கக் கூடியது அல்ல. அங்கிள்,!என்னை மணந்த ஒரு காரணத்துக்காக ..................................................................., அவள்....அந்தப் புதுமலர் ...............................................................................கடவுளே.......” என்று. மேலே பேச முடியாமல் தவிப்புடன் அவன் நிறுத்தியபோது. எல்லோருக்குமே மூச்சடைத்துப் போயிற்று,!

சகுந்தலா ஓசையற்று அழவே தொடங்கிவிட்டாள்,

முதலில் சமாளித்துக் கொண்டவனும் புவனன்தான்,

தொண்டையைச் செறுமிச் சரிப்படுத்திக்கொண்டு. “அங்கிள். ஆன்ட்டி. நீங்கள் இருவரும் என்னைப் போலவே. நளினி மீது நீங்களும் மிகுந்த அன்புள்ளவர்கள் என்பதால். நான் சொல்வதைப் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்,!நளினி என் மனைவியாக இருப்பதை விட. அவள் அவள் நல்லபடியாக உயிரோடு இருப்பது எனக்கு முக்கியம்,!இன்னொரு .......................அது போல. இன்னொரு தப்பு நடக்க விட முடியாது. அங்கிள்,!அதனால். நான் இந்தத் திருமண நிச்சயத்தை முறிக்கிறேன்,!” என்று முடித்தான்,!

அவரது அலுவல் அறை வாயிலில். முகத்தில் ரத்தப் பசையே இல்லாமல் வெளுத்த முகத்துடன். ஓர் ஆவியைப் போன்று நின்ற மகளை. அதிர்ச்சியுடன் பார்த்தார் சுதர்சனம்,!

மகளின் மனம் அவர் அறியாதது அல்ல,!

அது. இப்போது என்ன பாடு பட்டுக் கொண்டிருக்கும் என்று உணர்ந்து. “பாருங்கள் புவனேந்திரன். அவள் சின்னப் பெண் ,!இந்த ஒரு தடவை யோசியாமல் “ என்று ஏதோ சொல்லத் தொடங்கினார்,!

“இல்லை. அங்கிள்,!நன்கு யோசித்துதான். தனக்குப் பாதுகாப்புத் தேவையில்லை என்று. நளினி செயல்பட்டிருக்கிறாள்,

வரக்கூடிய ஆபத்து பற்றி அவளுக்குப் புரியவில்லை என்பதோடு. எதையும் புரிந்துகொள்ளப் பிரியமும் இல்லை,!அவசியமற்ற அசட்டுத்தனமாக நிச்சயமாக நினைக்கிறாள்,!எனவே. மீதம் இருக்கும் ஒரே வழி. ஆபத்துக்கு ஆளாகாத. பாதுகாப்பு தேவையற்ற ஒரு நிலையை. அவளுக்கு உருவாக்கிக் கொடுப்பதுதான், அதனால்தான். விலகிப் போக முடிவு செய்திருக்கிறேன், இன்னொன்று அங்கிள், இதுவே. இன்னொருவர் என்றால். நிச்சயித்த திருமணத்தை நிறுத்துவதற்காக. நஷ;ட ஈடு எவ்வளவு வேண்டும் என்று நேரடியாகக் கேட்டிருப்பேன், ஆனால். இந்தக் குடும்பம் அப்படிப்பட்டது இல்ல என்று எனக்குத் தெரியும்,!ஆனாலும். சில ஏற்பாடுகளுக்காக நீங்கள் செய்திருக்கும் அதிகப்படிச் செலவுகளை ஈடு செய்யவே. நான் விரும்புகிறேன்,!அதனால் ............................ “

பணமா தருகிறேன் என்கிறான்? பணம் எல்லாவற்றையும் ஈடு செய்து விடுமாமா?

நளினியின் தவிப்பு. கொதிப்பாக மாறியது,

அவன் பேச்சில் குறுக்கிட்டு. “அவரது பணம் இங்கே யாருக்கும் தேவையில்லை,. அது இல்லாமலே இது வரை வாழ்ந்தது போல. இனியும் நம்மால் வாழ முடியும் என்று சொல்லி. அவரை வெளியே அனுப்புங்கள். அப்பா,!” என்று. சீறினாள்,

அவளை நேராகப் பாராமலே. “இது. இப்படிப் பிரிய நேர்வது. எனக்கும் மிகுந்த வேதனைதான். அங்கிள், மீண்டும். பழைய பாலைவன வாழ்க்கைக்குத் திரும்புவது. எனக்கு மட்டும் மகிழ்ச்சியா? ஆனால். அவள் மேல் உள்ள அக்கறையினாலேயே. இதை விடப் பெரிய துன்பம் நேர்ந்துவிடக் கூடாது என்ற ஒரு காரணத்திற்காகவே. வேறு வழியில்லாமல் மனதைப் பெரிதும் கட்டுப் படுத்திக்கொண்டு. இந்த முடிவை எடுத்திருக்கிறேன்;,!பணம் பற்றிக்கூட. உங்களுக்குத் தேவை என்று நான் அதைக் கூறவில்லை, நொந்த என் மனதிற்கு ஒரு சிறு ஆறுதல் கிடைக்கக் கூடும் என்றுதான் ......... இதற்கு மேல். நான் வேறு என்ன சொல்லட்டும்? கிளம்புகிறேன், “ என்ற புவனேந்திரன் அதற்கு மேல் நில்லாமல். அங்கிருந்து போய்விட்டான்,

புவனேந்திரன் இப்படிச் சொல்லிச் சென்றது. வீட்டினர் எல்லோருக்குமே அதிர்ச்சிதான்,!

அவர்களிலும். நளினிக்கு. ஒரு பயங்கரக் கனவை நிறுத்த முடியாமல். தொடர்ந்து கண்டு கொண்டே இருக்கும் உணர்வு,!

புவனனின் அசட்டு பயத்தைப் போக்குவதாக எண்ணி அவள் செய்த முயற்சி. இப்படிப் பூமராங்காகத் திருப்பி அடிக்கும் என்று அவள் சற்றும் எதிர்பார்க்கவே இல்லையே,!

அவள் மீது அவனுக்குள்ள அன்பில் நம்பிக்கை வைத்து. அந்த அன்பை இழக்க விரும்பாமல். புவனன் தன் வழிக்கு வருவான் என்று அவள் கருதியது மாறி. அந்த அன்புக்காகவே. அவளைப் பிரியத் துணிவான் என்று அவள் நினைக்கவில்லையே,!

இது கனவாகத்தான் இருக்கும் ,. அல்லது ஏதோ மனப் பிரமையோ என்றெல்லாம்கூட. அவளுக்குத் தோன்றியது,!

ஆனால். அவள் ஏதோ கண்ணாடிப் பாத்திரம். உரக்கப் பேசினாலே உடைந்து விடுவாள் போலப் பார்த்துப் பார்த்துப் பெற்றோர் நடந்துகொண்ட விதம். இது கனவோ. பிரமையோ அல்ல என்றது,!

வீட்டு வாயிலில் எப்போதும் இருக்கும் சக்திவேலும் அவனுடைய கூட்டாளி கண்ணனு[ம் காணாமல் போனது. எல்லாம் நனவே என்று மேலும் உறுதிப்படுத்தியது,!

சூரியன் கிழக்கே உதித்து. மேற்கே மறைவது போல. வெகு நிச்சயமான நடப்பு,!

புவனேந்திரன். அவளை விட்டு நிஜமாகவே பிரிந்து போய்விட்டான்,!

எப்படி முடிந்தது?

அவளைப் பார்த்ததுமே. அவன் கண்கள் பளிச்சிட்டதும். முகம் மலர்ந்ததும். எல்லாம் பொய்யா? நடிப்பா? கனவா?

இல்லை,!எல்லாமே உண்மையே,!

ஆனால். எல்லாவற்றையும்விட. அவர்களது அன்பை விட. அவர்களது ஆனந்தமான எதிர்கால வாழ்வை விட. அவனது பாதுகாப்புப் பைத்தியம் பெரிதாக இருந்திருக்கிறது,!

அவர்களது வாழ்வில். பூரண மகிழ்ச்சிக்கு இடையூறாக இருக்கக் கூடும் என்று  கருதி. அவள் தவிர்க்க முயன்றது. கடைசியில். அவளது வாழ்வையே அழித்துவிட்டது,!

மெய்யாகவே. வாழ்க்கையே அழிந்து விட்டது போலத்தான் நளினி உணர்ந்தாள்,

புவனேந்திரன் இல்லாமல். சுகமோ. சந்தோஷமோ அவளுக்கு ஏது?

இனிமேல். தன்னால் வாய் விட்டுச் சிரிக்கவே முடியாது என்று. அவளுக்கு நிச்சயமாகத் தெரிந்தது,!

அதை விடவும். இதயம் இருந்த இடத்தில் புழுவாய் அரித்த இந்த வேதனை,!அது என்றேனும் மட்டுப் படக் கூடுமா? அந்த நம்பிக்கையும் இல்லை,!

புவனேந்திரனைப் பிரியவே நேர்ந்து விடும்,. அந்தப் பிரிவு இவ்வளவு வேதனையைத் தரும் என்று முன்பே தெரிந்திருந்தால். வாயை மூடிக்கொண்டு இருந்திருக்கலாமே,!

“நுணலும் தன் வாயால் கெடும்” என்பது போல நடந்து கொள்கிறாள் என்று. அவன் முதல்நாள் சந்திப்பிலேயே சொன்னானே,!அதற்கு உதாரணமாக நடந்து. மீண்டும் எதிர்காலத்தைக் கெடுத்துக் கொண்டாளே,!

இப்படியெல்லாம் நினைத்துக் கண்ணீர் வடித்துத் தன்னைத் தானே நோகடித்துக்கொண்ட போதும். மனதாரச் சரியானது என்று ஒத்துக்கொள்ளாத ஒன்றைச் சும்மா வாய்மூடி மௌனமாக ஏற்றுக்கொள்வது. தன் இயல்பு அல்ல என்பதையும் நளினி அறிந்தே இருந்தாள்,

புவனனும். பாதுகாப்பு விஷயத்தில் இளகுகிறவன் அல்ல,!

எனவே. அன்று இல்லாவிட்டாலும். சற்றுப் பின்னே எப்படியும் ஒரு நாள் இந்த வாக்குவாதமும். அதன் இந்த முடிவும் நிகழ்ந்தே இருக்கும்,!

எனவே. இப்படி இருந்திருந்தால். அப்படிச் செய்திருந்தால் என்று எண்ணி மனதைப் புண்ணாக்கிக் கொள்வது மடத்தனம்,!

தன்னைப் புண்ணாக்கிக் கொள்வது மட்டும் மடத்தனம் அல்ல,! தன் மேல் அன்பு வைத்த பாவத்துக்காகப் பெற்றோரையும். உடன் பிறந்தவளையும் நோகடிப்பதுகூட மடத்தனம்தான்,!

“நான் பிளஸ் டு “. பிளஸ் டு “““ என்று எப்போதும் புத்தகமும்

கையுமாகப் புருவங்களை உயர்த்திக்கொண்டு அலையும் மஞ்சரி கூட. தன் வழக்கத்துக்கு மாறாக. “கொஞ்சம் ஜூஸ் குடிக்கிறாயாக்கா?”. “காஃபி தரட்டுமா?” என்று ஓடி ஓடி வருவது ஒருவாறு கண்ணிலும். அதைத் தொடர்ந்து கருத்திலும் பட. நளினி தன்னைச் சமாளித்துக்கொள்ள முயற்சித்தாள்,

சும்மா விழுந்தடித்துப் படுத்திருப்பதும். படுத்துக்கொண்டு அழுவதும். இனிக் கூடாது,!

குறுக்கிட்டுக் கொண்டே இருந்த புவனேந்திரனின் நினைவைப் பிடிவாதமாக முயன்று ஒதுக்கியபடி. என்ன செய்வது என்று. நளினி யோசித்தாள்,

“உன்னத”த்துக்குப் போய்த் தொடர்ந்து பணி புரிவது முடியாத காரியம்,!

தன் நெஞ்சில் தானே. கத்தியால் திருகுவது போல. அது முட்டாள்த்தனமான காரியம்,!

வீட்டிலும். வழக்கம்போல எந்தவிதமான அலங்காரப் பூ வேலைகளைச் செய்யவும் முடியவில்லை,!

அதற்குக் கற்பனா சக்தி வேலை செய்ய வேண்டும்,!கண்ணும் மனமும் ஒன்றி வேலை செய்ய வேண்டும்,!எப்போதும் கண்ணுக்குள் புவனேந்திரனை வைத்துக்கொண்டு செய்தால். ஊசி குத்திக் குத்தியே. கை புண்ணாகி விடும்,!

வேறு என்ன செய்வது என்று. அவள் யோசித்தபோது. “உன்னத”த்திலிருந்து. அவளது சம்பளத்தைக் கணக்குத் தீர்த்து ஒரு காசோலையும். வேலையைத் திறம்படச் செய்ததாக ஒரு நன்னடத்தைச் சான்றிதழும் வந்து சேர்ந்தன,!

அங்கே தொடர்ந்து அவள் வேலை செய்வது முடியாது என்று. அவளைப் போலவே. அவனும் எண்ணியிருக்கிறான்,!

யாராக இருந்தாலும். அப்படித்தான் யோசித்திருப்பார்கள் என்றாலும். நளினிக்கு என்னவோ. தன்னைப் போலவே ஒத்த மனமாகப் புவனேந்திரனும் நினைத்திருப்பதாகத் தோன்றி. அதற்கோர் அழுகை வந்தது,!

ஆனால். அதுவே இன்னொரு வாய்ப்பையும் கொடுத்தது,!

அடுத்த வேலை தேடப் போவதாகக் கூறி. வீட்டை விட்டு வெளியே செல்லத் தொடங்கினாள்,

ஆனால். முழு மனதோடு. நளினி வேலை தேடினாள் என்று சொல்ல முடியாது,!

ஆனால். முதல் லாபமாக. அவளது கண்ணீர் நின்றது,! வெளியே. கண்ட கண்ட அன்னியர்கள் பார்க்க அழ முடியாது அல்லவா? அந்த அளவுக்குச் செல்ல முடியாமல். குறைந்த பட்சமாக. அவளது உடல் உறுப்புகளுக்கேனும் ரோஷம் இருந்தது,!

அத்தோடு. அவளது மூளையும் பிடிவாதமாக மற்ற விஷயங்களில் டூ இந்த உடையில் கழுத்து அமைப்பு நன்றாக இருக்கிறது,. இது வண்ணக் கலவை சரியில்லை ,. இந்த உடல் அமைப்புக்கு இது போலப் பெரிய கட்டங்கள் உள்ள சேலை கட்டவே கூடாது,. நீளவாக்கில் கோடுகள் வரும்படி வேலைப்பாடாவது செய்ய வேண்டும் ......என்பன போன்ற அவளது வேலை தொடர்பான விஷயங்களில் சிந்தனையைச் செலுத்தக் கண் கரிப்பு மெல்ல மெல்ல மறைந்து போகும்,!

எனவே. வீட்டிலேயே முடங்கிக் கிடந்து. கண்ணீரும். வேதனையுமாக மற்ற மூவரையும் வருத்திக் கொண்டிருந்தது மாறியது,

வீட்டிலிருந்து கிளம்பியவள். வேலை தேடினாளா. அல்லது சும்மா சுற்றியலைந்தாளா என்று சொல்வதற்கில்லைதான்,! அலைச்சல். ரொம்பவும் சலிப்பூட்டினால். ஏதாவது பூங்காவிற்குப் போய். அங்கே சும்மா உட்கார்ந்திருப்பதும் உண்டு,!சும்மா இருப்பது புவனேந்திரன் நினைவை அதிகமாகக் கொணர்ந்தால். மீண்டும் கிளம்பி ஆள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களுக்குப் போய்விடுவாள்,

இப்படி ஒரு குறிப்பின்றி அலைகையில். திடுமென ஒரு நாள். யாரோ தன்னைப் பின் தொடர்ந்து வருவது போல நளினிக்குத் தோன்றியது,!

என்ன இது என்று அவள் மனம் சற்றே படபடத்தது,!

அவளை யார் பின் தொடரக் கூடும்?

அதுவும். புவனேந்திரன் அவளைப் பிரிந்து சென்றுவிட்ட

இப்போது,!

சந்தேகத்தைத்தெளிவுபடுத்திக் கொள்வதற்காக. அவ்வப்போது சடக்கென்று திரும்பிப் பார்த்தால். அப்படி யாரும் அவளைப் பின்தொடர்வதாகத் தெரியவில்லை,!

நாலாவது தடவையாகத் திரும்பிப் பார்த்தவளுக்குத் தன் மீதே எரிச்சல் வந்தது,!

புவனேந்திரனின் கடத்தல் பிரமை. இப்போது அவளையும் பிடித்துக்கொண்டு விட்டதா?

இந்தப் பைத்தியம் முன்பே அவளைப் பிடித்துத் தொலைத்திருந்தால். பேசாமல் அவனது பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தலையாட்டி ஏற்று நிம்மதியாக இருந்திருக்கலாமே என்று தோன்றவும். அவளுக்குத் தொண்டை அடைத்தது,!

நடை பாதையில் வைத்து. இது என்ன பைத்தியக்காரத்தனமான எண்ணப் போக்கு. என்று தன்னைத் தானே கடிந்தபடி. நளினி மேலே நடந்தாள்,

மறு நாள் வீட்டை விட்டு வெளியே செல்லுமுன். வாயில்புற ஜன்னல் வழியே. நளினி சுற்றுப் புறத்தை ஆராய்ந்தாள்,

முந்திய நாள்க் கலக்கத்தை வலியுறுத்தும்படியாக எதுவும் அவள் கண்ணில் படவில்லை ................ அல்லது. தெரு முனைக் கடையின் அருகில் நின்று பத்திரிகை படித்துக் கொண்டிருந்த ஒருவன். பத்திரிகையைத் தாழ்த்தி. அவளது வீட்டை உற்றுப் பார்த்தானோ?

வீட்டைத்தான் பார்த்தானோ. அல்லது. தொடர்ந்து படித்துக் கொண்டிருந்தவன். அலுத்த கண்களுக்கு ஓய்வு கொடுப்பதற்காகப் பத்திரிகையை விட்டுப் பார்வையை விலக்கியதைப்போய். அவள் தப்பாக எண்ணுகிறாளோ?

அவனை மணக்கப் போகிறவள் என்கிற நிலை மாறினாலே. நளினிக்கு ஆபத்து வராது என்பது. புவனேந்திரனின் கருத்து, அதன்படி. சக்திவேலும் கண்ணனும் அகற்றப்பட்டுப் பத்து நாட்களுக்கு மேலாகிறது,!

எனவே. இது. அவளுக்கான காவல் இல்லை என்பது நிச்சயம்,!

பின்னே?

மகள் முகத்தில் யோசனையைக் கண்டு. " என்னடாம்மா கிளம்பவில்லை?" என்று சகுந்தலா வினவினாள்,!

தாயிடம் எதையும் சொல்லிக் கலங்க வைக்க மனமின்றி. "ஒன்றும் இல்லையம்மா, ஒரு சேலைக்கு அலங்காரப் பூவேலை செய்யலாம் என்று நினைத்தேன், அதற்கு என்னென்ன வாங்க வேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்,!" என்று பெற்றவளுக்கு ஒரு காரணம் கண்டுபிடித்துச் சொல்லியபடியே. சும்மா பார்ப்பது போன்ற பாவனையோடு கீழே பார்த்தாள்,

பத்திரிகை படித்தவன் அந்தப் பக்கம் எங்குமே கண்ணில் படவில்லை,!

"அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்கிற மாதிரி. அவளுக்கும் தோன்றத் தொடங்கிவிட்டது போலும்,

சகவாச தோஷம்,!புவனனின் சகவாசம்,!

முன் தினம் யாரோ பின் தொடர்வது போல,!இன்று. யாரோ வீட்டைக் கவனிப்பது போல,!

இது போன்ற பிரமைகள்தான். புவனேந்திரனுக்கும் இருந்திருக்குமோ? அப்படி ஒரு துக்கமும் நேர்ந்துவிட்டதால். இந்தப் பாதுகாப்பு விஷயத்தில். அவன் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறான் போலும்,!

மீண்டும் மனம் புவனேந்திரனிடம் சென்றுவிட்டது மட்டுமின்றி. அவனை நியாயப்படுத்தவும் தொடங்கிவிட்டதையும் நளினி உணர்ந்தாள்,

ஆனால். புவனேந்திரனுக்கு இருப்பது. வெறும் பிடிவாதம் மட்டுமல்ல,!வெறி,!மதவெறி போலத் தீவிரமான ஒன்று,!

அந்த வெறிக்குப் பணிந்து. அவன் ஒருவன் கைதி வாழ்க்கை வாழ்வது போதும்,!

அவளும்  அதற்கு இடம் கொடுத்து விடக்கூடாது,!

அந்தப் பயத்தில். வீட்டிலேயே முடங்கிக் கிடக்கவும் கூடாது,!

இந்த எண்ணத்தில்தான். உள்ளத்தில் ஆர்வமே இல்லாதபோதும். நளினி அன்று வீட்டை விட்டு வெளியே சென்றது,!

ஆனால். புவனேந்திரனின் அசட்டு பயம். வெறி என்று அவளால் வர்ணிக்கப் பட்டது. அன்று. அவளுக்கு நடந்தது,!

நளினி கடத்தப்பட்டாள்,!

# அத்தியாயம் -14

கடந்த நாலைந்து நாட்களைப் போலவே. அன்றும் நளினி சில பெரிய கடைகளுக்குள் சென்று சுற்றியலைந்தாள்,

ஒரு கடையில். ஏதோ பேருக்கு ஒரு வேலை கேட்டாள்,

நளினியின் ஃபைலைப் பார்த்து ஆவலோடு. அவளது திறமை. தகுதி முதலியவற்றை விசாரித்த கடை நிர்வாகி. அவளது ஈடுபாடற்ற அரைகுறையான பதில்களில் அதிருப்தியுற்றுக் கையை விரித்துவிட்டார்,

நளினியும் அதற்காகப் பெரிதாக வருந்திவிடவில்லை,!

“உன்னத”த்தில் பணி புரிந்தபிறகு. அதே போன்ற இன்னோர் இடத்தில் வேலை செய்ய அவளுக்கும் மனமில்லைதான்,

ஏன். வேறு யாரிடமும். எந்த விதமான வேலை செய்யவுமே. அப்போதைக்கு அவளுக்குப் பிடிக்கவே இல்லைதான்,

இந்த வேலை தேடு படலமே. வீட்டிலேயே முடங்கிக் கிடந்து. மற்றவர்களை வருத்துவதைத் தவிர்ப்பதற்கான சாக்காகத்தான் இருந்தது,!

இந்த வருமானம் வந்துதான் வாழ வேண்டும் என்கிற நிலை இல்லாத காரணத்தால். வேலை கிடைக்காததை. யாரும் பெரிதாகக் கருதவும் இல்லை,!

நளினியுடைய பெற்றோருக்குமே. மகள் வெளியே சென்று. நாலு பேர் முகத்தைப் பார்த்துப் புவனேந்திரனின் இழப்பை மறக்க மாட்டாளா என்பதுதான் முக்கியமாக இருந்தது,!

இந்தச் சில நாட்களின் பழக்கம் போலவே. ஓரிரு பெருங்கடைகளில் ஏறி இறங்கியதும் தன் கால் போன போக்கில். நளினி நடக்கலானாள்,

மனமும் வழக்கம் போலவே. புவனேந்திரனிடம் ஓடியது,!

காவல். காவல் என்று. வீதிகளில் சுதந்திரமாக நடக்கக் கூட

முடியவில்லையே என்று அவன் மீது எரிச்சல் பட்டாளே,!இப்போது சுதந்திரமாக நடப்பது. சுகமாகவா இருக்கிறது? இல்லவே. இல்லையே ...........................................................................

நேரே செல்ல முடியாமல் எதுவோ வழியில் தடுப்பதை உணர்ந்து. நின்று நிமிர்ந்து பார்த்தாள் நளினி,

அறிமுகமற்ற ஒரு மனிதன். கையில் ஒரு துண்டு காகிதத்தை வைத்துக்கொண்டு. “இந்த முகவரி தெரியுமா. மேடம்?” என்று அவளிடம் கேட்டுக் கொண்டிருந்தான்,

நடை பாதைகளில் கூட்டமில்லாத நேரம்,!ஆனாலும். அங்கொருவர். இங்கோருவர் போய்க் கொண்டுதான் இருந்தார்கள்,

அருகே நடைபாதை ஓரமாகக் கூடவே . மெல்ல நகர்ந்து வந்த காரும். அந்த அன்னியன் குறிப்பாக அவளை நிறுத்திக் கேட்ட விதமும் மனதை உறுத்த. சட்டென விழிப்புற்று. அவள் வேகமாக விலகிச் செல்ல முயன்றாள்,

ஆனால். அதே வேகத்தில் இலகுவாக அவளோடு கூட நடந்தபடி. “கவனி பெண்சூணே. அந்தப் பக்கம் பார்த்தாயானால். துப்பாக்கியில் கை வைத்தபடி. எங்கள் ஆள் நிற்பது தெரியும்,!மறுப்பின்றி எங்களோடு இந்தக் காரில் ஏறி வந்து விட்டாயானால். உனக்குப் பிரச்சினை இராது,!இல்லாவிட்டால். கை. கால். உயிர் என்று என்னவெல்லாம் போகும் என்று சொல்ல முடியாது,!” என்று புன்னகையோடு பேசி மிரட்டினான்,

ஆனால். அந்த மிரட்டலுக்குப் பயந்து நளினி அவன் காட்டிய காரில் ஏறி விடவில்லை,!ஏனெனில். அப்படி அந்தக் காரில் ஏறிச் சென்ற பிறகு. அவன் சொன்ன எதுவும் அவளை விட்டுப் போகாது என்பதற்கு. எந்த வித உத்திரவாதமும் இல்லையே,!

ஆனால். அவன் காட்டிய பக்கமாக. அனிச்சையாகத் திரும்பிப் பார்த்துவிட்டு. உடனே தவறுணர்ந்து அவள் அவசரமாகத் திரும்புமுன் கிடைத்த சில கணங்கள். அந்தக் கடத்தல்காரனுக்குப் போதுமானதாக இருந்தன,!

சென்னியோரமாக விழுந்த அளவான சிறு தட்டில். நளினி உணர்வு மயங்கிச் சரிய. சற்றுத் தொலைவில் வந்துகொண்டிருந்த ஓரிருவர் என்னவென்று எட்டிப் பார்க்கு முன்னதாகக்

கார்க் கதவைத் திறந்து. அவளை உள்ளே தள்ளி ஏற்றிக்கொண்டு. கார் பறந்துவிட்டது,!

போக்குவரத்து வெகுவாகக் குறைந்திருந்த சமயம் என்பதால். கார் வேகமெடுப்பதற்கு வசதியாகவும் இருந்தது,!

சிறு கூச்சலிடக்கூட நளினிக்கு அவகாசம் இல்லாது போகவே. இங்கே ஓர் அனியாயம் நடக்கிறது என்று யாருக்கும் தெரியவும் வழியே இல்லாது போயிற்று,!

எனவே. புவனேந்திரனிடம் அவள் பெரிதாகச் சொன்ன பொதுமக்களின் உதவி. அவளுக்குக் கிடைக்கும் வாய்ப்பும் இல்லாது போயிற்று,!

ஆகச் சில மணி நேரம் கழித்து. நளினிக்கு முழுமையாகச் சுய உணர்வு வந்தபோது. அவள் கை. கால்கள் கட்டப்பட்டு. ஒரு நாற்காலியில் அமர்த்தப் பட்டிருந்தாள்,!

வலிக்கும் அளவுக்கு இறுக்கமாக இல்லை என்றாலும். தானாக அவிழ்த்துக் கொள்ள முடியாத கட்டுகள் என்று. உடனேயே புரிந்தது,!

அவளுக்கு அறிமுகமே இல்லாத சில மனிதர்கள். அந்த அறையில் அவரவர் வசதிக்கு ஏற்ப நின்றுகொண்டோ. உட்கார்ந்தோ இருந்தார்கள்,!

நளினிக்கு விழுந்த அடி வலுவானது அல்ல,!

மன வலிமையும். உடல் ஆரோக்கியமும் உள்ளவள் என்பதால். நளினிக்கும் விரைவிலேயே மயக்கம்தெளியத் தொடங்கிவிட்டது,!

சில மணி நேரத்தில். தானாகவேதெளிந்து விடக் கூடிய அளவிலேயே. அந்தக் கடத்தல்காரன். அவனது வலுவைப் பயன்படுத்தியிருந்தான் என்பது அவளுக்குப் புரிந்தது,!

அதனாலேயே. அவன் இந்தப் போர்க்கலையில் எவ்வளவு வல்லவன் என்பதும் புரிய. அவள் மனம் சோர்ந்தது,!

இதைத்தானே. புவனனும் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொன்னான்,!அப்போது அதை. அசட்டுத்தனம் என்று எண்ணியதை நினைத்து. இப்போது மனம் வேதனைப் பட்டது,!

ஆனால். அதற்காக வருத்தப்பட்டுக் கொண்டிருப்பதும்

அசட்டுத்தனம்தான், இப்போது என்ன செய்வது என்று யோசிப்பதில் மூளையைப் பயன்படுத்தினால். கொஞ்சமேனும் பலன் இருக்கக் கூடும் என்று யோசிக்கத் தொடங்கினாள் நளினி,!

எதிரிக்கு முழுப் பலத்தைக் காட்டுவது முட்டாள்த்தனம், அதிலும். மயங்கித்தெளிந்து. இப்போதிருக்கும் பலவீனமான நிலையில். உறுப்புகள் வசப்படும் வரையிலேனும். வாயை மூடிக்கொண்டிருப்பதே நல்லது,!

எனவே. அவள் உடனே கண்ணைத் திறந்து பார்த்துவிடவில்லை,! கண் மூடிய அதே நிலையில் இருந்தவாறே. காதுகளைப் பயன்படுத்திச் சுற்றுப்புறத்தை ஆராயத் தொடங்கினாள்,

இந்தக் கடத்தல் எந்த அளவுக்குப் பலனளிக்கும் என்பது பற்றித்தான் அங்கிருந்தவர்கள்  பேசிக் கொண்டிருந்தார்கள்,!

நிச்சயமான முழுப் பலன் கிடைக்கும் என்பது பெரும்பான்மை அபிப்பிராயமாக இருந்தது,!

ஆனாலும். “  ............. , இவள் வெறும் காதலிதானே? எத்தனையோ பேரில் ஒருத்தியாகக் கூட இருக்கலாம்,!இவளுக்காக. அவன். நாம் கேட்கிற பிணையைக் கொடுப்பானோ. என்னவோ. எனக்குச் சந்தேகமாகத்தான் இருக்கிறது,!” என்று. ஒரு குரல் சந்தேகமும் பட்டது,!

காதலிதானே என்று. சற்று இளப்பமாகப் பேசியது. தன்னையா? அதுவும். எத்தனையோ பேரில் ஒருத்தியாமே,!

புவனேந்திரன் அப்படிப் பட்டவன் அல்ல என்று கத்த வேண்டும் போல. அவளுக்கு ஆத்திரம் வந்தது,!

ஆனால். அவளது வேஷம் கலைந்து போகுமே,!ஏமாற்றினாயா என்று ஆத்திரத்தில். என்னவேனும் சித்திரவதை செய்தால்?

சிரமப்பட்டு. எந்தவித மாற்றமும் இல்லாமல் முகத்தை வைத்துக்கொண்டு நளினி இருக்க. நல்ல வேளையாக. அவர்களில் ஒருவனே. முன்னவனை மறுத்துப் பேசினான்,

“சே. புவனேந்திரன் அப்படிப் பட்ட ஆள் இல்லையடா,!ஐந்து ஆண்டுகளாகப் பெண் வாசனையே இல்லாமல் இருந்திருக்கிறான்,! அதனால்தான். இவளை வைத்து அவனைப் பிடிக்கும் ஐடியா

வந்ததே,!சரியான குரங்குப் பயல்,!பெண்டாட்டி செத்தால் புது மாப்பிள்ளை என்று இன்னொருத்தியை மணந்துகொண்டு. சும்மா இருப்பதுதானே,!அதை விட்டு. நொட்டு. நொசுக்கு என்று கண்டதையும் நோண்டிக்கொண்டு,!அந்த முட்டாளுக்கு. உயிரை விடுவதற்கு வேறு வழியா கிடைக்கவில்லை?"

உயிரை விடுவதா? யாருடைய உயிர்? புவனேந்திரனின் உயிரா? கடவுளே,!

அதற்கு மேல் சும்மா இருக்க முடியாமல். நளினியின் முகம் மாறிவிட்டது,!

அவளைக் கவனித்திருந்த யாரோ. "ஷ; ...............மயக்கம்தெளிகிறது,!" எனவும். இனி நடிப்பில் பலனில்லை என்று உணர்ந்து. அப்போதுதான் மயக்கம்தெளிகிறவள் போன்ற பாவனையுடன். முக்கலும் முனகலுமாக நளினி மெல்லக் கண்ணைத் திறந்தாள்,

போடுகிற வேஷத்தை ஒழுங்காகப் போட வேண்டும் அல்லவா?

கண்ணைத் திறந்தவள். கண் முன்னே காண்பதை நம்ப முடியாதவள் போலக் கண்ணைக் கசக்கிக்கொள்ளக் கையை உயர்த்த முயற்சித்து. அப்போதுதான் கைகள் கட்டப்பட்டிருப்பதை

உணர்ந்தாற்போல. மேலும் முகத்தில் திகைப்பைக் காட்டினாள்,

திகைப்பும் பயமுமாக. "ஐயோ,!நீங்களெல்லாம் யார்? என்னை என்னை ஏன் இங்கே கடவுளே,!என்னை ஒன்றும் பண்ணி விடாதீர்கள்,!ப்ளீஸ்,!" என்று பதறினாள்,

தன்னை என்ன செய்யப் போகிறார்களோ என்பதோடு. புவனேந்திரனின் உயிரைப் பற்றிய அச்சமும் உள்ளே நிஜமாகவே மிக அதிகமாக இருந்ததால். அவளது கலக்கம் பெருமளவு உண்மையாகவே இருந்தது,!பார்த்தவர்களுக்கும். அப்படியே தோன்றிற்று,!

அவர்கள் நாலு பேர் இருந்தனர், அவர்களுள் தலைவன் போலத் தோன்றியவனை மற்ற மூவரும் பார்க்க. அவன் பேசினான்,

"பாரம்மா. உனக்கும் எங்களுக்கும் இடையே ஒன்றுமே இல்லை,! ........................................................................................................."

அவனது பேச்சில் குறுக்கிட்டு. "பி , பின்னே என்னை ஏன்

இப்படி
 இப்படிக் கடத்தி வந்திருக்கிறீர்கள்? “ என்று. பாதி பயமும். பாதி நடிப்புமாகக் கேட்டாள் நளினி,

தன் விதியைக் காட்டிலும். புவனேந்திரனுக்கு என்ன ஆபத்து காத்திருக்கிறதோ என்பதை அறிந்துகொள்ளும் துடிப்பு அவளுக்கு,!

“பாஸ் பேசும்போது. யாரும் குறுக்கே பேசக் கூடாது,!” என்று அதட்டியவனின் குரலில் நளினி திகைத்து நோக்கினாள்,

அவளிடம் வழி கேட்டவனின் குரல்,!

இப்போது. அவனது குறுந்தாடி காணாமல் போயிருந்தது,! பதிலாகப் பெரிய மீசை முளைத்திருந்தது,!

எவ்வளவு இலகுவாக வேஷம் மாறுகிறார்கள்,!அவளைக் கடத்தும்போது யாரேனும் பார்த்திருந்தால்கூட. இப்போது அவனை அடையாளம் கண்டு. பின் தொடர்ந்து. அவளைக் கண்டுபிடிப்பது கடினம்,!

அவனது கண்களும் சந்தேகத்தில் இடுங்க. “என்ன பார்க்கிறாய்? “ என்று வினவினான்,

தன் மூளைத் திறனைப் பற்றி. அவர்கள் மட்டமாக நினைப்பதே நல்லது என்று நளினிக்குத் தோன்றவும். “ஒஒன்றுமில்லை ..................... உங்களில் யா யார் பாபாஸ் என்று எனக்குத் தெரி தெ தெரியவே தெரியாது,!அதனால்தான் ...........அஅது. நீங்களா. அவரா? யார் பேசும்போது. நான் குறுக்கே பேசக் கூடாது?” என்று குரல் நடுங்க விசாரித்தாள்,

அவனது பார்வையில் இருந்த ஐயம் மறைய. “அவர்தான்,!” என்று முதலில் பேசியவனைச் சுட்டிக் காட்டிவிட்டு. ஜன்னல் வழியே வெளியே பார்த்தான் புது மீசைக்காரன்,

சும்மாப் பார்க்கவில்லை,. சுற்றிலும் அவனது பார்வை கவனத்துடன் ஆராய்ந்தது,!

இவ்வளவு எச்சரிக்கையுடன் இருக்கும் இவர்களிடம் இருந்து எப்படித் தப்புவது?

மனம் சோர்வுறக் கவலையுடன் தலைவனைப் பார்த்தாள் நளினி,

“குறுக்கிடாமல் கவனி. பெண்ணே, நான் சொன்னது போல.

உனக்கும் எங்களுக்கும் இடையே. நல்லது கெட்டது ஒன்றும் கிடையாது,!இப்போதைக்கு. நளினி எங்களுக்கு ஒரு கருவி, அவ்வளவுதான்,!ஆனால். அந்தப் புவனேந்திரன் விஷயம் வேறு,! அவன் எங்களை நாயாகத் துரத்துகிறான்,!அதுவும் வேட்டை நாயாக,!அவனால். எட்டுப் பேராக இருந்த நாங்கள் நாலு பேரை இழந்துவிட்டோம்,!எப்பேர்ப்பட்ட நாலு உயிர்களைக் கொன்றுவிட்டான். தெரியுமா? அவர்கள் வீராதி வீரர்கள்,! ......”

அந்த வீராதி வீரர்களை மரியாதையோடு நினைவு கூர்பவன் போல. சில வினாடிகள் பேச்சை நிறுத்தினான் அவன்,!

நளினியின் மனம் படபடப்புடன். படு வேகமாகவும் வேலை செய்தது,!

புவனேந்திரனின் கடத்தல் பயமும். காவலும். இவர்களுக்குப் பயந்துதானா? திடீர்த் திடீரென அவன் காணாமல் போனது. இவர்களை வேட்டை நாயாக விரட்டத்தானா?

ஆனால். இவன் சொல்;வது போல. நாலு பேரை அவன் கொன்றிருக்க முடியுமா?

ஊகூம் இருக்காது,!

கொலை செய்வது சாதாரண விஷயம் அல்ல,!அதற்குக் கடினமான மனமும். கூடவே ஒரு குரூரமும் வேண்டும்,!புவனனிடம் பிடிவாதம் உண்டே தவிரக் கடினமோ. முக்கியமாகக் குரூரமோ கிடையவே கிடையாது,!

அத்தோடு. அவன் எதற்காக. இவர்களைத் துரத்த வேண்டும்?

எல்லாம் பொய்,!

ஆனால். அவனது பாதுகாப்புப் பைத்தியம் ?

இல்லை, அது வேறு விஷயம், அது ரதிக்காக. அவளதுது மரணத்துக்காக,!மற்றபடி. இவர்கள் கொலை கிலை என்கிறார்களே. அதற்கும். அவனுக்கும் சம்பந்தம் இராது,!

எது. எப்படியானாலும். புவனன் யாரையும் கொன்றிருக்க முடியாது,! அது நிச்சயமாகச் சாத்தியம் அல்ல,!இவர்கள். ஏதோ தவறாக எண்ணி. அவனை விரட்டுகிறார்கள், உண்மை தெரிந்தால். இந்த விரட்டல். கடத்தல். கோபம். பயம் எல்லாமே ஒன்றும் இல்லாமல்

போய்விடக் கூடும்,!

நிச்சயமாகப் போய்விடும்,!

மனம் நினைத்ததையே. அவள் வாய்விட்டும் சொன்னாள், “பாருங்கள். நீங்கள் ஏதோ தவறாக எண்ணிக்கொண்டு.
புவ
புவனேந்திரனைக் கொலைகாரர் என்கிறீர்கள், அவர் அப்படிப் பட்டவர் அல்ல,!ரொம்ப நல்லவர், ஒரு காக்காய். குருவிக்குக் கூடக் கெடுதல் நினைக்காத உத்தமர். அவர்,!” என்றாள் அழுத்தமான குரலில்,

அவளைக் கடத்தி வந்த நால்வரும். ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொள்வது போல. மற்றவர்களைப் பார்த்துப் புன்னகை செய்த விதத்தில். ஏதோ தப்பாக டூ அவர்களுக்குச் சாதகமாக ஏதோ சொல்லிவிட்டோம் என்று நளினி உணர்ந்தாள்,

என்ன அது?

“பரவாயில்லையே,!அவனைப் பற்றி. நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறாயே,!ரொம் பவே,!“ என்று தலைவன் சொல்ல. மற்ற மூவரும் நகைத்தனர்,!

குரூரம் கலந்த சிரிப்பு,!
சற்று முன் அவள் நினைத்தது போலக் குருரம் கலந்த கொலைகாரச் சிரிப்பு,!

ஆனால். இப்போது ஏன் சிரிக்க வேண்டும்? உடனடியான கொலை எண்ணம் இருப்பதாகவும் தெரியவில்லை,!பின்னே?

அவள் சொன்னது பொய் என்கிறார்களா? அப்படியும் தோன்றவில்லையே,!

ஒன்றும் புரியாமல். “ஏஏன் சிரிக்கிறீர்கள்? நான் சொன்னதில் என்ன தப்பு?” என்று திகைப்புடன் கேட்டாள் அவள்,

மறுபடியும் சிரித்துவிட்டு. “நாங்கள் சிரித்தது. அவனைப் பற்றி. இவ்வளவு நன்றாகத் தெரிந்து வைத்திருக்கும் உன்னால். எங்கள் வேலை இலகுவாக முடியும்போலத் தெரிகிறதே என்ற மகிழ்ச்சியில்,! ஏனெனில். நீ மிகச் சரியாகச் சொன்னபடி. அவன் நேரடியாக யாரையும் கொல்லவில்லை,!ஆனால். சாவது தவிர. வேறு வழியில்லாதபடிச் செய்தான் அவ்வளவே,!அப்புறம் என்ன கேட்டாய்

? நீ சொன்னதில் தப்பென்ன என்றா? தப்பே கிடையாதும்மா,!அந்தப் புவனேந்திரன். ஒரு காக்காய் குருவி என்ன. ஒரு சின்ன ஈ. எறும்பாகவே இருக்கட்டுமே. அவற்றுக்கு ஒரு சின்னக் கெடுதல் செய்வது பற்றியும் கூட. நினைத்தே பார்க்க மாட்டான்,!நீ சொன்னது சத்திய வாக்கு,!ஏனென்றால். காக்காய். குருவி. ஈ. எறும்பையெல்லாம் கொன்று. மனைவி செத்ததற்குப் பழி வாங்க முடியுமா. என்ன?" என்று கேட்டுவிட்டு. அவன் அவுட்டுச் சிரிப்பு சிரிக்க. மற்றவர்களும் அதில் கலந்து கொண்டனர்,!

ரதி,!

அவள் இறந்ததற்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இராது என்று எண்ணினாளே,!இருந்திருக்கிறது,!

இவர்கள். ரதியைக் கொன்ற கொலைகாரர்கள்,!

கடன் பாக்கி இருக்கிறது என்றானே. புவனன்,!

அந்தக் கடன். மனைவியைக் கொன்ற இவர்களைப் பிடிப்பதுதான் போலும்,! ................இவர்களே சொன்னது போல வேட்டை நாயாக விரட்டியிருக்க வேண்டும்,!

அதை. நியாயம் இல்லை என்று. யாரால் சொல்ல முடியும்? இந்த நால்வரையும் சேர்த்துக் கொன்றால்கூடத் தப்பில்லைதான்,!

ஆனால். பாதிக் கிணறு தாண்டியவன் கதையாகப் பாதி ஜெயித்தவனின் தோல்விக்கு. அவள் அல்லவா வழி வகுத்துக் கொடுத்துவிட்டாள்,!

அவனது நல்லியல்புகளைப் பற்றி அவள் எடுத்துச் சொன்ன விதத்தில். அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள அன்பு பற்றி. இவர்களுக்கு நன்குதெளிவாகிவிட்டது,!

அதைப் பற்றித்தான். அவர்கள் நால்வரும். அவ்வளவு சந்தோஷப்பட்டிருக்கிறார்கள்,!

புவனனின் அன்புக்குரியவளாக இருந்த ரதியைக் கடத்திச் சென்று. அவளை வைத்து மிரட்டி. அவனிடம் இருந்து பணத்தைப் பறித்தது போல. இப்போதும். அவனுடைய அன்புக்குரிய அவளைக் கடத்தி வந்து. மிரட்டி. அவனது உயிரைப் பறிக்கப் போகிறார்கள்,!

ஏனெனில். பிரிந்தே போனாலும். அந்தப் பிரிவிற்கான அடிப்படைக்

காரணம். அவள் மீது. அவன் கொண்டிருந்த அளவிலாத அன்புதானே?

அந்த அன்பு. அவனது உயிருக்கே. உலை வைத்துவிடும் போல இருக்கிறதே?

நளினிக்குக் கண்ணை இருட்டிக்கொண்டு மயக்கம் வந்தது,!

# அத்தியாயம் -15

கெட்டிக்காரி என்று. நளினிக்குத் தன்னைப் பற்றி. ஓர் அபிப்பிராயம் உண்டு,!

அது. தலைக்கனத்தினால். தானாக வந்தது அல்ல,!

பள்ளியில். கல்லூரியில் படிக்கும்போது ஆசிரியப் பெரு மக்களாலும். நறுவிசாக

வீட்டிலும் வெளியிலும் செய்வன திருந்தச் செய்வது பார்த்து உற்றார் உறவினராலும். ஊட்டி வளர்க்கப் பட்ட அபிப்பிராயம் அது,!

புவனேந்திரனிடம். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியும் என்று. அவள் தன்னம்பிக்கையோடு சொன்னதன் அடிப்படையும் அதுதான்,!

ஆனால். “நுணலும் தன் வாயால் கெடும்” என்பதைத் தன் மடத்தனத்தால். அவள் மூன்றாவது முறையாக நிரூபித்திருக்கிறாள்,!

ஆனால். இதற்கு முன் நடந்தது போல. அவளது வேலையோ. சந்தோஷ வாழ்வோ பறி போனால்கூடப் பரவாயில்லையே,!

அவளது சொந்த உயிர்கூட. இப்போது பெரிதாகத் தோன்றவில்லை,!

ஆனால். தான் சிக்கி. அதன் மூலமாய். புவனேந்திரனையும் அல்லவோ மாட்டி வைத்துவிட்டாள்,!

அவளது உயிரேயாகிவிட்ட புவனனை,!

அப்போதைய சிக்கலில். எப்படி. என்ன செய்து அவனைக் காப்பது என்று. நளினிக்கு ஒன்றுமே புரியவில்லை,!

அவளை நாற்காலியோடு சேர்த்துக் கட்டி வைத்திருந்த

இடத்திலிருந்துசுற்றுமுற்றும் தலையும் கழுத்தும் வலிக்க வலிக்க எவ்வளவு வளைத்துத் திருப்பிப் பார்த்தாலும். செடி கொடிகளும் மரங்களும்தான் தெரிந்தன,

ஏதோ காட்டுக்குள். ஒரு பாழடைந்த சிறு வீடு,!

சுற்றிலும். கண்ணுக் கெட்டிய தூரம் வரை. ஆள் நடமாட்டமே தெரியவில்லை,!

இப்படிப்பட்ட இடங்கள். இவர்களுக்கென்று எப்படித்தான் கிடைக்கின்றனவோ,!

இப்போது. இவர்களின் திட்டம் என்னவாக இருக்கக் கூடும் என்று. அவளால் ஊகிக்க முடிந்தது,!

அவளை ஏதாவது செய்துவிடுவோம் என்று மிரட்டி. புவனேந்திரனிடம் முதலில் பணம் பிடுங்குவார்கள், அப்புறம். ஏதாவது சாக்கிட்டு. அவனை வரவழைத்து. இருவரையும் கொன்றுவிடப் போகிறார்கள்,!

அவளுக்கு என்ன ஆனாலும் ஆகட்டும் என்று. புவனன் வராமல் இருந்தால் நல்லது,!

கடவுளிடம் அதை வேண்டிக் கொள்வது தவிர. அவளால் ஆகக் கூடியது ஒன்றும் இல்லை,!

அவளைக் கடத்தி வந்தவர்கள். அவளது கை.கால் கட்டுகளைச் சரி பார்த்துவிட்டு. வெளியே நின்று ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்,

பேச்சென்ன? புவனனின் பணத்தை. உயிரை. எவ்வளவு. எப்படி உறிஞ்சுவது என்று திட்டமிடுவார்கள்,!

சற்றும். மனிதத் தன்மையே இல்லாத இந்த அரக்கர்கள். மற்றபடி மகாத்மா காந்தியைப் பற்றியும். அகிம்சையைப் பற்றியுமா பேசிவிடப் போகிறார்கள்? உழைத்துப் பிழைப்பதற்கு என்ன வந்தது? பாவிகள்,!

பதினெட்டு வயது சின்னப் பெண்,!மணமாகிப் பத்தே நாட்களில் கடத்திக் கொல்வதற்கு. இவர்கள் மனதில். என்ன குரூரம் இருக்க வேண்டும்,!

இருந்திருந்து. இவர்களிடம் வந்து மாட்டிக்

கொண்டிருக்கிறாளே,!

பேச்சு முடிந்துவிட்டது போல. நால்வரும் உள்ளே வந்தனர்,

பசிக்கிறதா?. தண்ணீர் வேண்டுமா என்று சாதாரண மனிதர்களைப் போல. அவளிடம் வினவினார்கள்,

படங்களில் வருகிற மாதிரித் தண்ணீரை வாயருகே கொண்டு வந்து. பருகப் போகிற நேரம் பறித்துக் கொடுமை செய்வார்களோ என்று தவிப்பாக இருந்த போதும். தொண்டை காய்ந்து வறண்டு போயிருந்ததால். “தண்ணீர் ,” என்று சுருக்கமாகக் கேட்டாள் நளினி,

“குடி,!” என்று ஒரு புதிய தண்ணீர் பாட்டிலின் மூடிவைத் திறந்து. அவள் கையில் கொடுத்தான். அவர்களுள் ஒருவன்,

சந்தேகமாகப் பார்த்தபடி. அவள் அதை அருந்தவும். “வேறு வழியின்றி உன்னைக் கடத்த நேர்ந்தாலும். நாங்கள் ஒன்றும். ஈவு. இரக்கம் இல்லாதவர்கள் அல்லம்மா,!நீ. அனாவசியமாகத் தாகத்தால் தவிப்பதில். எங்களுக்கு என்ன லாபம் சொல்லு,!” என்றான் தலைவன். நயமான குரலில்,

அதாவது. லாபம் இருக்குமானால். உன்னைத் தாகத்தால் தவிக்கவிடத் தயார் என்று. சொல்லாமல் சொல்லுகிறானா?

பதினெட்டு வயதுப் பச்சை மண்ணைக் கொன்றிருக்கிறார்கள்,! இவர்களுக்கு ஈவாவது. இரக்கமாவது?

எல்லாம் பொய்,!

இந்த அரக்கர்களைப் பற்றி நன்கு அறிந்திருந்ததால்தான். புவனேந்திரன். அவளது பாதுகாப்புக்காக. அவளிடமே அவ்வளவு போராடியிருக்கிறான்,!

தங்கள் திருமணத்தைப் புவனேந்திரன் நிறுத்தியதன் காரணம் முன்னெப்போதையும் விட. நளினிக்கு. இப்போது மிக நன்றாகப் புரிந்தது,!பாவம்,!அவள் மீது வைத்திருக்கும் அளவற்ற அன்பினால் அல்லவோ. பிரிந்தேனும் அவளைக் காப்பாற்ற முயன்றிருக்கிறான்,!

ஆனால். அவனது அந்த முயற்சி. காலம் கடந்து. இப்போது புரிந்து. என்ன பயன்?

ஆனால் ...............................................................முடிந்தால்

, ,

தெளிவான ஊகம் இருந்தபோதும். "என்னை எதற்காகக் கடத்தி வந்திருக்கிறீர்கள்?" என்று அந்தத் தலைவனிடம் நேரடியாகக் கேட்டாள் நளினி,

"சொல்லுகிறேன்,!சொல்லுகிறேன்,!அதைச் சொன்னால்தானே உனக்கும் புரியும்,!" என்று தொடங்கினான் அந்தக் குழுவின் தலைவன்,

உயர்ந்த சில நோக்கங்களுக்காக அமைக்கப்பட்ட ஒரு குழுவினர் அவர்கள், சில கொடிய மனிதர்களைப் பிடித்து வந்து. அவர்களிடம் பணம் பிடுங்குவது,! அதை. ஏழைகளின் தேவைக்குக் கொடுப்பது,!

புவனேந்திரன் கொடிய மனிதன் அல்ல,. மிகமிக நல்லவன் என்பது. நளினியின் தொண்டை வரை வந்து அடங்கியது,!

ஒரு தரம் தவளையாக வாயை விட்டது போதும்,!அதே கருத்தை மேலும் வலியிறுத்துவது. மன்னிக்க முடியாத மடத்தனம்,!

எனவே. வேறுவிதமாக மடக்கினாள், "நீங்கள் எட்டே பேருக்குப் பெரிய குழு என்று பெயரா? எட்டுப் பேர் இருந்து என்ன சாதிக்க முடியும்?" என்றாள் நம்பாத குரலில்,

மற்றவர்கள் கோபமாக முறைத்தபோதும். குழுத் தலைவன் தலையாட்டி. "நீ சொல்வது சரிதான்,!" என்று ஒத்துக் கொண்டான், "நாங்கள் எட்டுப் பேருமே. ஒரு பெரிய குழுவின் சிறு பிரிவுதான், இப்படி ஒவ்வொரு பிரிவிடமும். ஒவ்வொரு வேலை ஒப்படைக்கப் படும்,!அந்த வேலையைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவது. அந்தந்தக் குழுவினரின் பொறுப்பு, அதற்குள். எப்படியாவது தப்பிச் சென்று. எங்கள் ஆணி வேரையே எப்படிப் பிடுங்குவது என்று திட்டம் போடாதே,!அது முடிகிற காரியம் இல்ல,!ஏனெனில். எங்களுக்கு அடுத்த படியில் இருப்பவர்களிடம்கூட. எங்களுக்கு நேரடித் தொடர்பு கிடையாது,!ஒப்படைக்கப்பட்ட வேலையில் தவறு நேர்ந்தால். அதை வைத்துக்கொண்டு. மேலிடம் வரை போய்விடக் கூடாது அல்லவா? எனவே. தவறின் விளைவையும். நாங்களேதான் அனுபவிக்க வேண்டும்,!இடையூறுகளை விலக்கி. நிலைமையைச் சீர்ப் படுத்துவதும். எங்கள் பொறுப்பே,!இப்படித்தான். புவனேந்திரன் மனைவியை. எங்கள் வழியிலிருந்து அகற்ற நேர்ந்தது,!" என்றான்

அவன்,

இடையூறுகளை விலக்குவதா? வழியிலிருந்து அகற்றுவதா? தன்னைப் போல ஒரு மனித உயிரை அழிப்பது பற்றி. எவ்வளவு இலகுவாகப் பேசுகிறான்?

புவனனி;டம் இருந்து பணம் பிடுங்குவதற்காக ரதியைக் கடத்திச் சென்று. பணத்தையும் பறித்ததோடின்றி அவளையும் கொன்றுவிட்டு. பாவி. அதையும் என்னமாகச் சொல்லுகிறான்,!மனிதத் தன்மை. மனித நேயம் எதுவுமே இல்லாமல். மனித உருவில் இப்படி ஒரு மிருகம்,!

பிணக் கிடங்கில் ரதியைப் பார்த்தது பற்றிப் புவனன் தவிப்புடன் கூறியது நினைவு வர. "வெளி உலகம் அறியாமல் ஆசிரமத்தில் வளர்ந்த சின்னப் பெண்,. மணமாகிப் பத்தே நாட்களுக்குள். உங்கள் மாபெரும் பணிக்கு. அவள் எப்படி இடையூறாக இருக்க முடியும்? எனக்குப் புரியவில்லையே,!" என்றாள் அவள்;, சற்றே ஏளனமாக,!

"உனக்குப் புரிந்தாலும். புரியாவிட்டாலும். அதைப்பற்றி யாருக்கும். எதுவும் இல்லை,!" என்று உதாசீனமாகப் பேசிய ஒருவனைக் கையுயர்த்தி அடக்கினான் தலைவன்,

"ச்சு,!சும்மா இருப்பா,!இந்தப் பெண் கொஞ்சம் நல்ல விதமாக. சொன்னால் புரிந்து கொள்கிற விதமாகத் தெரிகிறது,!கண்ணில் நேர்மையும் தெரிகிறது,!எனவே. எடுத்துச் சொன்னால் புரிந்துகொண்டு. நமக்கு உதவியே செய்யக் கூடும்,!அதனால். இவளிடம் சொல்வதில் ஒரு தப்பும் நடக்காது,!எப்படியும். இவள் நிச்சயமாக. நம்மைக் காட்டிக் கொடுக்கவே மாட்டாள்,!" என்று தன் தோழர்களை ஒரு பார்வை பார்த்தான்,

அந்தப் பார்வையில். மற்ற மூவரும் சட்டெனப் பணிந்துபோன விதம். நளினிக்கு வியப்பூட்டிற்று,!

இவ்வளவு கட்டுப்பாட்டுடன் இருக்கிறார்களே என்று வியக்கும்போதே. உள்ளுர ஏதோ நெருடியது,

தலைவனுக்குப் பணிவதில் இவ்வளவு கட்டுப்பாடா. அல்லது. அந்தப் பார்வையில். வேறேதும் சேதி இருந்ததா?

இருந்தது,. இருந்தது,!விரிந்த விழிகள். ஒரு கணம் நின்று

திரும்பினவே,!

அவளுக்குத் தெரிவிப்பதில் தயக்கம் தேவையில்லை என்ற சேதியா? அப்படியானால். தெரிந்ததை வெளியே சொல்லும் வாய்ப்பு அவளுக்கு இருக்கப் போவது இல்லை என்றானா?

அத்தோடு. அவர்களைக் காட்டிக் கொடுப்பது பற்றி. அவளுக்கே இல்லாத நிச்சயம். இவனுக்கு எங்கிருந்து வந்தது,? அவளால் இயலாது என்றுதானே. தன் கூட்டாளிகளுக்குச் சொல்லாமல் சொல்லியிருக்கிறான்,!

முதுகுத் தண்டில் சிலீரென்றது நளினிக்கு,!

அதாவது. ரதியைப் போலவே. அவளையும் கொன்றுவிடப் போகிறார்கள்,!

புவனனைப் பார்த்து. வருத்தம் தெரிவிக்கும் முன்னரா? அவனைப் பாராமலேயா. சாவது?

நெஞ்சுக்குள் ரயில் தடதடப்பதைக் குரல் காட்டிக் கொடுத்துவிடுமோ என்ற அச்சத்தில். இறுகி. நளினி வாய் திறவாது. வெறுமனே அவனது பேச்சைக் கவனிக்கும் பாவனையில் பார்த்துக் கொண்டிருக்க. அவன் தொடர்ந்தான்,

“அகமதாபாதில். ஒரு தரகன்,!திருட்டுப் பயல்,!எல்லாவகைத் தரகும் செய்வான், பெண்கள் உட்பட,!அவனைப் பணத்தைப் பிடுங்கிக்கொண்டு கொன்றோம்,!அந்த முட்டாள்ப் பெண். அப்போது பார்த்து. அந்த வழியே போய் தொலைந்திருக்கிறாள்,!எங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டாமா? இத்தனைக்கும். அவளுக்கு எந்த அளவுக்குத் தெரியும் என்று கண்டறிய மட்டும்தான். அவளை முதலில் கடத்தி வந்தது,!ஆனால். அவள் உளறிக் கொட்டியதில்தான். அவளுடைய கணவனிடம் இருந்து பெரும் தொகை கறக்க முடியும் என்று தெரிந்தது,!எங்களைப் போன்றவர்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும். யோசித்துப் பார்,!ஒழுங்காக ஒரு வேலை செய்து சம்பாதிக்க முடியாத. ஒளிவு மறைவு வாழ்க்கை,!அந்த ஒளிவு மறைவுக்கே செலவோ அதிகம்,!அதனால். புவனேந்திரனிடம் பணம் கேட்டோம்,!ஆனால். அதற்குள். அவளைத் தப்பாகத் தொடப் போகிறோம் என்று அந்தப் பெண் நினைத்தாள் போல,!காட்டுப் பூனை மாதிரிக் கத்திக் கூச்சலிட்டு. அலறி. அடித்துக் கடித்துப்

பிறாண்டி அவள் செய்த ஆர்ப்பாட்டத்தினால். வேறு வழியின்றிக் கொல்ல நேர்ந்தது,! ...அ அதுகூடத் தற்செயலாக நடந்ததுதான்,! மற்றபடி. அவளைப் பலமாக எச்சரித்துத் திருப்பி அனுப்புவதாகத்தான் இருந்தோம்,!" என்றான் கூட்டத் தலைவன். நல்லவனைப் போல,!

இது பொய் என்று நளினி உடனே கணித்தாள்,

அவனது கதையின் முதல் பகுதி உண்மையாக இருக்கக் கூடும்,! ஆனால். ரதியை வேறு வழியின்றிக் கொன்றதாகச் சொன்னதில் இருந்து. எல்லாமே தலைவனின் கற்பனை என்பதை. கூட இருந்த மற்றவர்களின் முகங்கள் காட்டிக் கொடுத்தன,!

சிறு திகைப்பும். அதையடுத்து. அந்தத் திகைப்பை ஈடுகட்டுவது போலச் சற்று அதிகப்படியான தலையாட்டலும். அவை போன்ற தன்னையறியாத சிறுசிறு மாறுதல்களுக்காகக் கூர்மையுடன் கவனித்துக் கொண்டிருந்த நளினியின் கண்களில்தெளிவாகத் தென்பட்டன,!

இது பொய் என்றால். இந்தப் பொய்யை அவன் எதற்காகச் சொன்னான்?

அவளிடம் தங்களை நல்லவர்கள் போலக் காட்டிக் கொள்வதில். இவர்களுக்கு என்ன லாபம்?

அவள் என்னவோ. அவர்கள் பிடியில் சிக்கியாயிற்று,!இனிப் பழைய மாதிரி. புவனனுக்கு ஃபோன் செய்து. இத்தனை லட்சம்,. இங்கே கொண்டு வா என்று பணத்துக்காக மிரட்ட வேண்டியதுதானே?

அதுதானே. இவர்களது செயல்முறையாக. இது வரை இருந்திருக்கும்? இருந்திருக்கிறது,!

இப்போது மட்டும் ஏன் மாறுபாடு ?

ஒரு வேளை. அவளும் புவனனும் பிரிந்திருப்பதால். பணம் தருவானோ. மாட்டானோ என்ற சந்தேகமா?

ஆனால். அதையும்தான் . அவளே கெடுத்து வைத்திருந்தாளே,!

பின் என்ன?

# அத்தியாயம் -16

என்ன என்பதை. அந்த வன்முறைக் குழுவுடைய தலைவனே சொன்னான்,

இப்போது. அவர்களுக்குப் பணம் வேண்டாமாம்,!பதிலாக. அந்தக் குழுவினரின் பின்னணி பற்றிய உண்மை விவரங்களைத் திரட்டிப் புவனேந்திரன் ஒரு ஃபைல் வைத்திருக்கிறானாம், அது. போலீசுக்குப் போனால். பலருக்குப் பிரச்சினை ஏற்படக் கூடுமாம்,!அந்த ஃபைலை அவன் வேறு யாரிடமும் கொடுத்து அனுப்பி. அது எங்கேயேனும் தவறிவிட்டால் என்ன செய்வது?

அதை. அவனே கொண்டு வந்தால். நளினியைக் காப்பாற்றுவதற்காக. முழுக் கவனத்துடன் கொண்டு வருவான் அல்லவா?

அதனால். அவனுக்கு ஃபோன் செய்து. அந்த ஃபைலை எடுத்துக்கொண்டு நேரில் வருமாறு. அவளே சொன்னால். அவனும் அதன்படி ஃபைலைப் பத்திரமாகக் கொண்டுவந்து தருவான்,!

அப்படிப் புவனேந்திரன் ஃபைலைக் கொணர்ந்து தந்ததும். இருவரையும் ஜோடியாகத் திருப்பி அனுப்பி வைப்பார்களாம்,!

எங்கே அனுப்பி வைப்பார்கள் என்றுதெளிவாகத் தெரிந்திருந்த நளினி. இந்தத் திட்டத்தை எப்படி முறியடிப்பது என்று யோசித்தாள்,

தன்னைப் பொறுத்த வரையில். இந்தக் கொடியவர்களிடம் இருந்து தப்புவது மிகக் கடினம் என்று அவளுக்கு நன்றாகவே புரிந்தது,!

இனிப் பெற்றோரை. தங்கையைச் சந்திப்பது நடக்கக் கூடியது அல்லதான்,

சும்மா என்றால். இதுவே. அவளை இடிய வைத்திருக்கும்,!

ஆனால். ஒரு கோடு. அதைவிடப் பெரிய கோடு ஒன்றுடன் ஒத்திடும்போது சின்னதாகி விடுவது போல. புவனேந்திரனின் உயிருக்கு ஆபத்து என்ற பெரிய துன்பத்தின் முன். தன் வீடு. குடும்பம் போன்ற பிரச்சினைகள். அவளுக்கு ஒன்றுமில்லாததாகத் தோன்றியது,!

ஏனெனில். அவர்களுள் நால்வர் அழியக் காரணமானவனை. அவர்கள் நிச்சயமாக உயிரோடு விடப் போவது இல்லை,!

எனவே. அவளுக்கு என்ன நேர்ந்தாலும். எப்படியும். புவனனைக் காப்பாற்றியாக வேண்டும் என்பது மட்டிலுமே மனதில் நின்றது,!

ஆனால். கைகால் கட்டப்பட்டிருந்த இந்த நிலையில் அவளால் என்ன செய்ய முடியும்?

அவளுக்கு இப்போது உதவிக்கு இருந்தது வாய் மட்டுமே,!

அதைக் கொண்டும். கத்தி அலறிப் பயன் இருப்பதாகத் தெரியவில்லை,!

ஏதேனும் மாய்மாலம் செய்து. கட்டுகளை அவிழ்க்கச் செய்தாலும்கூட. இந்தக் கட்டைத் தடியர்களில். ஒருவர் இருவரை அவளால் தாக்க இயலலாம்,!அதுவும். நால்வரும் சேர்ந்து எதிர்த்தால். அவளால். பத்து நிமிஷம் தாக்குப் பிடிக்க முடியாது,!பத்தென்ன? ஐந்து கூட. அதிசயம்தான்,!

எனவே. அந்த வழி பிரயோஜனம் இல்லை,!

சற்று யோசித்துவிட்டு. “நீங்கள் தப்புக் கணக்குப் போடுகிறீர்கள்,! புவனேந்திரனும் நானும்

காதலித்தது. கடந்த காலத்தில்தான், என்னைப் பிடிக்காமல். எங்கள் திருமண நிச்சயத்தை அவர் முறித்துப் போய்விட்டார், அவர். எனக்காக எதையும் செய்யப் போவது இல்லை,!“ என்றாள் சோகத்தைப் பிழிந்தெடுத்த குரலில்,

“பார்த்தாயா. பார்த்தாயா. எங்களையே ஏமாற்றப் பார்க்கிறாயே,!இப்போதுதானே. அவனை இந்திரன். சந்திரன் என்றாய். அதற்குள். மாற்றிப் பேசுகிறாயே,!” என்றான் தலைவன்,

தவளையாய் வாயை விட்டதை உள்ளுர நொந்தபடி. “இன்றைக்கும். நான் அவரைக் காதலிப்பது உண்மைதான்,! அவருக்குத்தானே. என்னைப் பிடிக்காமல் விலகினார் என்றேன்,!” என்று. அவள் பிடிவாதமாகத் தன் கதையையே தொடர்ந்து உரைத்தாள்,

“அதையும்தான் பார்க்கலாமே,!நாங்கள் சொல்லுகிற மாதிரி. ஃபோனில் சொல்லு,!அவன் வருகிறானா. இல்லையா.

பார்ப்போம்,!”

வருவான்,!வந்தே விடுவான்,!அவளை உயிராய் நேசிக்கும் அவளுடைய அன்பன். அவனது உயிரைக் கொடுத்தேனும். அவளைக் காப்பாற்ற. நிச்சயமாக வந்துவிடுவான்,!

ஆனால். அவனுக்கு இங்கே மரணம் காத்திருக்கிறதே,!

“வரத்தான் செய்வார்,!ஆனால். போலீசோடு வருவார்,! உங்களைப் பிடித்து. ரதியின் மரணத்துக்குப் பழி வாங்க வேண்டாமா?”

காட்டுப் புலிகளாய் ஓரிருவர் உறும. “ஆனால். உன்னைக் கொன்றுவிடுவோமே,!” என்றான் தலைவன்,

தொண்டையில் அடைத்ததைச் சமாளித்துக்கொண்டு. “செய்யுங்கள், இன்னொரு கொலைக்காகச் சேர்த்து. மாட்டுவீர்கள்,! எப்படியும். நீங்கள் மாட்டப் போவது நிச்சயம்தானே?” என்றாள் நளினி. அலட்சியம் போலக் காட்ட முயன்றபடி,!

“ஏ ய்
..................................,!” என்று கையை ஓங்கிக்கொண்டு முன்னே வந்தான் ஒருவன்,!

அந்த அறை விழுந்திருந்தால். அவள் என்ன ஆகியிருப்பாளோ? கழுத்து ஒடிந்திருக்கும்,!அல்லது. குறைந்த பட்சமாகச் செவிப்பறை கிழிந்திருக்கும்,!

ஆனால். “வேண்டாம். பொறு,!“ என்று அவனைத் தடுத்தான் தலைவன்,!“இதையெல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம்,! எனக்கென்னவோ. இவள் இப்போது நடிக்கிறாள் என்றுதான் தோன்றுகிறது,!அந்தப் பயலுக்கு ஃபோன் பண்ணாமல் இருப்பதற்காக. இப்படிக் கதை விடுகிறாள்,!“

“ஆனால். இவள் வீட்டோடு இருந்த காவலர்களை நீக்கியது உண்மைதானே? நாமே பார்த்து அறிந்ததுதானே? அப்புறம்தானே. இவளைப் பின்தொடர்ந்து. நாம் பிடித்து வந்தது?”

சற்றுத் தயங்கி. “உண்மைதான் “ என்று இழுத்தான் தலைவன், “ஆனால். அது. நம்மைப் பிடிப்பதற்காக ஏதாவது தந்திரம் என்பதுதான். என் கருத்து,!அதனால்தான். இவளைக் கடத்துவதில். இவ்வளவு எச்சரிக்கையோடு இருந்தது,!“

“ஒருவேளை.  நாம் அவனைத் தொடர்ந்து சென்னைக்கு வந்து விட்டோம் என்று தெரிந்ததும். தனக்கும். இவளுக்கும் ஒன்றும் இல்லை என்று நமக்குக் காட்டுவதற்காகப் புவனேந்திரன் திருமணத்தை முறித்திருப்பானோ என்று எனக்குச் சந்தேகம்,!” என்றான் இன்னொருவன்,

குழப்பம் ஏற்பட்டுவிட்டது. கொஞ்சம் நிம்மதிதான்,!ஆனால். இந்தக் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் வகை அறியாமல். நளினி திகைத்தாள்,!ஏனெனில். அவர்கள் பேச்சில். அவளுக்குச் சாதகம். பாதகம் இரண்டுமே இருந்தது,!

மதில் மேல் பூனை எந்தப் பக்கம் பாயும் என்று. யார் சொல்லக்கூடும்?

அந்த வில்லன்கள் எல்லோருமாக எந்தப் பக்கம் சாயக்கூடும் என்று தெரியாததோடு. கட்டுப்பட்டுக் கிடந்த அவளது நிலைமை எப்படியும் மிக மோசமாகவே இருந்தது,!

புவனன் மெய்யாகவே அவளைப் பிரிந்துவிட்டான் என்று நம்பினாலும்கூட. அதற்காக அவர்கள். அவளைக் கட்டவிழ்த்து. நல்லபடியாக வீட்டுக்கு அனுப்பிவிடப் போவதில்லை,!அதிலும். அவர்கள் நால்வரின் முகங்களையும்தெளிவாகக் கண்டுவிட்ட அவளது உயிர். எந்த வினாடியும் வானத்தில் பறக்கப் போவது. நிச்சயம்தான்,!

எனவே. மனதுக்குக் கஷ;டமாக இருந்தாலும். இப்போது அதைக் காப்பது பற்றி நினைத்துப் பார்ப்பதுகூட வீண்,!

மன்னிக்க முடியாத நேர விரயம்,!

அந்த நேரத்தில். ஏதாவது செய்து. புவனனைக் காப்பாற்ற முடியுமானால். அதுதான் முக்கியம்,!அவள் பிறந்ததன் பயனே. அப்போது கிட்டிவிடும்,!

மூளையைக் கசக்கி. வேகமாக யோசித்துக் கண்களை மலர்த்தி. “நீங்கள் அப்படியா நினைக்கிறீர்கள்? ஐயோ,!இது தெரியாமல். அன்றிலிருந்து நான் அழுது கரைந்து. என் எடையே நாலு கிலோ குறைந்து போயிற்றே,!இப்படியே சும்மா இருந்தால். வயிற்றுப்பாடு என்ன ஆகும் என்று. வேலைக்காக. எத்தனை படி ஏறி இறங்கினேன். தெரியுமா? பேசாமல் வீட்டோடு கிடந்திருந்தால். உங்களை விரட்டியடித்துப் பிடித்துக் கொடுத்துவிட்டு. என் புவனனே என்னைத்

தேடி வந்திருப்பார் போலத் தெரிகிறதே,!அத்தோடு. நானும்.
உங்களிடம் மாட்டிக்கொண்டு. இப்படிக் கைக்கட்டும்.
கால்கட்டுமாகக் கஷ;டப்பட்டுப் கொண்டிருக்க மாட்டேனே,!
அடடா,!" என்று பெரிதாக வருத்தம் காட்டிப் புலம்பினாள்,

"ஆனால்
" என்று. உடனேயே சந்தேகம் காட்டி. "அப்படிக் கொஞ்சமேனும் அன்பு மிச்சம் இருந்திருந்தால். உங்களைப் பற்றி நன்கு தெரிந்திருந்தும். எனக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை நீக்கியிருப்பாரா? ஊம். இந்தப் பணக்காரப் பசங்கள் எல்லாருமே இப்படித்தான்,!பிடித்துவிட்டால். ஓகோ என்று உருகுவது,!ஒரு வார்த்தையில் வெறுத்து. அப்படியே கை கழுவி விடுவது,!அதுவே.
அவர் விட்டுப் போனதே. எனக்குப் பெரும் வேதனை,!அதற்கு மேல். விஷயம் புரியாத உங்களைப் போன்றவர்கள் பண்ணும் அனியாயம் வேறு,!" என்று விசும்பினாள் அவள்,!

உள்ஞ்ர இருந்த பயமும். கலக்கமும் சேர்ந்துகொள்ளக் கண்களை அழுந்த மூடித் திறந்து. கொஞ்சம் கண்ணீரையும் கொண்டுவர முடிந்ததால். இந்த நால்வரும் நம்பும்படியாக நடித்து விட்டதாகத்தான் நளினி நினைத்தாள்,!

தொடர்ந்த சில வினாடி நேர அமைதியில். அந்த
வன்முறையாளர்களின் ஆராய்ச்சிப் பார்வையைத் தாங்கவும் அவளால் முடிந்தது,!

"இவள் சொல்லுவதுதான் நிஜமாயிருக்குமோ. பாஸ்? " என்று ஒருவன் கேட்க. "அவளை அவிழ்த்துவிடு," என்று தலைவன் சொல்லவும். வியப்பும் மகிழ்ச்சியுமாக. அவள் மனம் துள்ளிக் குதித்தது,!

"பாஸ். இவள் சொன்னது பொய்யாக இருந்தால்?" ன்று கேட்டவாறே. தயக்கத்துடன் அவர்களுள் இன்னொருவன் அவளை நெருங்கினான்,

அவளைக் கொண்டு வந்த புது மீசைக்காரன். அவன் என்பதைக் கண்ட நளினிக்குக் கொஞ்சம் கவலையாக இருந்தது,!

ஏனெனில். அவன் போர்க்கலைகள் தெரிந்தவன்,!சட்டென்று செயல்படுகிறவன், எனவே.

தட்டு. வெட்டு என்று எதையாவது படபடவென்று செய்து திகைக்க

வைத்துவிட்டு அவனிடம் இருந்து தப்பி ஓடுவது கடினம்,!

தப்பி ஓடுவது பற்றி. நளினி எண்ணமிடுகையிலேயே. “இவள் ஏதாவது தில்லு முல்லு செய்தால். பட்டென்று மண்டையிலேயே போடுவதற்குத் தயாராகத் தடிக் கம்புடன் இவளுக்குப் பின் புறமாக நில்லுங்கள், என்னப்பா. சீக்கிரமாகக் கட்டை அவிழ்க்கிறாயா? இவளது பேச்சு உண்மையா. பொய்யா என்று. இப்போது பார்த்துவிடலாம்,!” என்றான் தலைவன்,

எப்படித் தெரியும்? என்ன செய்யப் போகிறான்?

இவ்வளவு நேரம் பேசிய பாணியைக் கைவிட்டு. தடிக்கம்பு. மண்டையில் போடுவது என்றெல்லாம் சொல்கிறானே,!

அவசரப்பட்டு. அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று தீர்மானித்து. கட்டவிழ்த்த பிறகும். நளினி நாற்காலியில் இருந்து எழக்கூட இல்லை,!அப்படியே அமர்ந்து. ஒரே நிலையில் இருந்த கைகால்களைத் தளர விட்டபடி. கூட்டத் தலைவனைப் பார்த்தாள்,

“கெட்டிக்காரி,!அப்படியே இரு,!“ என்றுவிட்டு. ஓர் ஓரமாகக் கிடந்த சாக்குப் பையிலிருந்து. ஒரு செல்ஃபோனைத் தேடி எடுத்துவந்தான் அவன், “புவனேந்திரனின் நம்பரைப் போட்டுத் தருகிறேன், அவனை ஃபைலுடன் இங்கே வரச் சொல்லு,!”

உள்ஞ்ரத் திகைத்தபோதும் அதைக் காட்டிக் கொள்ளாமல். “எனக்காக அவர் வர மாட்டார் என்றேனே,!” என்றாள் நளினி. வருத்தப் பாவனையையே தொடர்ந்து,!

“அதையும்தான் பார்ப்போமே,!அவன் வந்தாலும். வராவிட்டாலும். அது  உனக்கு லாபமாகத்தான் முடியும்,!எங்கள் கருத்துப்படி. அவன் வந்தான் என்றால். நீ அவனோடு சேர்ந்து போகலாம்,!அப்படி அந்த ராஸ்கல் வராவிட்டால். நீ சொன்னது உண்மை என்று ஆகும்,!அப்போது. உன்னைக் கடத்தியதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு. நாங்களே உன்னைத் தனியாக அனுப்பி வைத்து விடுவோம்,!அதனால். எதற்கும். ஒரு முயற்சி செய்து பார்ப்பதில். உனக்கு என்ன பிரச்சினை. சொல்லு,!”

அவன் ஏதோ விட் அடித்துவிட்டாற்போல. எல்லோரும் சேர்ந்து சிரிக்கக் காரணம் புரிந்து. நளினிக்கு வாய் உலர்ந்தது,

அவளைப் பரலோகத்துக்கு அனுப்பி வைப்பது பற்றியல்லவா. அவர்களுடைய தலைவன் பேசுகிறான்,!அவர்களுக்குச் சிரிப்பு வராமல் என்ன செய்யும்?

இப்போது அவள் வகையாக மாட்டிக் கொண்டாளே,!

இவ்வளவு புத்தி இல்லாமலா. இவர்கள் இந்த மாதிரி அயோக்கியத்தனங்கள் எல்லாம் செய்ய முடியும்?

இப்போது ஃபோன் பண்ண மறுத்தால். அவள் சொன்னது அத்தனையும் பொய் என்று உடனேயேதெளிவாகிவிடும், அத[ற்காக வேறு. அவளை என்ன மாதிரிக் கொடுமைகள் செய்வார்களோ?

ஆனால். அந்தக் கொடுமைகளுக்குப் பயந்து ஃபோன் பண்ணினாலோ. புவனேந்திரன் நிச்சயம் வந்துவிடுவான்,!இந்த அரக்கர்கள் அவனை அழிக்காமல் விட மாட்டார்கள்,!

சட்டென ஒன்று அவள் மனதில் பட்டது,!

எப்படியும்;. அவளது சாவு  உறுதிதானே? அதைத்தானே. “அனுப்பி வைப்பதா”கச் சொல்லி அவர்கள் விலா வெடிக்கச் சிரித்தது,!

புவனன் வந்தால். அவனோடு,!அல்லது தனியாகவேனும் அவளைச் சாகடித்து விடுவது என்பது. இவர்களது முடிவு,!

இங்கே. இவர்கள் முடிவுதான் நடக்க முடியும்,!

எப்படியும் அவள் சாகத்தான் வேண்டும் என்றால். தனியாகச் சாவதே மேல் அல்லவா?

அதிலும். புவனனைக் காப்பதில் சாவது என்றால். அந்தச் சாவுக்கே பெருமைதான்,!

அவனோடு சேர்ந்து வாழ முடியாது போகிறதே என்று நெஞ்சை அடைத்துக்கொண்டு வரத்தான் செய்தது,!ஆனால். அதை நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்க. இது நேரம் அல்ல,!

சுருள முயன்ற முதுகுத் தண்டை நிமிர்த்தி அமர்ந்து. “என்னால் முடியாது,!உனக்குத் தேவை என்றால். நீயே. புவனனுக்கு ஃபோன் செய்துகொள்,!” என்றாள் அமர்த்தலாக,!

ஆனால். கொத்தாக அவளது கூந்தலைப் பிடித்துத் தூக்கி அவளை. அவன் நிறுத்திய விதத்தில். வலியால் நளினியின் கண்களில் நீர்

சுரந்தது,!

எட்டி உதைப்பதற்கு வழியின்றி. அந்தத் தலைவன் எச்சரிக்கையோடு நின்றான்,!மற்ற மூவரும்கூட. அவளைத் தாக்குவதற்குத் தயாராகவே இருந்தார்கள்,!

“கிண்டலாடீ? அவன் நம்ப மாட்டான் என்று. உனக்குத் தெரியாது? உன் குரல்  அவனுக்குக் கேட்கா விட்டால். நீ எங்கள் வசம் இருப்பதையே. அவன் நம்பப் போவதில்லை,!அதிலும் உயிரோடு இருக்கிறாய் என்று. நிச்சயமாக நம்ப மாட்டான்,!ஒரு மடத்தனத்தை. இரண்டாம் முறை செய்து ஏமாற. அவன் ஒன்றும் முட்டாள் அல்ல என்பது. எங்களுக்கும் தெரியும்,!”

கடவுளே,!என்னவோ. அவளே கேட்டால்தான் கவனமாகப் புவனனே ஃபைலை எடுத்து  வருவான் அது. இது என்று கதை விட்டானே,!கடைசியில். இதுவா விஷயம்?

ரதியைக் கொன்ற பிறகும். அவளைக் கொன்றுவிடப் போவதாக மிரட்டியே புவனனிடம் பல லட்சங்கள் பறித்தார்களே,!அப்போது. இருபத்தியொரு வயது இளை”னாக இருந்த புவனனும். ரதி உயிரோடு இருப்பதாக நம்பிப் பணத்தைக் கொடுத்து ஏமாந்தான்,!

ஆனால். இன்றையப் புவனனை அப்படி ஏமாற்ற முடியாது,!

தன்னை. இவர்கள் முன்பே கொல்லாததன் காரணம் நளினிக்கு இப்போது புரிந்தது,!நல்ல விதமாகப் பேசியதன் காரணமும்,!

இப்போது புவனனைப் பிடிப்பதற்கு. இவர்களுக்கு. அவளது குரல் தேவைப்படுகிறது,!அதாவது. அவனைப் பிடிக்கும்வரை. அவளது குரலுக்காகவேனும். அவளைக் கொல்ல மாட்டார்கள்,!

ஆனால். தன் உயிருக்கு உடனடி ஆபத்தில்லை என்பதை விடவும். இதில் புவனனைக் காப்பாற்ற ஒரு வழி கிடைத்ததை எண்ணியே. நளினிக்குப் பெரிதும் ஆறுதலாக இருந்தது,!

அவனுடன் பேச மாட்டேன் என்று. அவள் பிடிவாதமாக இருந்துவிட்டால். இவர்களால் புவனனை நெருங்க முடியாது,!

என்ன. சிலபல அடி உதைகள். சித்திரவதைகள் தாங்க வேண்டியிருக்கும்,!அவ்வளவுதானே? தாங்கிக் கொண்டால் போகிறது,!

எனவே. தலை நிமிரந்து. “என்ன ஆனாலும். புவனனுக்கு நான் ஃபோன் செய்யப் போவது இல்லை,!அவரை. இங்கே வரவழைக்கப் போவதும் இல்லை,!” என்றாள் அவள்,

அடி உதைகளை எதிர்பார்த்துதான் நளினி இதைச் சொன்னது,!

ஆனால். இந்தத் துறையில். தாங்கள் பழம் தின்று கொட்டை போட்டவர்கள் என்று. அவர்கள் மறுபடியும் அவளுக்கு நிருபித்தார்கள்,!

ஆத்திரத்தில் முகம் சிவக்க. “அவனை. நீ என்னடி வரவழைப்பது? இந்த ஃபோனில் உன் கதறலைக் கேட்டு. அவனே இங்கே ஓடி வரப் போகிறான்,!அவனுக்கு. நீ அழைப்பதைவிட. நீ உயிரோடு இருக்கிறாய் என்பதற்கான ஆதாரம்தான் தேவை,!உன் அலறலும். கதறலும். அதற்குப் போதும்,!” என்று அவளிடம் சொல்லிவிட்டுத் தன் கூட்டாளிகளைப் பார்த்தான். குழுத்தலைவன்,

பார்வையிலேயே. அவனது மனதை அறிந்தவர்கள் போல. இருவர். அவளது கரங்களை இறுகப் பற்றினார்கள்,!

“இவள் சாதாரண அடி உதைக்கெல்லாம். வாயைத் திறக்க மாட்டாள் என்று நினைக்கிறேன்,!ஆனால்
,” என்று ஒரு குருரத்துடன் அவளை நோக்கி. “நாங்கள் நாலு பேர்,! வக்கிரம் பிடித்த நாலு ஆண்கள்,!நீ ஒரு பெண்,!எங்களால் உன்னை என்னென்ன மாதிரிக் கேவலப்படுத்திக் கதற வைக்க முடியும் தெரியுமா?
................................................................................................

என்று அவன் மிரட்டுகையில்;. நளினிக்குச் சட்டென ரதியின் நினைவு வந்தது,!

“காட்டுப் பூனை போல அலறியடித்துக் கடித்துப் பிறாண்டி ஆர்ப்பாட்டம் “ செய்தாள் என்று ரதியைப் பற்றிச் சொன்னானே,!
பாவம்,!இப்படித்தானே. அவளையும் மிரட்டியிருப்பார்கள்,!

வெறும் மிரட்டலோடு விட்டார்களோ. அல்லது ....................................

இருபத்தியிரண்டு வயதில். தனக்கே வயிறு கலங்கும்போது. பாவம். உலகம் அறியாத பதினெட்டு வயதுச் சின்னப்பெண் ரதி எப்படி அரண்டு போயிருப்பாள்,!அதிலும் ஆசிரமத்தில் வளர்ந்த உலகம் தெரியாதவள்,!

பதறியடித்து கண்மண் தெரியாமல் ஓடி. சிக்கி. விடுபடத் துடித்து.

கடித்து. பிறாண்டி. ஒன்றும் பலனின்றி ...... கடவுளே,!என்ன பரிதாபம்,!

“ ...... ,அப்போது நீ; அலறுவதைக் கேட்டு. அந்தப் பயல் புவனன். அவனாக இங்கே ஓடோடி வருகிறானா. இல்லையா என்று நீயே பார்;,!” என்று. அவளை மேலும் அரள வைத்துவிட்டு. செல்லில் புவனேந்திரனின் செல் எண்களை அழுத்தினான். அந்தப் படுபாவி,

எதிர்ப்புறத்தில். புவனேந்திரன் ஃபோனை எடுத்திருக்க வேண்டும்,!

பேசுவது யார் என்றும் கேட்டிருக்க வேண்டும்,!

“எல்லாம் உன் பங்காளிதான். தம்பி,!உனக்குப் பிரியமான பொண்ணு. எங்களிடம் மாட்டிக் கொண்டிருக்கிறாள், அவள் இங்கே எங்களிடம் படுகிற கஷ;டம் என்ன என்று உனக்குத் தெரிய வேண்டாமா? செல்லைக் காதில் வைத்தபடி. அமைதியாக ஓர் ஐந்து நிமிஷங்கள் கேட்டுக் கொண்டிரு, அப்புறமாக. அவளைத் திரும்பப் பெறுவதற்காக நீ என்ன செய்ய வேண்டும் என்று. நான் உனக்குச் சொல்லுகிறேன்,!“ என்று அவனிடம் கூறிவிட்டு. நளினியிடம் திரும்பினான் அந்த அரக்கர் குழுத் தலைவன்,!

பதறக் கூடாது,!ரதியைப் போல நிலையிழப்பது. இவர்களுக்கு எக்காளமாக இருக்கும்,!

பூனை எலியைப் பிடித்துக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்வது போல. இந்த மாதிரி வக்கிரங்களுக்கு. அது உற்சாகமான பொழுதுபோக்காக இருக்கும்,!அதற்கு இடம்தராமல். முடிந்தவரை. இவர்களுக்கும் வலி. வேதனை உண்டாக்க வேண்டும்,!

கைகளை அசைக்க முடியாத நிலை,!ஆனால். எவனாவது அருகில் நெருங்கினால். காலால் எட்டி உதைத்து. அவன் ஒருவன் இடுப்பையாவது உடைத்து விடவேண்டும் என்று நளினி திட்டமிட்டபோது. “ஐந்து நிமிஷங்கள் அமைதியாகக் கேட்பது எதற்கு? நேரிலேயே பார்க்க. நான்தான் இங்கேயே வந்துவிட்டேனே,!” என்ற குரலில் பிரமித்துத் திரும்பிப் பார்த்தால். அங்கே. வாயில் அருகே புவனேந்திரன் நின்றிருந்தான்,

எல்லோருக்குமே பிரமிப்புதான்,!

ஆனால். “ஐயோ,!” என்று. ரதியைப் போலவே. அரண்டு

மிரண்டு. நிலையிழந்து போனாள் நளினி, ஈவு இரக்கமற்ற இந்தக் கொலைகாரர்களிடம். புவனேந்திரன் மாட்டிக்கொண்டான் என்பது மட்டும்தான் அவளுக்குப் புரிந்தது,!

ஓர் அசுரப் பலத்துடன். தன் கைகளைப் பற்றியிருந்தவர்களிடம் இருந்து. தன்னை விடுவித்துப்கொண்டு. ஓடியே போய். புவனேந்திரனை மறைத்தாற்போலக் கைகளை விரித்துக்கொண்டு அவன் முன்னே போய் நின்றாள், “அவரை ஒன்றும் செய்யாதே,! முதலில் என்னைக் கொன்றுவிட்டு. அவரிடம் போ,!ஐயோ. அதற்குள் நீங்கள் ஓடி விடுங்களேன்,!” என்று கதறிப் பதறினாள்,!

# அத்தியாயம் -17

இந்தப் பொல்லாத அரக்கர்களிடம் புவனேந்திரன் மாட்டிக்கொண்டுவிட்டான் என்பது  ஒன்று தவிர. நளினிக்கு வேறு எதுவுமே கண்ணிலோ கருத்திலோ படுவதாகவே இல்லை,!

அவளை அணைத்து. புவனேந்திரன் ஏதோ சொல்ல முயன்றதையும் கூட. அவளால் கவனிக்க முடியவில்லை,!

அறைக்குள் இருந்த நால்வரும். எந்த வினாடியில் புவனேந்திரன் மீது பாய்வார்களோ என்ற ஒரே பயத்தில் அவர்கள் மீதே பார்வையைப் பதித்தபடி. “நீங்கள் ஓடிப் போய்விடுங்கள்,! உங்களைக் கொல்வதுதான் இவர்களது முக்கியத் திட்டம்,!நான் இவர்களைச் சில நிமிஷங்கள்;. எப்படியாவது. தடுத்து நிறுத்துகிறேன், அதற்குள். நீங்கள் தப்பி ஓடி விடுங்கள். புவன்,! ப்ளீஸ்,!எனக்காகப் பாராதீர்கள்,!போங்கள்,!போங்கள்,! தயவுபண்ணிப் போங்களேன்,!” என்று. அவனது பிடியிலிருந்து விடுபடத் துடித்ததோடு. அவனைப் பின்புறமாகத் தள்ளவும் முயற்சித்தாள்,!

“ஷ;,!ஷ;. நளின்மா. கண்மணி,!கொஞ்சம் அமைதிப் படுத்திக்கொள்,!இனி ஒன்றும் பயமில்லை,!“ என்று புவனேந்திரன் சொன்னது. அவள் காதிகளில் விழவே இல்லை,!

ஆனால். அறையின் உள்ளே இருந்தவர்கள். கையில் அகப்பட்ட ஆயுதங்களை எடுத்துக்கொண்டு. அவனைத் தாக்குவதற்காக இன்னும் ஏன் ஓடி வரவில்லை?

மாறாக எல்லோரும். தடிக்கம்பை வைத்துக்கொண்டு இருந்தவன்கூட. அதையும் கீழே போட்டுவிட்டு. ஏன் கைகளை உயர்த்திக்கொண்டு நிற்க வேண்டும்?

ஏன்?

ஒன்றும் புரியாமல் அவள் திகைப்புடன் விழித்தபோது. அவளைத் தன்புறம் திருப்பி. லேசாக அணைத்தவாறு. வாயில் வழியிலிருந்து. ஒரு புறமாக ஒதுங்கி நின்றான் புவனேந்திரன்,

வழி கிடைத்ததும். போலீஸ் உடையில் நிறையப் பேர். அந்தக் குடிசைக்குள் செல்வதையும். வன்முறைக் கும்பலுக்கு விலங்கு

மாட்டுவதையும். விழி விரியப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்குக் கண் சிமிட்டக்கூடத் தோன்றவில்லை,!

அவ்வளவு பிரமிப்பு,!

இதெல்லாம் எப்படி நடந்தது?

இன்ன இடத்துக்கு. இப்படி வா என்று புவனனிடம். அந்தக் கொலைகாரன் சொல்லவே இல்லையே,!

புவனேந்திரனுடன். அவன் பேசி சில வினாடிகளுக்குள். இவன் இங்கே வந்தது எப்படிச் சாத்தியப்பட்டது? எப்படி முடிந்தது?

அத்தோடு. இத்தனை போலீஸ்காரர்கள் ஓசைப்படாமல். இங்கே எப்படி வந்தார்கள்?

நளினிக்குள் எத்தனையோ கேள்விகள்,!

ஆனால். புவனனுக்கு ஆபத்தில்லை என்பதே எல்லையற்ற ஆறுதலைத் தர. சூழ இருப்போரைப் பற்றிய நினைவே இல்லாமல். அவன் தோள் வளைவில் சாய்ந்தபடி நின்றாள்,

கடத்தல் கும்பல் நால்வரையும். கைது செய்து வெளியே கொண்டு வருகையில். போலீஸ் ஜீப் ஒன்று. உறுமிக்கொண்டு வந்து நின்றது,!

ஜீப்பைத் தூர நிறுத்திவிட்டு. காவலர்கள் எல்லோரும் சத்தமின்றி வந்து. அந்தப் பாழடைந்த வீட்டைச் சூழ்ந்திருக்கிறார்கள்,!கண்டபடி வளர்ந்திருந்த காட்டுச் செடி கொடிகளும். மரங்களும். அவர்கள் ஒளிந்து மறைந்து வர வழி வகுத்திருக்கின்றன,!

ஆக. ஒரு விஷயம் டூ போலீஸ்காரர்கள் எப்படி வந்தார்கள் என்பதுதெளிவாயிற்று,!

ஆனால். மற்றது?

அவளைக்கூட. எச்சரிக்கையோடு கைப்பற்றியதாக. அந்தக் கடத்தல் குழுத் தலைவன் சொன்னானே,!சக்திவேல். கண்ணன் போல யாரும் தன்னைப் பின் தொடர்ந்து. அவளும் பார்க்கவில்லையே,!

பின்னே எப்படி?

ஆனால். எதைப் பற்றியும் தீவிரமாகக் கேட்டறியும் ஆர்வம்கூட. அவளுக்கு வரவில்லை,!

கடந்த சில மணி நேரமாக அனுபவித்த மன உளைச்சலுக்குப் பிறகு. புவனனின் அருகாமை தவிர. வேறு எதையும் நினைக்கக்கூட. அவளுக்குப் பிடிக்கவில்லை,!தோன்றவுமில்லை,!

பேசாமல். அவனையும். அவளையும் தனியே விட்டுவிட்டு. எல்லோரும் இங்கிருந்து போய்விட்டால். எவ்வளவு நன்றாக இருக்கும்,!

ஆனால். அவளது மனநிலை புரியாமல். போலீஸ் அதிகாரி ஒருவர் அவர்கள் அருகே வந்தார்,!

“வாழ்த்துக்கள். புவனேந்திரன்,!ஐந்து ஆண்டுகள் அயராது பாடுபட்டு. இந்த வன்முறைக் கும்பலைப் பிடித்துவிட்டீர்கள்,!இனி. நிம்மதியாக இருங்கள்,!இவர்கள்தான் வருங்காலத் திருமதி புவனேந்திரனா? அதிருஷ;டக்காரர் நீங்கள்,!இப்போதே. உங்கள் மீது. உயிரை வைத்திருக்கிறார்களே,!அருமையான மணவாழ்வுக்கு. என் மனமார்ந்த வாழ்த்துக்கள்,!“ என்று முறுவலித்தார்,

அதேபோல. இன்னோர் அதிகாரியும் வந்து. ஆங்கிலத்தில் வாழ்த்துத் தெரிவித்தார், அவரும். “இனி நிம்மதியாக இருங்கள்” என்று. முன்னவரைப் போலவே சொன்னார்,

“இவர் குஜராத்தில் பெரிய அதிகாரி,!முதலிலிருந்து. இந்தக் குழுவைப் பிடிப்பதில் உதவி செய்து வருகிறவர்,!அந்தக் குழு சென்னைக்கு வந்ததில் இருந்து. இந்த அதிகாரியும் சேர்ந்து முழு மூச்சாக உதவி செய்தார்,!” என்று. அதிகாரிகள் இருவரையும் புவனேந்திரன் நளினிக்கு அறிமுகம் செய்து வைத்தான்,!

அவர்கள் மூவருமாகப் பேசியதைக் கவனிக்கையில். நளினிக்கு. இன்னொரு முடிச்சு அவிழ்ந்தது,!

புவனேந்திரன். அவ்வப்போது அவளிடம் சொல்லாமல் கொள்ளாமல் வெளியூர் சென்ற விவகாரம்,!

வேட்டை நாயாகத் துரத்தியதாக அந்த வில்லன் தலைவன் சொன்னானே. மோப்பம் பிடித்து. மோப்பம் பிடித்து. அவர்களைத் துரத்திப் பிடிக்கத்தான் சென்றிருக்கிறான்,!

“அவர்னளில் நாலு பேரை. நீங்கள்    உங்களால் அவர்கள் செத்ததாகச் சொன்னார்கள்  ……” என்றாள் அவள் மெல்லிய குரலில்,

யோசனையாகப் பார்த்துவிட்டு. குஜராத் அதிகாரி சொன்னார், “ஒரு வகையில். அவர்கள் சொன்னது நிஜம்,!ஆனால். அவர்களைச் சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவரவே. புவனேந்திரன் முயன்றார், தப்பிக்க முடியாதபோது. எட்டாம் மாடியிலிருந்து குதித்தும். சயனைட் கடித்தும். தங்களுக்குள்ளேயே சுட்டுக்கொண்டும். அவர்களாகவே செத்தார்கள்,!“ என்று விளக்கினார்,!

“எப்படியோ. பிரச்சினை சரியான விதமாக முடிந்தது,!இனி. இந்தச் சள்ளையெல்லாம் மறந்து சந்தோஷமாக இருங்கள்,!” என்று கூறி. இரு அதிகாரிகளும் விடை பெற்றுச் சென்றனர்,

புவனோடு காரில் திரும்பி வரும்போது. நளினி. தன் குழப்பத்தைச் சொன்னாள், “நீங்கள் எப்படி. என்னைத் தொடர்ந்து வந்தீர்கள். புவனன்? அவர்கள். வெகு எச்சரிக்கையோடு என்னைக் கடத்தியதாகச் சொன்னார்களே,!நீங்களே. சக்திவேல். கண்ணனையும் விலக்கி விட்டிருந்தீர்கள்,!பிறகெப்படி. உங்களுக்கு விஷயம் தெரிந்தது?” என்று விவரம் கேட்டாள்,

“வெளிப்படையான பாதுகாப்பைத்தான் நான் விலக்கியிருந்தேன்;மா, ஆனால். உன்னைப் பாதுகாப்பின்றி. வினாடி கூட. நான் விடவே இல்லை,!இவர்களை நான் விடாமல் தொடர்ந்ததால். பாதிப் பேரை அழித்தும் விட்டதால். இவர்கள் என்னை அழிக்க முயற்சிப்பார்கள் என்று. எனக்கு நிச்சயம்,! இவர்களின் வழி என்ன? “பிணைக் கைதி” பிடித்துக் காரியம் சாதிப்பதுதானே. கை வந்த கலை? இவர்களைப் பொறுத்த வரையில். இந்தப் பயம் எனக்கு எப்போதும் இருந்தது,!

“கோகுலை அனுப்பிவிட்டு ஒதுங்க முயன்றேனே. நினைவிருக்கிறதா? என் நெருக்கம். உனக்கு ஆபத்தாக முடியலாம் என்பதுதான். அப்போதே எனக்கு முக்கியக் காரணமாக இருந்தது,!

“பிறகு. நாம் பிரிவது என்று முடிவு செய்தேனே. அன்று. இந்தக் குழுவினர் சென்னைக்கு வந்துவிட்டதாக எனக்குத் தகவல் வந்திருந்தது,!உனக்குப் பாதுகாப்பை அதிகரிக்கலாம் என்று வந்தால். உன்னை ஆளையே காணோம்,!“ என்றவன். அவளது கையை

இறுகப் பற்றி. “அன்று என்னமாகக் கலங்கித் தவித்துப் போனேன். தெரியுமா?” என்றபோது. அவனது குரல் கரகரத்துக் கனத்தது,!

பற்றியிருந்த கையை. தன் மறு கரத்தால் அவள் அழுத்தச் சட்டென. அவளை இறுக அணைத்துக் கொண்டான் அவன்,

“புவன்,!” என்று அவன் காதுக்குள் கிசுகிசுத்தாள் நளினி,

“என்ன?”

“நாம் கொஞ்ச நேரம்

வந்து. இதையெல்லாம் தனியே இருந்து பேசுவோமா?”

அவளை விடுவித்துவிட்டு. டிரைவரிடம் “வீட்டுக்குப் போப்பா,!” என்றான் புவனேந்திரன்,

கூடவே. செல்லை எடுத்து நீட்ட. அதை வாங்கி. வீடு திரும்பச் சற்றுத் தாமதம் ஆகும் என்று தாயிடம் தெரிவித்தாள் நளினி,!

அவன் முறுவலிக்கவும். வாய்ச் சொற்கள் அவசியமே படாமல். ஒருவர் மனதை ஒருவர் சரியாக உணர்ந்து செயல்படுவதை. உள்ளுர வியப்புடன் உணர்ந்தாள் அவள்,!

புவனேந்திரனின் செல்லில் பேசுவதாகச் சொன்னபின். என்ன. எங்கே என்று. சகுந்தலா  எந்தக் கேள்வியும் கேட்கவில்லை,!

உயரமான சுற்று மதில். வாயில் காவலர்கள். நாய்கள். கிரில் அடைத்த சுற்று வராண்டா , காவலர் உடையையும். கிரில் அமைப்பையும் சற்று மாற்றிவிட்டால். பழைய காலத்து அரண்மனைதான்,!

இந்த மனநிலை எப்போதேனும் மாறக் கூடுமா?

கவனம் இருக்க வேண்டியதுதான், ஆனால்  ......

தனியறைக்குச் சென்றதும். “அப்புறம்?” என்று கேட்டாள் அவள்,

“அதை. அவ்வளவு தூரத்தில் இருந்து கேட்டால் எப்படிச் சொல்வது?” என்று கண்ணில் சிரிப்புடன் கேட்டான் புவனன்,

பிகு பண்ணாமல் புன்னகையோடு அருகில் வந்தவளை உட்கார வைத்துத் தானும் அருகமர்ந்து. விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தான்,

“ஆனால் உனக்கு. வரக்கூடிய ஆபத்து. அதற்குத் தேவையான பாதுகாப்பு பற்றிய முக்கியத்துவம் பற்றிச் சொன்னாலும் உனக்குப் புரியவில்லை,!அடிப்படை புரிந்தால்தானே. அதற்குமேல் விஷயத்தை விளக்கிப் புரிய வைக்க முடியும்? புரிந்துகொள்ளப் பிடிக்காததுதான் பெரும் அபாயமாக இருந்தது,!நெருங்கி வந்துவிட்ட கொடியவர்களிடம் இருந்து. உன்னைக் காப்பது பெரிய பிரச்சினையாகக் கண் முன்னே நின்றது,!அவர்கள் எப்பேர்ப்பட்ட கொடுமைக்காரர்கள் என்று நேரடியாக அறிந்திருந்ததால். பாதுகாப்பின்றி. உன்னை ஒரு வினாடிக் காலம் சும்மா விடவும் எனக்கு மனமில்லை,!எனவே. செக்யூரிட்டி நிறுவனமும். நானும் சேர்ந்து. அதற்கு ஒரு வழி கண்டுபிடித்தோம்,!

“உனக்குக் காவலாக. ஒருவரையோ. இருவரையோ மட்டுமாக வைக்கவில்லை,!அங்கங்கே ஆட்கள், ஒருவர் கண்ணுக்கு நீ மறைகிறபோது. செல்லில் அடுத்தவருக்குத் தகவல் போய்விடும், அங்கிருந்து. அடுத்த ஆள்,!அடுத்த வாகனம்,!தொடர்வதாகத் தோன்றாதபடியே. முன்னும் பின்னுமாகத் தொடர்ந்து பாதுகாத்தார்கள், ..................................................................”

“ஆனால். செலவு நிறைய ஆகியிருக்குமே,!”

அவளது முகத்தை ஏந்தி. அவன் சொன்னான், “எவ்வளவு ஆனாலும். அதைவிட. நீ முக்கியம் அல்லவா?”

விழிகளில் லேசாக நீர்த் திரையிட. “அப்புறம்?” என்று கேட்டாள் நளினி, “இந்தப் படையினர் இவ்வளவு கவனமாக இருந்ததால்தான். அந்தக் கடத்தல் கும்பலுக்கும். இவர்களைக் கண்டுகொள்ள முடியவில்லை போல,!“ என்றாள் அவள் வியப்புடன்,

“ஆனால். நாலே பேராகிவிட்டிருந்த அவர்களை. நம் ஆட்கள் கண்டுகொண்டனர், விஷயம் தெரிந்ததும். இன்னொரு திட்டம் போட்டோம்,!அவர்களைப் பிடித்து உள்ளே போடுவது மட்டும்தான். உன்னை நிரந்தரமாகப் பாதுகாக்கும் வழியாகத் தோன்றிற்று,! எனவே. உன்னைக் கடத்திச் செல்லும் அளவுக்கு. அவர்களுக்கு இடம் கொடுத்தோம், அதே சமயம். உனக்கு ஆபத்து நேர்ந்துவிடக் கூடாது என்பதற்காக. “முன்னைப் போல. நான் ஏமாற மாட்டேன்,!பிணை. கிணை என்று எனக்கு வேண்டிய யாரையும் பிடித்து வைத்துக்கொண்டு மிரட்டினால். கடைசிவரை என் ஆட்களே

என்னிடம் தொடர்பு கொண்டால் ஒழிய. நம்ப மாட்டேன்” என்று நான் சொன்னதாக. அவர்கள் காது கேட்கப் பேச வைத்தேன்,! கடத்தியதும். உடனே அறிந்து. அங்கங்கே ஒவ்வொரு திசையில் இருந்தும் ஆட்கள் சேர்ந்து. அங்கே வந்து சேர்ந்தோம்,!”

“அந்தக் கும்பலின் மனோபாவம் தெரிந்து செய்திருக்கிறீர்கள்,!” என்று மேலும் வியந்தாள் நளினி,!

“ பின்னே?” என்றான் அவன், “இந்த. சுமார் ஐந்தரை ஆண்டுகளாக. அவர்களைத் துரத்துவதுதானே. தொழிலை விடவும் என் முக்கிய வேலையாக இருந்தது,!துரத்திப் பிடித்து. ரதிக்குக் கடன் தீர்ப்பது,!அவளது மரணக் கடனைத் தீர்த்துவிட்டேன்,!ஆனால் ........ “ என்று வேதனையோடு பெருமூச்சு விட்டான் அவன்,

ரதியின் நினைவு,!

இதில். நளினி என்ன வகையில் ஆறுதல் சொல்ல முடியும்?

பரிதாபத்துக்குரிய அந்தச் சிறு பெண்ணை நினைக்கையில். அவளுக்கே பரிதாபமாகத்தான் இருந்தது,!

தனக்கு முன்னே புவனனை அறிந்தவள் என்பதே தோன்றவில்லை,!இப்படிப்பட்ட ஒருவனை மணந்தும். அந்த சுகத்தை அவ்வளவு சீக்கிரமாக இழந்தாளே. பாவம் என்றுதான் எண்ணினாள்,!

கூடவே. புவனேந்திரன் வேதனைப் படுவது பொறுக்க முடியாமல். அவன் முதுகை. ஆறுதலாக மெல்ல வருடிவிட்டாள் அவள்,

மீண்டும் ஒரு பெருமூச்சுடன். புவனனே தொடர்ந்து பேசினான், “என் குற்ற உணர்ச்சி,!அதுதான் தாங்க முடியவில்லை,!ஆசிரமத்தில் வளர்ந்த ஒரு சின்னப் பெண்,! என்னவோ அவளைச் சிறப்பாக வாழ வைப்பதாக எண்ணிக்கொண்டு. அவளை மணந்து. அவளது உயிரையே பலி கொடுத்துவிட்டேன், என்னை மணக்காமல் இருந்திருந்தால். இன்றைக்குக் கூட. எங்கோ அவள் உயிரோடு வாழ்ந்திருக்கக் கூடுமே என்று
அதுதான் மனதிற்கு மிகவும் வேதனையாக இருக்கிறது,!வாழ வேண்டிய ஒரு சின்னப் பெண்ணின் அகாலச் சாவுக்கு நான் காரணம் ஆனேனே,!” என்று. தன் மனதை மறையாமல் சொன்னான் புவனன்,

“ஐயோ. அது அப்படியில்லை. புவனன்,!” என்று தொடங்கி. கடத்தல் குழுத் தலைவன் கூறியதை. அப்படியே சொன்னாள் நளினி, “அவர்கள் செய்த கொலையை. ரதி பார்த்துவிட்டாள் என்று. அவளைக் கொல்வதற்காகத்தான். அவர்கள் அவளைக் கடத்திச் சென்றது,!அதன்படிச் செய்தும் விட்டார்கள்,!ஆனால். உங்களிடம் பணம் பறிப்பதே. பிறகு தோன்றிய ஐடியாதான், சரியாகச் சொல்வதானால். ரதியின் வாழ்வு எப்படியும் முடிந்திருக்கும்,!ஆனால். அவளது கடைசி நாட்களில். நீங்கள். அவளுக்குச் சொர்க்கத்தைக் கொடுத்திருக்கிறீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்,!” என்றுதெளிவாக விளக்கினாள்,

சற்று நேரம். புவனன் ஒன்றுமே பேசவில்லை,!

பிறகு. நளினியின் கைகளைத் தன் கரங்களில் எடுத்து. “என் கண்மணி
!” என்று. அந்தக் கைகளில் முகம் புதைத்து. அப்படியே அமர்ந்திருந்தான்,!

கைகளில் ஈரம் உணர்ந்தபோதும். என்ன சொல்வது என்று புரியாமல். நளினியும் அசையாமலே உட்கார்ந்திருந்தாள்,

உடலை நடுக்கிச் சென்ற ஒரு மிக நீண்ட பெருமூச்சின்பின். புவனன் மெல்ல நிமிர்ந்தான்,

“பிணக்கிடங்கில் ரதியின் முகத்தைப் பார்த்த பிறகு. இத்தனை ஆண்டுகளாக. ஒரு நாள்கூட. அதை நினையாமல் நான் தூங்கியது இல்லை. நளினிம்மா,!அதன் காரணம் நான். நான் என்று. என்னமாய்த் தவித்திருக்கிறேன்,!........................ அப்படியில்லை என்று தெரியும்போது. கடவுளே. எப்பேர்ப்பட்ட விடுதலை உணர்ச்சியை எனக்குத் தந்திருக்கிறாய். தெரியுமா?

வாழ வேண்டிய வயதில். ஒரு சின்னப் பெண் உயிரை இழந்தாளே என்று. இப்போதும் பரிதாபம்தான்,!ஆனால். அதன் காரணம் நான் இல்லை என்று அறியும்போது ................................அவளது கடைசி நாட்களைச் சந்தோஷமாகக் கழிக்க உதவினேன் என்பது. எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது. தெரியுமா? நளினி. நீ இன்று என்னை மீண்டும் முழு மனிதன் ஆக்கிவிட்டாய். கண்ணம்மா,!அதற்காக. உனக்கு நான் ஏதேனும் செய்தே ஆக வேண்டும்,!சொல்லு உனக்கு என்ன வேண்டும்? ஒன்றும் வேண்டாம் என்று சொல்லக் கூடாது,!ஏதாவது.

கட்டாயம் நீ கேட்டே ஆக வேண்டும்,!"

சில கணங்கள் மௌனமாக இருந்தவளுக்கு. வீட்டினுள் வரும்போது எண்ணியது நினைவு வந்தது,

அவன் முகத்தைப் பார்த்து. "விஷயமே வேறு என்று ஆனதால். இந்தப் பாதுகாப்புப் பிரமை. மாறக் கூடும் அல்லவா. புவனன்?" என்று கேட்டாள் அவள்,

"ஓ,!" என்று எழுந்தான் புவனேந்திரன்,

இரு முறை குறுக்கும் நெடுக்குமாக நடந்துவிட்டு. "இப்படி யோசி. நளின், அங்கங்கே ஆட்களைப் பிடித்துப் போய்ப் பணம் பறிப்பதாய்ப் பத்திரிகையில் படிக்கிறோம்தானே? இனிப் பயம் இல்லை என்று எல்லாவற்றையும் விட்டுவிட்டு. அதன் பிறகு. அந்த மாதிரியான நிலை நமக்கு நேர்ந்தால். எப்படி இருக்கும். சொல்லு,!" என்று கேட்டான் அவன்,!

கண்ணராவியாகத்தான் இருக்கும்,!ஆனால். இப்படிக் கூடவே வைத்துக்கொண்டு அலைவதும் ......அதுவும் கண்ணராவியாகத்தான் அவளுக்குத் தோன்றியது,!

நளினி பேசாமல் அமர்ந்திருக்கவும். மேலும் இருதரம் அறையை அளந்துவிட்டு. அவள் அருகே வந்து அமர்ந்தான் அவன்,!

"ஓகே,!உன் எண்ணமும் எனக்குப் புரிகிறது,!அதனால். ஒன்று செய்யலாம்,!வீடு. தொழில் இடங்களுக்குத் தேவையான அளவுக்கு மட்டும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்கட்டும்,!அத்தோடு. எலக்ட்ரானிக் கருவிகளையும் பொருத்திக் கொள்வோம்,!இவை போக. நன்கு பழக்கப்பட்ட நாய்கள் வாங்கித் தருகிறேன், எப்போதும். ஒன்றை அருகே வைத்துக் கொள்வோம்,!

இதுகூட வேண்டாம் என்று சொல்லிவிடாதேம்;மா,!ப்ளீஸ்,!" என்றான் புவனன் கெஞ்சுதலாக, !

தன்னை மீறிச் சிரிப்பு வந்தது நளினிக்கு,!

"ம்ம்ம் ......" என்று புன்னகையோடு அவள் யோசிக்க. "புரிகிறது,. புரிகிறது,!" என்று அவசரமாகக் குறுக்கிட்டான் அவன்,

"அந்த ஓர் அறைக்குள் மட்டும். நம்மைத் தவிர வேறு எந்தப் பிராணியையும். காவலுக்காகக் கூட. நானே விடமாட்டேன்.

கண்மணி,!இது உறுதி,!“ என்று அவன் சூளுரைக்க. அவள் முகம் செந்தாமரையாய்ச் சிவந்து மலர்ந்தது,!